# விகடகவியின் கவிதைகள்



ஆக்கம்

**மு.திருநாவுக்கரசு**

ஒய்வுநிலை மாவட்ட நீதிபதி

சிவமயம்

ச. சிவரமணி
28. குமாரசாமி வீதி
கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.



விகடகவியின் குல தெய்வம்

அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயில்

# விகடகவியின்
# கவிதைகள்

ஆக்கம்

மு.திருநாவுக்கரசு
ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி

தலைப்பு : விகடகவியின் கவிதைகள்

ஆசிரியர் : மு.திருநாவுக்கரசு

உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பு : முதற்பதிப்பு 2012

அச்சிட்டோர் : பாரதி பதிப்பகம்,
இல.430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**I.S.B.N** : 978-955-54268-0-0

# நூல் முகம்

நூல் பற்றிய எனது நுண்ணிய கருத்துக்களை பல்வேறு நூல் வெளியீட்டு அரங்குகளிலும் ஏனைய எனது அரங்குகளிலும் அவ்வப்போது நுணுக்கமாக விளக்கியுள்ளேன். இருப்பினும் எனது நூல் என்று வந்ததும், நான் கூறியவற்றைச் காலத்தின் கட்டாயம் கருதி, நூல் என்பதால் எதை எதைச் கூறியவற்றைக் செய்யலாம் என்பதை சுருக்கமாக இங்கு தர விரும்புகின்றேன்.

பெருமரத்தை வாள் கொண்டு அரிவதற்கு முன் அதன் கோணலை சீர் செய்ய மரம் அரிபவர் உபயோகிப்பது நூல். பேய் என்று ஒன்று இருப்பின் அப்பித்தினைப் போக்க மாந்திரீகர் கட்டு வதும் நூல். அந்தணக் குழந்தை ஒன்று அறிவாற்றல் பெற்றதும் தந்தை மகனுக்கு அணிவிப்பதும் நூல். இது பூநூல் எனப்படும்.

சேலை நெய்வதும் நூலால். சேலை சட்டையில் விழுந்த பொத்தலைப் போக்குவதும் நூல். தந்தை இறக்க தனையன் கிரியைகளை மேற்கொண்டு சுடுகாடு வரை முட்டியைச் சுமக்கும் வரை அணிந்து கொள்வதும், கொள்ளி வைத்த பின் அறுத்து எறிவதும் நூல்.

மணவறையில் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் “காப்பு” கட்டுவதும் நூல். கழுத்திலவன் மாங்கல்யத்தை இணைத்து கழுத் தில், முற்காலத்தில் இட்டதும் மஞ்சள் நூல். சிதறிக் கிடக்கும் பல்வேறு மலர்களை மாலையாக்குவதும் நூல். பல்வேறு பக்கமாகப் பரவிக் கிடக்கும் பக்கங்களை ஒழுங்கிணைத்து புத்தகமாகக் கட்டித்தருவதும் நூல்.

இப்படியாக நூலின் தத்துவம் பல்வேறாக விரிந்து செல் லும். இது பற்றியே ஒரு தனிநூலே ஆக்கிவிடலாம். இன்று நீங்கள் மேற்கொண்டு படிக்க இருப்பதும் ஓர் நூல். இந்நூலும் தமிழர் தம் பண்பாட்டில் விழுந்து விட்ட பொத்தல்களைப் பொத்தித் தமிழர் தம் மானத்தைக் காக்குமென நம்புகிறேன்.

இந்நூல் பற்றி ஓரிரண்டு வார்த்தைகள், எவரையும் எக் காரணம் கொண்டும் இகழ்வதோ அன்றிப் புகழ்வதோ இக் கவிதைத் தொகுப்பின் நோக்கமன்று. எவரும் தத்தமது விருப் பிற்கேற்ப தத்தமது மனநிலைக்கேற்ப, நடை, உடை, நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம் கொண்டு வாழச் சர்வ உரிமையும் உள்ளவர்கள். இது ஒரு ஜனநாயக நாடு என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. எனது நோக்கு எது சரி எது பிழை என்று இனம் காணுவதல்ல.

ஆனால் எப்படியெல்லாம் இருந்தோம் இன்று எப்படி எல் லாம் வாழ்கின்றோம் என்பதை கவிதை மூலமாக படம் பிடித்து, வரலாற்று அத்தியாய அல்பத்தில் இதையும் ஒட்டி விடுவது தான். இவை சரியா தவறா என்பதை உங்கள் மனச்சாட்சி மௌனமாக பதில் சொல்லட்டும்.

செய் நன்றி மறவாத தமிழன் என்று எனை நினைத்துக் கொள்ள "உதயன்" பத்திரிகையாளருக்கு குறிப்பாக அன்பர் திரு. வித்தியாதரன் அவர்கட்கும், உயர்திரு. கானமயில்நாதன் அவர்களுக்கும், இப்பாடல்களை உதயனில் கடந்த சில ஆண்டுகள் முன் பிரசுரித்தமைக்கு என் நன்றிகள். ஆக்கமும் ஊக்கமும் தராது உதயன் எனை உதறித்தள்ளி இருப்பின் இக் கவிகள் இந்நூல் வடிவம் பெற்றிருக்காது.

மேலும், ஆக்கபூர்வமாக என்னை அன்றாடம் பாராட்டி ஊக்குவித்த நெஞ்சில் நிறைந்த வாசகர்கட்கும், இடையிடையே எனைத் தூற்றிப் "போஸ்ற் காட்" போட்ட தூய உள்ளங்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகளை நவின்று விடைபெறுவதற்கு முன் பாடல்களைப் படித்து எழுத்துப்பிழைகளைத் திருத்திச் சீர்செய்து உதவிய எனது இனத்தவரும் இளைப்பாறிய ஆசிரியருமான உயர்திரு. வே. ஆறுப்பிள்ளை அவர்கட்கு என் இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் இங்கு எனது கவிதையில் வரும் பெயர்கள், ஊர்கள் யாவும் கற்பனையே அன்றி யாரையும் புண்படுத்துவன அல்ல எனக்காண்க.

இல.127 / 7 A, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

விகடகவி

# “யார் இந்த விகடகவி ”?

“அ” என்பது எழுத்திற்கெல்லாம் அணி செய்யும் முதல் எழுத்தே என்று பொய்யாமொழி பகன்ற வள்ளுவனார் கூறிச் சென்றார். “அ” எனும் எழுத்தில் பல ஊர்கள் இருந்த போதும், “அ” எனும் முதல் எழுத்தில் அமைந்த அளவெட்டி தனித்துவ மானதாகும். ஆதி சைவமும், அருந்தமிழும், அருங்கலைக ளொன்றாய் தன்னகத்தே கொண்ட தனி எழில் நிறைந்த ஊராம். தவில் இசையும் நாதஸ்வர தேவகானமும், பண்நிறை பக்திப் பாட்டும், அருள்வாக்குச் சொல்லும் அருளாளர்களும், இவ்வூரின் தனித்துவத்தை எடுத்துக்காட்டிய காலமொன்று உண்டு.

இதனை முன்னுரையாக மொழிந்தமைக்குக் காரணம் இந்த நூலின் ஆசிரியர் உயர்திரு. முத்தையா திருநாவுக்கரசு என்பாரும் வாழையடி வாழையாக வாழ்ந்து வந்ததும் இவ்வூரிலேயாகும். இதனைவரலாற்றில் குறித்திடவே எடுத்துச் சொன்னேன்.

இக்கட்டுரையை வரைந்து இந்நூலின் முகப்பில் சேர்க்க விளைந்தபோதும், தன்னடக்கம், விளம்பரத்தில் நாட்டமற்ற இவ் விகடகவி இதனை விரும்பாத காரணத்தால், கடல் கடந்து இந்த நூல் பலர் கையில் நடமாடினாலும், யார் இந்தக் கவிஞர் என ஓர் அறிமுகம் வேண்டும் என்ற என் விருப்பை வலியுறுத்தி பதிப்பகத்தார் துணைகொண்டு நூலின் இறுதியிலாவது இணைத் துக் கொண்டேன்.

நானும் இதே ஊரவன் என்பதாலும், இற்றைக்கு ஏறத்தாழ முப்பத்தொன்பது ஆண்டுகட்கு மேலாக, இக்கவி ஆசானோடு நெருங்கிப்பழகும் வாய்ப்பினைப் பெற்றவன் என்பதாலும் நான் மாணவனாக இவரிடம் தமிழ்கேட்டு, கவிதை கேட்டு என் உயர் வுக்குப் பலவகையில் உதவியதை எண்ணிப் பார்க்கின்றேன். அரசியல் மேடைகள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள், விவாத மேடைகள், சிறப்புரைகள் இன்னும் சொல்வதானால் சமயப் பேச்சுக்கள் என்று இவர் ஏறிய மேடைகளில் பார்வையாளராக இருந்து சுவைத்து மகிழ்ந்ததையெல்லாம் நினைவூட்டி இச்சிறு

அறிமுகத்தை எழுதலுற்றேன். இவருடன் பலரும் நெருங்கிப் பழகி இருப்பார்கள் என்று நான் கருதவில்லை. சட்ட அறிவும், நீதியின்பால் கொண்ட நாட்டத்தைவிட, தமிழன் மேல், தமிழர் தம் நல்வாழ்வின்மேல், தமிழர் தம்பண்பாட்டின் மேல் தணியாத ஆர்வத்தால் இவர் அவ்வப்போது எழுதியும், பாடியும் காட்டிய பாடல்கள் எண்ணிலடங்கா, வலம்புரி, உதயன் முதலாய பத்தி ரிகைகளில் எழுதிய பாடல்கள், குறிப்பாக வலம்புரி நடத்திய கவிதைப் போட்டியில் பெற்ற தங்கப்பதக்கம் இப்படியாய் ஓய்வு வேளைகளில் எழுதிய கவிதைகள் பல மறைந்துவிட்டமை, மன வேதனையைத் தந்து நிற்கின்றது.

எனினும் என்போன்றோர் இடைவிடாது எடுத்த முயற்சியின் பயனே, கிடைத்ததைக் கொண்டு ஆக்கிய இந்நூலாகும்.

இனி இவரது கவிதைகளைப் படித்து முடிக்கு முன் உங் களுக்குச் சிறிதாக இவரை அறிமுகம் செய்து விடுகிறேன்.

அளவெட்டி மத்தியில் அமைந்த இவரது குலதெய்வமாகிய கும்பளாவளை விநாயகரது தென்மேற்கு வீதி மூலையில், பிறந் தவர் விகடகவி, அக்காலத்து தமிழ் அறிஞரும் புராணப் பாடல் பயன் சொல்லும், ஆசாரசீலரான பரமுச்சட்டம்பியாரின் மூத்த புதல்வன் முத்தையா என்ஜினியருக்கும் செல்லாச்சி அம்மை யாருக்கும் மூத்த புதல்வனாக பிறந்தவர் இக்கவிஞர்.

தன் ஆரம்பக்கல்வியை அளவெட்டி சதானந்த வித்தியா சாலையிலும், பின் அருணோதயக் கல்லூரியிலும் பயின்ற பின், இளமைப்பருவத்திலேயே வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரியில் சேர்ந்து இலண்டன் ஏஃஎல் வரைபடித்துவிட்டு சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று சட்டத்தரணியாகி, (41) வருடங் களை நீதித்துறையில் செலவிட்டவர். இதில் பன்னிரண்டு ஆண்டுகளை நீதவானாகி பின் மாவட்ட நீதிபதியாகி ஓய்வு பெற்றவர். இவர் ஒரு ஓய்வூதியர்.

தனது 13 ஆவது வயதில் அளவெட்டி சைவவாலிப சங்கத் தாரால் நடத்தப்பட்ட எழுந்தமான பேச்சுப்போட்டியில், அமரர் வி.பி. அவர்களால் வியந்துரைக்கப்பட்டு முதல் பரிசை பெற்று

இவரது மேடைப்பிரவேசம் ஆரம்பமானது. தன்னை ஆளாக்கிய வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியையும், தமிழ் ஆசான் விநாயக மூர்த்தியையும் இன்றுவரை எண்ணி எண்ணி பெருமைப்படுவது இவர் பண்பாட்டைக் காட்டுகின்றது. வகுப்பறையில் எழுதும் விகடகவிகள், ஆசிரியர்குழாம் தங்கும் (Staff Room) அறை வரை எடுத்துச் சென்று அரங்கேற்றுவார் ஆசான் விநாயகமூர்த்தி.

கொஞ்சுதமிழில் குழந்தைக் கவிஞன் எழுதிய பாடல்கள் பலரையும் கவர்ந்து நிற்கும் அவை காற்றோடு மறைந்து விட்ட கவிதைகள். இவையே பாடசாலையில் "புலவர்" எனும் புனை பெயரையும் தேடித் தந்தது எனில் மிகையாகாது.

பாடசாலை நாட்களில் இவர் பாடி அரங்கேறிய பாடல்கள் இன்றைய கவிதைகளை விட சுவைமிக்கவை என நினைவூட்டுவார். இவர் ஒருமுறை கூறிய அக்காலக் குழந்தைக் கவிதையை சுவைத்து குறித்து வைத்தேன். உவமைக்கு ஒன்றைக் காட்டுகின்றேன். தனது தமிழ் ஆசிரியரை வியந்து (15) வயதில் பாடியதைப் பாருங்கள் என்னே கவியின் சுவை.

பண்பாளன் பழகுவதற்குப் பாகுபோல்வான்
அன்புளான் அடக்கம் மிக்கான் அரவணைப்பில்
அன்னைபோல்வான் அருந்தமிழின் ஆழத்தைக்
கண்டானைக் காணவைத்த கடவுளுக்கே எனது நன்றி.

இதைச்சுவைத்த அப்போதைய தமிழ் ஆசான் விநாயக மூர்த்தி, தினம் ஒரு தமிழ்நூல் தந்து கம்பனையும், ஔவையையும், நாமக்கல்லாரையும், கவிமணி தேசிக விநாயகனை பாரதி தாசன் போன்றோரை அறிமுகம் செய்து வைத்தமை தான் பெற்ற பேறாகக் கருதுபவர் விகடகவி.

நீண்டு விடக்கூடாது என்பது - நிபந்தனை. ஆதலால் சுருக்கி விடுகின்றேன். சட்டக்கல்லூரி (04) ஆண்டும் பெற்ற நான்கு

தங்கப் பதக்கங்கள், யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்பு மன்றம் தந்த தங்கப்பதக்கம், அளவையூர் தந்த பதக்கம் இப்படி அனைத்தையும் ஓர் கோர்வையாக்கி தந்த தன் தந்தையை இன்னும் பக்தியுடன் நினைவுகூருகின்றார். வாழ்வில் மறக்க முடியாத நினைவு என நான் வினவியபோது - தந்தையான புகழ் பூத்த நீர்ப்பாசன என்ஜினியர் முத்தையா 1955களில் காடாக இருந்த வன்னிக் காட்டில் "வவுனிக்குளம்" எனும் குளத்தை இரவு பகலாகக் கட்டிக் கொண்டிருக்கையில், தானும் தனது சகோதரர் இருவரும், குளக்கட்டில் வேர்கள் பதிந்து விடாமல் ஓடி ஓடி வேர்களை பொறுக்கப் பணித்த தன் தந்தையார், "முத்தையன் கட்டிய குளத்தில் வெடிப்பு வரக்கூடாதடா!" என விகடமாய் சொல்லி தங்களிடம் வேலை வாங்கியதை இன்னும் நினைவு கூருவார். வவுனிக்குளம் உள்ள மட்டும் அவர் நாமம் வாழும்.

தந்தையும் தாயும் செய்த தொண்டின் மகிமையே, அவர் பெற்ற குடும்பத்தின் சீரான வாழ்வுக்கு அடித்தளம் என்பது அவரது நம்பிக்கை - நல்ல மனிதர்களுக்குப் பின்னே நாடறியா நல்லவள் இருப்பது போல சங்கீத ஆசிரியை மங்கையற்கரசியின் மாண்பும், இறைபக்தியும் விருந்தோம்பலும், கடமையும் கண்ணியமும், மூன்று புத்திரரைப் பெற்று மூவரையுமே ஆளாக்கி இருவரை டாக்டர்களாகவும் ஒருவரை என்ஜினியராக்கியும், பெருமை அடையச் செய்துள்ளது - இதுபற்றி அதிகம் பெருமைப்படாத விகடகவி "எல்லாப் பெருமையும் இறைவனுக்கே" "என் செயல் ஆவது யாதொன்றுமில்லை" என்று கூறிவிடுவார் - முடிவுரையாக - இவர்தம் சகோதரர் இருவர், சகோதரி ஒருவர், சகோதரர்களில் ஒருவர் டாக்டர் இராசரத்தினம், மற்றையவர் நீர்ப்பாசன என்ஜினியர் பாலசுந்தரம், சகோதரி புவனேஸ்வரி, டாக்டர் கோபாலசுந்தரத்தை திருமணம் செய்துள்ளார். சகோதரர்கள் சகோதரி மூவரும் சீராக வாழ்வது சிறப்பினை நல்கி நிற்கின்றது.

தந்தை மகற்காற்றும் உதவி - மகன் தந்தைக்காற்றும் உதவி - மற்றும் "பெண்ணின் பெரும்தக்கயாவுள என்ற குறட் பாக்களுக்கு உவமையே விகடகவியின் குடும்பச் சிறப்பென, இந்நூல் ஆசானை முன்நிறுத்தி விடைபெறுகின்றேன்.

அளவையூர் வை.பாலகிருஷ்ணன் *M. A*

# “சமூக நீதியின் குரலென ஒலிக்கும் விகடகவி ”?

தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வென்றெடுப்பதற்குச் சாத்வீக வழிப் போராட்டங்களை நடத்த வேண்டும் என்று தந்தை செல்வா தலைமையிலான தமிழரசுக் கட்சி முடிவெடுத்த காலம் அது. 1956 ஆம் ஆண்டு என்று ஞாபகம். சித் தங்கேணியில் பிள்ளையார் கோவிலின் பரந்து விரிந்த கிழக்கு வீதியில் தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டம். (அப்போதெல் லாம் அந்தக் கூட்டங்களுக்குச் சென்று சொற்பொழிவுகளைக் கேட்பதில் எங்களைப் போன்ற இளைஞர்களுக்குக் கொள்ளை ஆர்வம், ஆசை.)

அந்தக் கூட்ட மேடையில் கட்சி வேட்பாளர் மற்றும் மூத்த அரசியல் பிரமுகர்களுடன் இரண்டு இளம் முழக்கப் பேச்சா ளர்கள். இருவரும் பட்டு வேட்டி, உத்தரியம் அணிந்து பொலி வுடன் மேடையில் அமர்ந்திருந்தனர். என்னோடு வந்திருந்த இளைஞர் குழாம் மேடையில் இருப்போர் யார், யார் என்று பெயர் குறிப்பிட்டு, அவர்களின் பேச்சு முடிந்த பின்னரே கூட் டத்தை விட்டு வீடு திரும்புவது என்று முடிவு செய்தோம்.

இந்த இளம் பேச்சாளர்களில் ஒருவர் உதயன் சஞ்சீவிப் பத்திரிகைகள் மூலம் “விகடகவி” என்று அறியப்பட்டுவரும் முன்னாள் மாவட்ட நீதிபதியும் இந்நூலாசிரியருமான அள வெட்டியூர் முத்தையா திருநாவுக்கரசு. அடுத்தவர் கரிகாலன் என்று அறியப்பட்ட க. நவரத்தினம். அவரும் பின்னர் ஒரு சட்டத்தரணியானார். வெளிநாடு சென்றுவிட்டார்.

பட்டு வேட்டியும் உத்தரியமும் அணிந்து தமிழரின் அரசி யல் நிலையையும் தமிழரசுக் கட்சியை ஏன் நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்றும் அடுக்குமொழியில் முழங்கிய வேளை கண்ட அவரை, மீண்டும் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மாவட்ட நீதிபதியாக மாற்றலாகி வந்த பின்னர் உதயன் அலுவலகத்தில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது.

யாழ்ப்பாணத்தின் சூழ்நிலை குறித்து துலாம்பரமாகவும் விளக்கமாகவும் அறிவது அவரின் விஜயத்தின் நோக்கம்.

அவரது பேச்சில் சிரிப்புடன் அடிக்கடி விகடமும் வந்து விழுந்தது. சில மாதங்களின் பின்னர், தனது ஓய்வு நேரத்தில் எழுதிய கவிதைகளுடன் வந்தார். சமூகச் சீர்கேடுகள், சமூகக் கொடுமைகள் சமூக நீதிகளை விகட நயத்துடன் வலியுறுத்து வனவாய் அவை அமைந்திருந்தன. நீதிபதி என்பதால் "விகட கவி" என்ற புனைப்பெயரை வழங்கித் தொடர்ந்து எழுதச் சொன்னேன்.

பின்னாளில் உதயன் ஆசிரியராகப் பணியாற்றிய திரு. ந. வித்தியாதரன் சஞ்சீவியின் பொறுப்பாசிரியராக இருந்த காலம் அது. சில காட்டமான கவிதைகளுடன் என்னிடம் வந்தார். சற்றுக் காரசாரமாக இருந்தன. வித்தியிடம் அனுப்பினேன். இளைஞர் சமுதாயத்துக்குத் தேவையானவை என்று காரணம் காட்டி வழமை போன்று வாதாடினார் அவர். நானும் ஏற்றுக்கொண்டேன்.

அதன் பின்னர் விகடகவிக்கு உதயன், சஞ்சீவி பத்தி ரிகைகள் அகலமேடை அமைத்துக் கொடுத்தன. ஆஸ்தானக் கவிஞரா னார். சமூகக்கேடு ஒன்று வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று மனதில் தோன்றினால், அன்று இரவே தொலைபேசியில் பேசுவேன். கவிதைகள் கைக்கு வந்து சேர்ந்துவிடும். நீதிபதி யாகப் பதவி வகித்தால் சில இடங்களில் காரம் குறைந்திருக்கும். சிறுமாற்றம் செய்து பத்திரிகையில் வெளியாகிவிடும், கோபிக்க மாட்டார்.

கவிதைகள் சமூகத்தின் கண்ணாடிகளாக இருக்க வேண் டும். விகடகவியின் கவிதைகள் அந்த இலக்கை நகைச்சுவை கலந்து நறுக்காகக் கூறும். அவரிடம் இயற்கையாகக் குடி கொண்ட இத்தகைய கவிவளம் ஓய்வு காலமான இப்போது மேலும் பெருகட்டும். தமிழ்ச் சாதியின் சமுதாயச் சீர்கேடுகளைத் தொடர்ந்து கவிதை வாள் கொண்டு அரியட்டும்.

என்றும் அன்புடன்
ம.வ.கானமயில்நாதன் (வட்டூர் கானம்)
பிரதம ஆசிரியர் உதயன்.

# வாழ்த்துக் கவி

1. அசை தளை சீர்க ளெல்லாம்
   ஆவிபோம் நிலையி லின்று
வசைபெறு காலந்தன்னில்
   வந்தனை கவிதை மேடை
விசையுறு "கிறிக்கெற்" பந்து
   விக்கெட்டை வீழ்த்தல் போல
நசையறு கவிதை சொல்வாய்
   நானுன்னை வாழத்துவேனே!

2. பாட்டெனில் பரந்து செல்லும்
   பண் ஓசை வேண்டு மென்று
கேட்டதோர் காலம் உண்டு
   கிஞ்சிற்றும் அவையின் றில்லை
"நீட்டோலை" தனிலே இன்று
   நீசொல்லும் கவிதை கண்டு
வீட்டிலே சிரிப்புப் பொங்கும்
   விகடத்தால் மகிழ்விப் பாயே!

3. நாட்டிலே நடக்கும் தீய
   நாசங்கள் நீங்கும் வண்ணம்
பூட்டிய வில்லி னின்றும்
   புறப்பட்ட பாணம்போல் நீ

தீட்டிய கவிதை யாவும்
திசைசெயலாம் பரவும் வண்ணம்
பாட்டிலே "பகிடி" சொல்லும்
பான்மை வேறெவருக்குண்டு?

4. பட்டி மண்டப மென்றாலும்
பாலரின் அரங் கென்றாலும்
மட்டிலா மகிழ்ச்சி பொங்க
மனிதர்கள் மயக்கம் தீரக்
கொட்டியே விகடந் தன்னைக்
குலுங்கவே சிரிக்க வைப்பாய்
பட்டிலே பவுணைச் சுற்றிப்
பரிமாறும் கவிஞன் நீயே!

5. பேச்சிலும் சிரிப்பைக் காட்டப்
பேணரும் "பகிடி" சொல்லி
ஆச்சரி யத்தா லெங்கள்
அகமெலாம் மகிழச் செய்வாய்
வீச்சுள பாட்டு யாவும்
விகடமே தொக்கு நிற்கும்
நீச்சலிட் டிலக்கியத்தில்
நீ கரை யேறுவாயே!

6. சிரிப்பிலா மனிதர் யாரும்
செகத்தினி லுண்டேல் அன்னார்
நரிப் பிறப்பென்று தானே
நானிலம் சொல்லும் ஐயா

*விரித்துநீ "விளாசித்" தள்ளும்*
*விகடநற் பாடல் ஈழச்*
*சரித்திரம் தனிலே நின்று*
*சாட்சியம் சொல்ல வாழ்வாய்!*

7. *முந்திப்போய் "பேப்பர்" வாங்கி*
*முதலிலே பலரும் பார்க்கும்*
*சிந்திக்க வைக்கும் நல்ல*
*சிரிப்பெலாம் கவிதை யாக்கி(ச்)*
*சந்தத்தால் மிளிரச் செய்யும்*
*சாகசம் தெரியப் பெற்றோய்*
*நித்திக்கத் தெரியா நெஞ்சோய்*
*நீடூழி காலம் வாழ்க!*

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# நகைச்சுவைத் தேனில் விளைந்த பாடல்கள்

உலக நிலையையும் உலகில் நிகழும்
மாற்றத்தினையும் உற்று நோக்கி
நலமுறு தேனில் கவிதையாக்கி
நல்கும் விகட கவியின் பாடலை
பலமுறை படித்து மகிழ்ந்தேன் இரசித்தேன்
அற்புதம் அற்புதம் அனைத்திலும் தனித்துவம்
அவர்க்கெனச் சிந்தனை அவர்க்கென எழில்நடை
அவர்க்கென நகைச்சுவை இயல்பினைக் கொண்டவர்
சிரிக்கச் செய்தே செய்தியைக் கூறும்
அவர்தம் கவிதை நூலாய் வருதல்
பலர்க்கும் பயன் தரும் அவர் பணி வாழ்கவே

புலவர் ம.பார்வதிநாதசிவம்

## அளவை திரு. மு. திருநாவுக்கரசு அவர்கள் இயற்றிய 'விகடகவி நூல்'

# வாழ்த்து

*நேரிசை வெண்பா*

01. நாவுக்கரசனுமாய் நன்னீதி வானோய்ந்த
பாவுக் கொரு திருநா வுக்கரசன் மேவிய சீர்
செந்தமிழ் நன்கமைந்து சேர விகடகவி
சிந்தனை நூல் தந்தான் சிறந்து

02. செய்த பயிர்பயனைத் தேடித் தரு நிலத்தை
எய்த வழிகாட்டு வானாகி - பெய்யும்
மழை போல் விகடகவி மாலைநூல் தந்தான்
கிளையோடு வாழ்க கிளர்ந்து

அன்பகலாத புலவர்மணி வை.க.சிற்றம்பலம்

# நீடூழி வாழ்க நிலைத்து

எழுத்து, பேச்சு, கவிதை என்பன மூன்றும் வெவ்வேறு தன்மையுடையன. எழுத்தின் போது மூளை கண்காணித்துச் செயற்படுகின்றது. கவிதை உள்ளத்துடிப்பின் உதிரத்தால் எழுதப்படுகின்றது. பேச்சாற்றலோ நேரடியாகவே மக்களை வாய்ச் சொல்லால் கவர்ந்து விடுகின்றது.

இத்தகைய மூன்றும் ஒருசேர ஒருவரிடம் அமைவது அரிது எனலாம். திரு. மு. திருநாவுக்கரசு அவர்களோ இம் மூன்றும் கைவரப் பெற்றவர். அத்தோடு தனது விகடத்தால் கவிதை புனைந்து பாமரரையும், படித்தவர்களையும், ஒரு சேரக் கவர்ந்து வருகின்றார். சாதனை என்பது எல்லோராலும் சாதிக்க முடியாத தொன்று. தனது, பேச்சால், எழுத்தால் விகடத்துணுக்கால் கவிதையால் சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதால், இவரை ஒரு சாதனையாளர் என்று பாராட்டுவதற்குக் கிடைத்த வாய்ப் பினுக்கு நன்றி கூறுகின்றேன்.

எவனொருவன் தான் எதுவாக வேண்டும் என முடிவு எடுத்து அதை நோக்கிச் செல்கிறானோ, அவன் அதை அடைவதை எவராலும் தடுக்க முடியாது.

வாசகி திருமதி சிவமலர் சுப்பிரமணியம்

# வாசகர் வாய்மொழி

திருநாவான் செந்தமிழில் தேன்சேர்ப்பான் கல்விப்பெருந்
தருவாவான் பெற்ற கல்வி பகிர்ந்தளிக்கும் பண்பாவான்
குருவாவான் குலம் பிழைத்து மறஞ்சென்றோர்க் கறமுரைக்கும்
திருவாவான் நாவுக்கரசனவன் விகடகவி

செல்லையா கணபதிப்பிள்ளை,
சட்டத்தரணி

உறவினர் நல்ல உவப்பாக கவிதை சொல்லும்
மறுவிலாத் தமிழ் மனத்தினில் கொண்டவர்
விகட மா கவி விரும்பி இயம்பினார்
அக மிக மகிழ்ந்து ஆசிகள் நல்கினோம்

ஜெயவர்மன்,
குடும்பம்

அச்சமின்றி நாட்டை அடித்து மிக திருத்தும்
மெச்சத் தகுதி மிகுமேலோய் - பச்சைக் காறேறி
பகலவன் போல் பவனி வந்து தினம்
அகமகிழ ஆயிரமாய்க் கவிதை தா -

ஜொனி மதுரநாயகம்,
தம் சட்டத்தரணி

நீதிமன்ற வளாகம்,
யாழ்ப்பாணம்,
01.01..2012

# பூக்கொத்தாய்ப் போற்றும் பொலிந்து

சிரிப்பூட்டிச் சிந்தனையைச் சீராக்கி வைக்கும்
திருவார் விகடகவிப் பேரோன் - உருவாக்கும்
பாக்கொத்தைப் பாருலகம் பாராட்டிப் பண்பாட்டின்
பூக்கொத்தாய்ப் போற்றும் பொலிந்து

இகமதிலே இனிய சமுதாயம் ஒன்று
எழுந்திடவே வேண்டுமெனும் எண்ணம் முந்த
நகைச்சுவை சேர்த் தெழுங்கருத்தும் பிழிவைத் தேனாய்
நற்பாகாய்க் கற்கண்டாய் நயக்கும் பாவாய்
அகக்கனிவும் முகப்பொலிவும் அழகாய்ச் சேரும்
ஆளுமையோ டவனியுளார்க் களிக்கும் எங்கள்
விகடகவித் தனிக் கவிஞ! விதந்தே சொல்வேன்
விளைந்தோங்கும் உன்னெண்ணம்: வியக்கும் பூமி!

சி.சிவசரவணபவன் M. A
(சிற்பி - யாழ் வாசி)

கந்தரோடை,
சுன்னாகம்.



# கடவுள் வாழ்த்து

1. அளவையம்பதி கும்பளாவளைப்பதி
   எழில் பொழில் நிறை இணையிலாக் கோயிலில்
வளம் பல சூழ் திரு வண்ணமா கோபுர
   வாசலில் வந்து வானவர் வணங்குவர்
நிழல்தரு சோலையும் நீள்சுனைத் தடாகமும்
   சூழ்திரு ஆலய சூழலில் நின்றுநான்
களங்கமில் பக்தியால் கரங்கள் கூப்பிடக்
   கானமா மழையெனும் கருணை பொழிந்திட
உளமது மகிழ்ந்திட உவகை பூத்திட
   உள்ளக் கமலத்தில் உறையும் கணபதி
வழங்கிய விகட வித்தகன் கவிதனை
   வைத்தவன் பாதத்தில் வாழ்த்தி வணங்குவாம்.

2. அன்னை பராசக்தி தாயே ஆயிரம் வணக்கம் அம்மா
பிள்ளை சிவனார் தன்னைப் பிரிந்து நான் மறப்பதுண்டோ?
வண்ணமா மயிலதேறும் வானவர்கோனே போற்றி
எண்ணியே வயிரவர் தன் இணையடி போற்றுகின்றேன்.

3. ஐங்கரன் இவனடி அபயம் என்றிடின்
சங்கடம் வாழ்வில் சார்வதில்லையாம்
பங்கமில் வாழ்வொடு பரகதி எய்திடில்
இங்கிவன் பாதத்தை இறைஞ்சி வேண்டுமின்.

4. பற்றுடன் இவனடி பணியும் அன்பர்க்கு
கற்றிடா ஞானமும் கடிதினில் நண்ணுமாம்
உற்ற ஊழ்வினை உபாதைகள் விலகிட
மற்றுள் கவலைகள் மறைந்து மாயுமாம்.

## தமிழ்த்தாய் வணக்கம்

5. முட்டியே முகிலைத் தாண்ட
மூவுலகும் போற்றிடும் என்
கட்டிக் கரும்பனையசுவை
கன்னித் தமிழ்த் தாயை
இட்டமுடன் வீழ்ந்து அவள்தன்
இணையடியை நான் பணிய
பட்சம் மிக மேவிடவே
பரிந்தளித்த கவிதைகளை
மட்டற்ற மகிழ்ச்சி பொங்க
மலராக்கித் தருகின்றேன்.

6. ஐம்பெரும் காப்பியங்கள் அணிகலனாகக் கொண்டாய்
எம்பெரு வள்ளுவன்தன் குறளினை முடியாய்க்
கொண்டாய்
கம்பனின் கவித்துவத்தில் களி நடம்புரிந்து நின்றாய்.
நும்திரு பாதம் தன்னில் என்கவிப் பூவாய்க் கொள்வாய்

7. இரு நிலத்தில் இளமையுடன் இருக்கின்ற தமிழ்த்தாயே
பெரும் புலவர் கவிஞர் பலர் அணிகலன்கள் பலதந்தார்
அரும்புலமை தந்தென்னை வளர்த்த பெரும் தாயே நான்
தரும் கவிதைதனை ஏற்றிடத் தாள் பணிந்தே
வேண்டுகிறேன்.

## தந்தை

8. பொறியியல் வல்ல ஞானி
போற்றிடும் முத்தையன் கட்டை
நெறி தவறாது கட்டி வைத்த
நேர்மை சேர் தியாக சீலன்
அறிந்தவர் சிலரே அன்னார் தனை
அவர் பெயர் முத்தையாவாம்
அறிஞனாம் கவிபுனைய வல்லான்
ஆன்மீகத்தில் திளைக்கும் ஞானி
வறியவர்க்கு உதவி நின்று
வாழ்வித்த வள்ளல் உன்தன்
சிறியவனான மைந்தன் இன்று
சிறு கவிதை நூல் ஆக்கித் தந்தேன்.

9. வவுனிக் குளத்தை நீயும்
வண்ணமாய்க் கட்டும் போது
அகவையோ பதின் ஐந்தில் நானும்
அருகிருந்து பார்க்க வைத்தாய்
தகைமை சால் பெரியோய் உன்தன்
தலைமையில் இக்குளத்தை
மிகப் பெரும் எந்திரிகள் கூடி
மேலுமுனக்கு உதவி நிற்க
அகத்தினில் உவகை பொங்க
ஆக்கினாய் மறப்பேனோ யான்?

## தாய்

10. அன்பொடு உச்சி மோந்து
அருந் தமிழையே பாலாய் ஊட்டி
கண்ணென என்னைக் காத்த
கண்ணியம் மிக்க தாயே
பண்பு சேர் தமிழர் வாழ்வை
பக்குவமாய் வாழ்ந்து காட்டி
மண்ணினில் தமிழர் பண்பை
மறவாதே என்று சொன்ன
வண்ணமார் செல்லாச்சி அம்மா
வையகத்திற் குவமை நீயே
எண்ணியே உன் விருப்பையெல்லாம்
இக் கவிநூலாய் தந்தேன்.

11. நொந்து சுமந்து பெற்று
நோன்புகள் பலவும் பூண்டு
ஐந்து கரத் தண்ணலையே
அடிமனதில் கொண்டிருந்து
செந்தமிழைப் பாலாய் ஊட்டி
சீராட்டி வளர்த்த தாயே
உன்தன் பெயர் செல்லாச்சியம்மா
உவமையிலா எனது தெய்வம்
எந்தன் மனம் உன்னை எண்ணி
எப்போதும் வணங்குதம்மா
மைந்தன் உன் பொன்னடிக்கே
மலரிதனைச் சமர்ப்பிக்கின்றேன்.

## தமிழாசான்

11அ. அகவையோ பதினான் கெனக்கு அப்போ
அருணோதயக் கல்லூரி விட்டகன்று நானும்
புகழ் பூத்த யாழ்ப்பாணக் கல்லூரி வந்தடைந்தேன்
தகமை சால் விநாயகமூர்த்தி என்னும் அந்த
தமிழாசான் என்னை இனம் கண்டு கொண்டார்

இளையவனாய் மேடை ஏறி இன்பத் தமிழினைப் புகழ்ந்த போது
பேரின்பமடைந்த ஆசான் பெருமையால் முகமலர்ந்தார்
குறும்பாக்களை இயற்றி நானும் கொடுத்தேன் படித்துப் பார்க்க

புலவரே! வருக என்று பூரித்தனர் ஆசான் ஒன்றாய்
பாரதி, பாக்களென்றும், பாவேந்தர் பாக்கள் என்றும்
கவிமணி பாடல் என்றும், கம்பனார் பாடல் எல்லாம்
சிறு சிறு நூலாய்த் தந்து திருக்குறள் படிக்க வைத்தார்
நாமக்கல் கவிஞர் மீது நாட்டம் எனக்குண்டாய் போச்சு
தமிழமுதின் சுவை தன்னைத் தொட்டுக் காட்டித் தன்னைத்
தக்கவாறு எனக்கு அவர் தமிழைத் தந்தார்
அந்த ஆசான் ஊட்டிய தமிழமுதே என்னை
இக்கவி நூல் ஆக்கிவிட அத்திவாரமாச்சு
மனதார விநாயகமூர்த்தியாரை மனத்திருத்தி
இம்மலரை மலர வைத்தேன் - யானே!
குழந்தைகளே! இளமையிலே தமிழ் சுவைத்தால்
இன்பமுறு கவி நீரும் ஆக்கலாமே!
புத்தகப் பூச்சிகளாய் இருந்திடாதீர்,
நாளும் புகழ்பூத்த கவிதைகளைப் படிக்கவாரீர்.

## அளவை மாண்மியம்

12. தமிழிசை தவிலிசை தக்கநல் பண்ணிசை
அமிழ்தினும் இனியநல் அருந்தமிழ்க் கலையெலாம்
கலைமணம் பரப்பிடும் கவின் நிறை ஊரினில்
நிலைத்து நின்றிடும் நிகரிலாப் புகழதாம்.

மண்மிசை விநாயகர் மகிழ்ந்து வந்து தன்
பொன்னடி அளவையில் பொறித்த தன்மையால்
எண்ணரும் கலையெலாம் எளிதில் ஓங்கிட
வண்ணமார் "கும்பளாவளை" வந்துறைந்தானே!

அண்ணலார் கோயிலில் அமைந்த நல் வீதியில்
பின்புறமமைந்த என் முந்தையோர் வீடதில்
வந்து நான் பிறந்து வணங்கி எழுந்ததால்
ஐந்து கரத்தண்ணல் அருங்கவி அருளினன்.

## இவன் யார்?

13. பண்டிதர் புலவர் பட்டம் படித்து நான் பெற்றதில்லை
எண்ணில் சட்டம் கற்று எழுதி நான் படித்ததுண்டு
அன்னையாம் தமிழை எண்ண அடிமனதினில் கவிய தூறப்
பண்ணினேன் பாடலன்றிப் படித்து நான் எழுதவில்லை.

14. கல்வியை ஞானக் கலைகள் அறியா என்னை
வல்லவன் போலக் காட்டி வாழ்வித்த வித்தகனே
அகத்தினில் உன்னை எண்ண ஆனந்தக் களிப்பு மேவ
விகடமாய்க் கவி புனைய வைத்தவன் நீயே அன்றோ?

## ஏன் இந்தக் கவிதை நூல்

15. உண்டியும் உடையும் போச்சு
உள்ளுறை மானம் போச்சு
பண்டைய பண்பாடு போச்சு
பார்ப்பவர் சிரிக்கலாச்சு
கண்டதே காட்சியாச்சு
காண்பவர் பரிகசிக்கலாச்சு
கொண்டதே கோலமாச்சு
குணம் குறி அனைத்தும் போச்சு
வான் புகழ் நெறியும் போச்சு
வாழ்ந்த நல் வாழ்வும் போச்சு
எண்ணிடில் எல்லாம் போச்சு
போச்சடா! போச்சு! போச்சு!!

16. பெட்டகம் உடைந்து போனால்
புதிதொன்றைச் செய்து கொள்வாய்
கட்டிடம் இடிந்து போனால்
கட்டுவாய் புதிய வீடு
மட்டிலா செல்வம் மாண்டால்
மீண்டதை ஈட்டிக் கொள்வாய்
கட்டிய மனைவி மாண்டால்
கலியாணமும் செய்து கொள்வாய்
கெட்டது தமிழ்ப் பண்பேயென்றால்
கேட்டிதை எங்கு கொள்வாய்?

## வாசக நேயர்கட்கு

17. படித்தவர் பட்டம் பெற்றார் பாவினைப் புனையவல்லோர்
அடிதனைப் பணிந்து நானும் அன்புடன் ஒன்று கேட்பேன்
குழந்தை மண் வீடு கட்டில் குறை காண்பாருமுண்டோ
வளர்த்த நும் குழந்தை வரைந்ததைப் படித்துப் பாரும்

பொல்லடி போட்டீராகில் பொறுக்காது எனது உடல்
சொல்லடி போட்டீராகில் சுவைத்ததை ஏற்றுக் கொள்வேன்
வல்ல உம் கருத்தையெல்லாம் விருப்புடன் வரவேற்கின்றேன்
சொல்வதைக் கடிதமூலம் சொல்லுங்கள் காத்திருப்பேன்.

குழந்தையைப் பெற்றேனன்றி குறைநிறை அறியமாட்டேன்
இளந்தளிர் இக்குழந்தை பற்றி எதுவுமே அறியேன் யானே!
பெற்ற "நோ" மாறுமுன் பிள்ளையை ஒப்படைத்து விட்டேன்
உற்றுநீர் இக்குழந்தை நோக்கி உண்மையை இயம்புவீரே!

# இவர் ஒரு புலவர்

பேச்சுக் கலையில் வல்லோன் கூட்டம்
பேசிடும் கலையில் மிக்கோன்
முச்செனத் தமிழைக் கொண்டோன்
மும்மொழி பேச வல்லோன்
வீச்செனத் தீர்மானங்கள் தன்னை
விரைவினில் எடுக்க வல்லோன்
கூச்சமோ அச்சமின்றி யென்றும்
கொள்கையை உரைக்கும் தீரன்
போச்சடா தமிழ்ப்பண்பாடென்று
பொங்கிடும் உணர்ச்சி மிக்கோன்
மெச்சியே இவன் பேச்சைக் கேட்போர்
மேன்மைசேர் "புலவன்" என்றார்
அச்சமின்றி தமிழ்த் தொண்டாற்றும்
அளவையூர் புலவா! வாழி.

**அளவையூர் வாசகர் சார்பில் வாழ்த்துபவர்**
**அளவையூர் நாகலிங்கம் இரத்தினவடிவேல்**

# இலண்டன் மாநகர் இரசிகர் ஒருவர்

**(நூலை வெளியிட வேண்டி எழுதிய விருப்புப் பா- மாலை)**

படித்தறியாப் பாமரக் கிளவரேனும்
பகிடிமிகு "விகடகவி" பாடல் கேட்பின்
தடியதனைத் தூரத்தே தள்ளி வீசி
தன்னிரண்டு கைகளையும் ஒன்றாய்த் தட்டி
எடியே! இப்பாட்டைக் கேட்பாயென்று
இழுத்திடுவன் தன்னருகே கிளட்டு மனையாளை
இடித்த பாக்குரல் தன்னைத் தூர வீசி
இருகிழடும் ஒன்றாகச் சிரிக்குமெனில்
துடிப்புள்ள இளைஞரிவர் பாட்டைக் கேட்டால்
துள்ளாமல் இருந்திடத்தான் முடியுமாமோ
கடிதினிலே காலத்தைப் போக்கிடாது
கட்டவிழ்த்து "விகடகவியை" நடமாடவிடு

இப்படிக்கு
இங்கிலாந்து நண்பன்

# அகவையோ (83) தாண்டிய ஆசான் அளவையூர் அருணோதய முன்னாள் ஆசிரியர்

## ஆசிக் கவி

1. பலவிதக் கவிதைகள் புதுவிதக் கருத்துக்கள்
சில நடப்புக்கள் சிற்சில சிலேடைகள்
நிலவிடும் நிகழ்வினை படமெனக் காட்டிடும்
உலவிடும் நகைச்சுவை உண்மையில் சுவையதே.

2. இனியவை கொடியவை அரியவை பெரியவை
தனிஉயர் ஔவையின் நாவினால் நவின்றவை
நனிமிகு சுவைபட நல்லூரினைக் காட்டிட
முனிந்தனர் முதியவர் முணுமுணுத்தனர் சிலபேர்.

3. சிறைபட்ட எங்கள் சிந்தனை விரியச்செய்து
கறைதனைப் போக்கவல்ல கருத்தினைக் கவிதையாக்கி
நிறைஉயர் முத்தையாவின் நீள் தமிழ்ப்புலவன்
இறைவனின் அருளால் இனிய கவி இயற்றி வாழி

4. நாட்டினில் நடப்பவற்றை
நயம்பட எடுத்துக் கூறும்
பாட்டினில் சுவையுமுண்டு
படிப்பவர் சிரிப்பில் ஆழ்வர்
மேட்டிமை மாதர் தம்மின்
மான்மியம் மனதைக் கிள்ளும்
ஏட்டினில் வடித்துத் தந்த
இன்கவி தந்தான் வாழி

விகடகவிக்கு தமிழ்பற்றூட்டிய
V. ஆறுப்பிள்ளை (ஆசிரியர்)



# உண்டி

பூட்டனார் தொண்ணூறாண்டு காலம்
புகழுடன் வாழ்ந்து மாள
பாட்டனார் எண்பதாண்டு மட்டும்
.பக்குவமாய் வாழ்ந்தார் மண்ணில்
தந்தையோ ஐம்பதாண்டே
தரணியில் வாழ்ந்து சாக
மைந்தனோ நாற்பதாண்டுகளே
மாநிலம் தன்னில் வாழ்ந்தான்
உண்டியை மாற்றா விட்டால்
உன் வாழ்வும் குறுகும் காண்பாய்.

18.09.2001 – உதயன்

பன்னிரண்டு மணி வரைக்கும்
படத்தினைப் பார்த்துவிட்டு
கண்கவர் கட்டில் தன்னில்
கணவனோடு படுப்பாள் பாவை
பெண்ணவள் எட்டு அடித்தல் கேட்டு
பேதலித்து எழுந்து ஓடி
உண்டதோ பழம் பாண் துண்டு
உடலது மெலியும் தானே.

**19.09.2001 – உதயன்**

சாவதும் ஒரு நாள் தானே
தடுத்திட முடியுமோ? சொல்
ஆவது ஆகட்டும் என்று
அடிவயிறு நிறைய உண்பாய்
பாவம் உன் உடலைப் பார்க்க
பரிதாபமாய் இருக்குதடி
கேவலம் நீ எலும்பாய்ப் போனால்
கேட்டாலும் வருமோ காதல்?
கோபமேன் கொள்கிறாய் நீ
கொழுப்பதும் அழகுதானே!

**19.09.2001 – உதயன்**

கூழதை மறந்தே போனோம்
குரக்கனை கைவிட்டு விட்டோம்
வளமான பழைய சோற்றை
வயிறாற உண்ணாது விட்டோம்
ஒடியலை வரகை பனாட்டை
ஒரு நாளும் கண்டறியோம்
இடியப்பம் சொதியும் சேர்த்து
இட்டமாய் உண்டதாலே
அடிபட்டு கியூவில் நின்று
அரைக் கொத்து குளிசை வாங்குகிறாரே!

மண்டையிலோ மயிரை காணோம்
மனதினில் அமைதி காணோம்
உண்டியை சப்பி உண்ண
உள்ள பல் ஒன்றும் காணோம்
கண்ணதில் பார்வை காணோம்
கண்ணாடி மாட்டிக் கொண்டோம்
நொண்டியாக காலில் ஒன்றை
நோய் வரக் கழற்றி விட்டோம்
பண்டைய உணவை உண்டால்
பாழான இந்நிலை வருமோ?

## அரியது

அரியது கேட்கின் ஆனை முகத்தோய்
அரிது அரிது தமிழனாகப் பிறந்திடல் அரிது
தமிழனாய் இலங்கையில் பிறந்த காலையில்
வடகீழ் இலங்கையில் வாழ்ந்திடல் அரிது
வடகீழ் இலங்கையில் வாழும் காலையில்
பங்கரில் பதுங்கி வாழ்ந்திடல் அரிது
பங்கரில் பதுங்கி வாழும் காலையில்
கால் கை கண்களைக் காப்பது அரிது
காப்பாற்றிய கதையை சாற்றுதல் அரிது
சாற்றிய கதையைக் கேட்டிடும் காலையில்
அரிதிலும் அரிது எம் இனப்பிரச்சனை தீர்வதுதானே!

## கொடியது

கொடியது கேட்கின் குஞ்சர முகத்தோய்
கொடிது கொடிது மொழியினை இழத்தல்
அதனிலும் கொடியது தாயகத்தை இழத்தல்
அதனிலும் கொடிது அரும் கலைகள் அழித்தல்
அதனிலும் கொடிது நம் பண்பினை மறத்தல்
அதனிலும் கொடிது ஆதியை மறத்தல்
அனைத்திலும் கொடிது அருந்தமிழர் எனச் சாற்றிட
அஞ்சி
அகதிகளாகி அவனி எங்கும் அலைவது தானே!

## இனியது

இனியது கேட்கின் இன்முகக் கணபதி
இனிது இனிது திமிழ் மொழி இனிது
அதனிலும் இனிது அது தரு பொக்கிஷம்
பொக்கிஷம் எது என புகன்றிடவேண்டில்
கம்பன் வள்ளுவன் கண்ணகி காப்பியம்
பண்டைய இலக்கியம் பழம் தமிழ் பாடல்கள்
பக்தி சொட்டும் பற்பல புராணங்கள்
பண்ணிசை ததும்பும் தேவார பதிகங்கள்
அனைத்தையும் கற்ற நல் அறிஞர்கள் செப்ப
அமர்ந்திருந்து ஆர்வமாய் பருகுதல் தானே!

## பெரியது

பெரியது கேட்கின் பெருந்தகை ஐங்கர
பெரிது பெரிது பல்குழல் பெரிது
அதனிலும் பெரிது அதுதரும் ஓசை
ஓசையில் பெரிது அது தகர்த்திடும் கட்டடம்
அதனிலும் பெரிது ஆருயிர் பிரிதல்
அதனிலும் பெரிது அழுகுரல் ஓசை
அதனிலும் பெரிது அநாதைகள் கவலை
கவலையோ எனில் கடலிலும் பெரிது
கவலையைத் தாங்கும் அநாதையின் இதயம்
அலைகடல் அனைத்திலும் பெரிதிலும் பெரிதே!

## கிட்டாதது

கிட்டாதது எதுஎன கேட்பீராகில்
கிட்டாதிங்கு இனவிடுதலை ஒன்றே!
கிட்டிடில் அமைதி இத்திருநாட்டில்
கிட்டிய அமைதியை குலைத்திட முனைவர்
கிட்டிய அமைதியைக் கட்சிகள் குலைக்க
கிட்டிய அமைதி கலைந்திடும் மறுநாள்
கிட்டிய அமைதி எட்டவே விலக
கெட்டிடும் கொடும்போர் கொன்றிடும் எம்மை.

# களவு

ஆடு மாடு அவிட்டு வந்தால் அடையாளம்
காட்டென்பார்கள்
மாடு வெட்டி வித்தால் மறுக்கிறார் சைவர் உண்ண
சைவம் தளைத்தோங்கியிங்கு சரியாக வளர்வதனால்
கைவிட்டேன் கால் நடைக் களவு.

**18.11.2001 - உதயன்**

"பிற்பொக்கெற்" அடித்து பெருத்த தனவந்தனாய்
மாறியவன்
அற்புதமாய் செல்வம் அபகரித்தான் - பின் புறமாய்
"கான்சரெனும்" நோய் கடுமையாய் பரவிவிட
மாண்டான் மனது மிக நொந்து.

**19.11.2001 - உதயன்**

முன்னம் ஒருக்கால் மூஷிகனே உனை நினைக்காமல்
வண்ணமுறு வீடு ஒன்றைச் சுருட்டி விட்டேன் -
கண்கெட்ட
ஊர்காவற் படையார் துரத்திவந்தெனைப் பிடிக்க
சீரழிந்து சிக்குண்டேன் சினந்து.

**20.11.2001 - உதயன்**

பொன்னுண்டாம் நல்ல பொருளுண்டாம் பூவுலகில்
பெண்ணுண்டாம் பெருமனையுண்டாம் - என நாளும்
வண்ணமுறு வீடுகளை வடிவாய்த் தேர்ந்தெடுத்து
கன்னக் கோல் வைப்போர் தமக்கு.

**21.11.2001 - உதயன்**

பட்டப் படிப்பும் பண்பான நேர் நடையும்
மட்டற்ற ஞானமும் மதிப்பல்ல - இட்டமுடன்
கொள்ளை அடித்து குவிக்கும் பெருநிதியால்
கள்வர்க்கே உண்டு மதிப்பு.

**22.11.2001 - உதயன்**

கற்றறிந்தான் போலக் கள்வன் மிக நடித்து
சுற்றம் மிகச் சூழத் தோன்றிடுவான் - கற்றறியான்
களிமண்ணால் செய்த களிறுபோல் கரைந்திடுவான்
அளவிலா அறிஞர் தம் முன்.

**23.11.2001 - உதயன்**

வேழமுகத் துதித்த விக்ன விநாயகனே
நாளாந்தம் கள்வர் நடமாட்டத்தால்- பாழான
கொள்ளை அடிக்கும் கொலைகாரக் கும்பல்தனை
எள்ளளவும் தண்டிக்காத தேன்?

**25.11.2001 - உதயன்**

நட்டநடுநிசியில் நாள்தோறும் வீடுடைப்பான்
பட்டப்பகலில் பக்தியுடன் பாட்டிசைப்பான் - இட்டமுடன்
அன்னதானம் பல செய்து ஆசிமிகப் பெற்றிடுவான்
என்னை யார் அறிவாரென்றெண்ணி.

**25.11.2001 - உதயன்**

சின்னஞ்சிறு பயலுக்குச் சீராகப் பயிற்சி தந்து
முன்னம் அவனை முறையாக உட்புகுத்தி -
பின்னையவன்
கதவைத் திறந்து விட்டு காத்திருக்க விட்டுவிட்டு
இதமாகச் சுருட்டுவான் இரவு.

**26.11.2001 - உதயன்**

# நவீன திருவெம்பாவை

கன்னித் தமிழ் அணங்கே
　　கண்மூடித் துயிலாதே
வண்ணக் கிளி மொழியார்
　　வந்திட்டார் ரியூசனுக்கு
ஏனம்மா முகம் கழுவி
　　இடர் படுகிறார் விடியலிலே
பின் வந்து சோப் இட்டு
　　பேதையே முகம் கழுவு
உன்னைக் காத்தெல்லோ
　　உறங்குகிறார் கொட்டிலிலே
எண்ண நிதம் இனிப்பவளே
　　எழுந்தோடி வாடியம்மா
பின்னை வந்து குடிகோப்பி
　　பேதையே எம்பாவாய்.

**17.03.2002 - உதயன்**

உலக்கை பிடித்து அறியாய்
　　ஊர் அரிசி தீட்டியிராய்
வலக்கை பிடித்து ஒரு நாள்
　　வடித்திராய் கஞ்சியெடி
நிலத்தில் இருந்தொரு நாள்
　　நீ ஆட்டியிராய் தோசைக்கு
குல மகளே! நீ ஒரு நாளும்
　　குடமதனைத் தூக்கியிராய்
பாலெடுத்துப் பசுவதனில்
　　பக்குவமாய்க் காய்ச்சியிராய்

காலம் கனிந்து வரக்
கலியாணம் ஆன பின்பு
கோலக் குல மகளே
கொழுனன் உனை வையானோ?
சால வருந்திடுவாய்
சஞ்சலமேன்! எம்பாவாய்.

**20.03.2002 – உதயன்**

கோழி பல கூவ
குஞ்சாச்சி கண்விழிக்க
மாளிகை போல் மனையில்
மறு அறையில் தாயுறங்க
வாளியில் கிடந்த நீரில்
வாய் மட்டும் அலம்பி விட்டு
தோழியர் படலை யண்டை
துவிச்சக்கரமணி அடிக்க
விழித் தெழுந்த குஞ்சாச்சி
விடிகாலை கோப்பி போட
கிழக்கு வெளிக்கு முன்னர்
கிளாஸும் முடியுதடி
காளிபோல் காட்சி தரும்
காரிகையே எம்பாவாய்!

**21.03.2002 – உதயன்**

இட்டமுடன் இவள் சுமந்தாள்
ஈராண்டு புத்தகத்தை
பட்டப் பகல் எல்லாம்
பள்ளியிலே தான் கழித்தாள்
பட்டப் படிப்பிற்காய்
பல்கலைக்கழகம் போய்வந்தாள்
இட்டமுடன் தான் அளித்தார்
இனிய பெரும் பட்டமது
பட்டங்கள் பெற்றும் இன்று
பல ஆண்டு தான் கழிய

போட்டாள் பல விண்ணப்பம்
பொறுத்திருந்தாள் பல ஆண்டு
இட்டமான பதவியொன்றும்
எய்தாத காரணத்தால்
கட்டழகி நஞ்சுண்டாள்
கலங்காதே! எம்பாவாய்.

**22.03.2002 - உதயன்**

அன்று எம் ஆரணங்கார்
அதிகாலை நீராடி
இன்புற்று பூக்கொய்து
இல்லத்தில் விளக்கேற்றி
கண்கவரும் வண்ணமிகு
கடிமனையில் கோலமிட்டு
கன்னியர் கூடி ஒன்றாய்
களிப்புற்றார் விடிகாலை
பொன்னொளிர் விடிகாலை
பூரித்து புலர்ந்த தன்றோ!
என் செய்வோம் மாதரசிகளே!
எம் நிலையும் இதுவாச்சு
வண்ணப் பொற் கொடியே
வருந்தாதே எம்பாவாய்!

**23.03.2002 - உதயன்**

வாரம் ஒரு குளிப்பு
வார்த்தால் போதாதோ
நீராட போனால் நீ
நெடு நேரம் வீணாகுமடி
ஆராதனை செய்வதனை
அடியோடு விட்டுடடி
தீராத கோம்வேக் எமக்கு
தினந்தினமே தாறாரடி
சீரான விடிகாலை
சிறப்பான ரியூசனடி

ஏராளமான பெண்கள்
ஏகுகின்றார் கொட்டிலுக்கு
பாரா முகமாய் நீயும்
படுத்து உறங்குதியோ
பாவை எழுந்திரடி
பரிசேலோரெம்பாவாய்!

18.03.2002 - உதயன்

முன்னை ஒரு காதலனை நீ
முழுதாக நம்பிவிட
பின்னையவன் வீடுடைத்து
பிடிபட்டுச் சிறை சென்றான்
இன்றுனது காதலனோடு
இங்கிலீசு பேசுகிறாய்
முன்பிவனை வெளிநாட்டார்
மூட்டைகட்டி அனுப்பி விட்டார்
துன்பத்தை மறக்க வென
"தூளொன்று" இழுப்பானாம்
அன்பான ஆரணங்கே
அவன் நிலையறியாயோ
பொன்னான காதலிலே
போய்விழுந்தனையோ எம்பாவாய்.

உன்னை மிக விரும்பியவன்
உடுவிலிலே வசிக்கின்றான்
வண்ணமுற வெண் புகையை
வாயிலே ஏந்திடுவான்
கண்கவரும் கடுக்கனொன்றை
காதொன்றில் மாட்டிடுவான்
பெண்கள் கல்லூரி தனைப்
பெரிதாக வலம் வருவான்

கண்ணுக்குக் கறுப்பான ஒரு
கண்ணாடி மாட்டிடுவான்
புண்ணியனோ கனடாவுக்குப்
போக எண்ணியுள்ளானாம்
கண்ணுக் கினியானை இனி
காணாய் நீ எம்பாவாய்

சாதி மத பேதம் தனை
சாகடித்தாய் சாதனையால்
ஆதியில் நம் தமிழர்
அறியாதது சாதி என்றார்
நீதிமுன் சாதி இல்லையென
நிலைநாட்டி வென்றிட்டாய்
ஆதி சிவனைக் காலையிலும்
அல்லாவை மாலையிலும் பணிகின்றாய்
போதுமடி உன் துணிவு
பொறாமைதான் வருகுதடி
பாதியிலே உன்னை விட்டுட்டு
பாவியவன் போய் விட்டான்
தீதிலா ஒருவனை நீ
திருமணம் செய் எம்பாவாய்.

போற்றி வணங்குவோம் கற்புடைய மாதர்தமை
போற்றி வாழ்த்துவோம் அவர் புண்ணிய புருசர்தமை
போற்றி மதிப்போம் தமிழ்ப் பண்பினைப் போற்றுவோரை
போற்றி என்றும் எமைப் பெற்றெடுத்த தாயாரை
போற்றி அறத்தொடு அன்பினைப் பொழிபவர்தமை
போற்றி தமிழெனும் பொற்தமிழ்ச் செல்வியினை
போற்றி இல்லறம் தனை நல்லறம் ஆக்குவோரை
போற்றியாம் பசிபோக்கும் உழவர்தமை
போற்றி இல்லத்தரசியின் புகழ்பூத்த பெண்மையினை
போற்றி! போற்றி! பொன்னார் பூங்குழலி
எம்பாவாய்!

# நல்லைத் திருப்பள்ளி எழுச்சி

*போற்றி எம்மவரை வாழ்விக்கும் பொருளே*
*புலர்ந்தது மற்றுமோர் பொல்லாத பொழுது*
*கூற்றினை ஒத்த கொடிய செல் வீச்சால்*
*குளறித் துடித் தலறுகின்றார்கள்*
*நாற்புறம் குண்டுகள் நலிவுற வீழும்*
*நலம் திகழ் நல்லூர் நலமுறு வேலா*
*ஆற்றொணாத் துயரால் அழுதழுது தொழுதோம்*
*ஆறுமுகனே பள்ளி எழுந்தருளாயே!*

*அருணனும் அதிர்ந்தான் அழுகுரல் கேட்டு*
*அணுகினான் மேற்றிசை அனைத்தையும் காண -*
*இருளது அகன்று ஒளியது பெருகிட*
*எம்மிடர் தீர்ந்தபாடில்லை*
*ஒரு முறையல்ல பலமுறை உன்தன்*
*ஒப்பிலா பாதங்கள் பணிந்தோம்*
*குருவடிவாகி குவலயம் காக்கும்*
*கொற்றவனே பள்ளி எழுந்தருளாயே!*

*கூவின செல்கள் குருகுகள் பறந்தன*
*குண்டுகள் ஒலித்தன ஒலித்தன எங்கும்*
*ஆவினம் அலறி அறுத்துக் கொண்டோட*
*ஆலயக் கதவுகள் பூட்டினர் ஒன்றாய்*
*பாவிகளாகி அந்தணரெல்லாம்*
*பதுங்கினர் பங்கருக்குள்ளே*
*மூவிரு முகத்தோய் முக்கண்ணன் மகனே*
*முருகனே பள்ளி எழுந்தருளாயே!*

உடைமைகள் அனைத்தும் இழந்தனர் ஓர்பால்
உறைவிடம் தகர்ந்து தவிப்பவர் ஓர்பால்
இடம்பெயர்ந்தலைந்து கலங்குவோர் ஓர்பால்
இனம்சனம் தேடி அலைபவர் ஓர்பால்
நடந்து நடந்து நடையிழந்தவராகி
நலிந்து வருந்தி கதறுவோர் ஓர்பால்
இடர்களைந்தெம்மை காத்திடவேண்டி
எழில் தவழ் வேலா பள்ளி எழுந்தருளாயே!

கீதங்கள் பாடி பணிந்தோமுன் பாதம்
கேட்ருக்காதென நம்புகிறோம் நாம்
ஏழைகளாகி அலைந்திடும் எம்மவர்க்கு
எவரும் இதுவரை இரங்கிடவில்லை
பூதலத்தினில் நாம் படும் வேதனை
புரியாதென எண்ணுகிறோம் யாம்
காதலாகி நின் கருணையை வேண்டிட
கதிரொளி வேலவா! பள்ளி எழுந்தருளாயே!

பற்பல வீட்டிலிருந்து மெய் அடியார்
பானை சட்டியுடன் படையெடுக்கின்றார்
சிற்சில வீட்டில் அழுகுரல் கேட்க
சேகரிக்கின்றார் சிதறிய உடலை
மற்றைய வீட்டினர் மண்ணினைத் தோண்டி
மறைக்கின்றார் தம் உறவினர் உடலை
அற்புதமாகவே அரும் சமர் புரிந்தோய்
ஆறுமுகவனே! பள்ளி எழுந்தருளாயே!

அது பெரும் செல்லென அலறியே ஒலிக்க
அழுதழுது பங்கரை நாடினர் அடியார்
இது அவன் திரு அருள் என்றிட பக்தர்
ஏங்கியே இதயம் வெடித்திட மாண்டார்

உது இவர் தலைவிதி என்றே இயம்பிட
உருகி நின் நாம பஜனை செய்கின்றார்
எதுவரினும் உன்னடி மறந்திடமாட்டார்
உத்தம வேலனே பள்ளி எழுந்தருளாயே!

முந்தியிருந்ததோர் இடத்தையும் விட்டாய்
முழுதுமாய் அங்கொரு சேச்சினை அமைத்தார்
பிந்திவந்து நீ இருந்ததைக் கண்டு
பின்னை உனக்கொரு ஆலயம் அமைத்தார்
அந்தமில் அழகனாய் அமர்ந்தது கண்டு
அன்புடன் யோகரும் அருகினில் அமர்ந்தார்.
எந்தையே நின் எழிலினைக் கண்டோம்
ஏந்தலே பள்ளி எழுந்தருளாயே!

விண்ணகத் தேவரும் நினை போற்றுகின்றார்கள்
வீதியில் கிடப்பவனும் நினை விரும்புகின்றானே
மண்ணகத்தே நின் அருளினை வேண்டி
மாதவம் செய்திடக் கண்டாய்
கண்மணி இருவரோடு நீ காலத்தைப் போக்கில்
காத்திட எம்மை யாரிங்கு உள்ளார்
எண்ணி எண்ணி உனை ஏங்குகின்றோமே
இன்முகம் காட்டி எழுந்தருளாயே!

புவனியில் இனி நாம் பிறந்திட மாட்டோம்
பெற்றது அனைத்துமே போதுமென்றாச்சு
அவனியில் தமிழர்கள் அலைவதும் கேட்டாய்
ஆறுமகவா நீ இரங்கிடவில்லையோ
பாவ வினையெலாம் சூழ்ந்தமை யாலே
பாவிகளாகி பரிதவிக்கின்றார்
ஆவன செய்வாய் என எண்ணுகிறார்கள்
ஆறுமுகனே! பள்ளி எழுந்தருளாயே!

விகடகவி

# சொல்வதிலும் கவனம் வேண்டும்!

இடம் விட்டு மக்கள் எல்லாம்
தென்மராட்சி போகும் போது
இரவினைக் கழிப்பதற்கு இந்த அப்பாவிக்கு
இடம் ஏதும் கிடைக்கவில்லை
அடித்து ஊற்றும் மழையில் தோய்ந்தான் காளை
அவனுக்கு அறிமுகமானோர் யாருமில்லை
ஒரு வீடு சென்று "இரவு இங்கு நானும்
படுத்திட்டுப் போகப்போறேன்" என்றான்
'குமர் ஒன்று இங்கு இருக்குதடா நீயும்
ஓடடா தூர" என்று அதட்டினார்கள்
மற்றுமோர் வீடு நண்ணியவன்
மாட்டுக் கொட்டிலில் தங்கிவிட்டு
மறுநாள் விடியவே போறேன் என்றான்
குமர் இரண்டு இங்கே உண்டு மூடா
போடா நீ வீட்டை விட்டு என்றனர்
அடுத்த வீட்டை அடைந்தவனும்
**'குமர் ஏதும் இங்கு இருக்கோ? என்றான்**
**இரவு இங்கு படுத்திடக் கேட்டேன்'** என்றான்
அடித்தனர் அயலார் கட்டி வைத்து
அவன் மண்டை பிளந்து போச்சு **(31.10.2001)**

# ஷெல் ஓசை கேட்கும் பாட்டி

குண்டடியும் ஷெல் வீச்சும் கேட்டுக் கேட்டு
குஞ்சாச்சி மனம் நல்லாய்ப் பழகிப் போச்சு
எண்ணற்ற பல்குழல் ஓசை கேட்டு
எல்லாமே ஆச்சிக்கு வழமை ஆச்சு
பண்மிக்க அச்சத்தம் கேளாததாலே
சத்தியமாய் இராத்தூக்கம் வருவதில்லை
கண்மணி குண்டொன்றுமே கேட்குதில்லை
கனகாலம் நித்திரையும் வருகுதில்லை என
உண்மை நிலை பேரனுக்கு உணர்த்த இப்போ
உட்சுவரில் வாழைத்தண்டால் அடித்துவிட்டு
உண்ணாணை ஷெல் சத்தம் கேட்குதென்பான்
உடனடியாய்க் கண் தூங்கிவிடுவாள் பாட்டி
வண்ணமுறு நல்லூரான் மணியோசை போல்
வந்திங்கே இணைந்ததுவே ஷெல்லின் ஓசை!

**03.11.2001**

# நாட்டு நடப்பு

## தமிழ் அன்னையின் ஆசை

முத்தமிழும் முழங்கிடவே முரசம் கொட்ட
மூவேந்தர் அடிபணிந்து முத்தம் சூட்ட
வித்தகியாய் அரியணையில் வீற்றிருந்து
வியப்புறவே தமிழன்னை ஆண்டாளன்று
சித்திரமும் சிற்பமுடன் கலைகள் யாவும்
சீர்மேவு குழலிசையும் யாழும் கேட்டு
உத்தமியாள் உளமுருகி உவகை பூக்க
உவந்து நாம் பாடியதும் உன்னையன்றோ?
எத்திசையும், எம்மண்ணில் எங்குற்றாலும்
எல்லோரும் இவள்பெற்ற குழந்தையன்றோ?
மெத்த இந்த கலைகளெல்லாம் ஒன்று சேர
மேல்நாட்டில் இவைவளர்த்தல் கடினமாகும்
நித்தமும் அவள் மகிழ்ந்து தனதே யென்று
நிலை கொண்டு வாழ்வதற்கு நாடு வேண்டும்.
அத்தகைய நாடொன்றை அமைக்க வேண்டி
ஆசை கொண்டோம் ஈழத்துத் தமிழர் நாங்கள்.

## நாடின்று காடாய்ப் போச்சு

கொட்டனால் ஊமை ஒன்றை
கொடூரமாய் அடித்துக் கொன்றார்
வெட்டினார் வழிப்போக்கர் தன்னை
வீழ்த்தினார் கிணற்றில் பின்னே
கட்டிய மனையாளைக் கள்வன்
கழுத்தினை நெரித்தே கொன்றான்
பட்டப் பகலில் பெண்ணைப்
பாலியல் வல்லுறவுக்கிட்டார்
நட்டதும் கழண்டு விட
நடு வீதியில் 'வான்' புரள
இட்டம்போல் பயணம் செய்தோர்
இருவர் அவ்விடத்தில் மாண்டனர்
துட்ட கள்வர் தம்மை
துரத்தினர் பிடிக்கவில்லை
மட்டற்ற இதுபோல் செய்தி
மலருது நாளும் ஏட்டில்
கெட்டது எமது நாடு
கொடுங்காடாய்ப் போச்சுதின்று.

## எம் பண்பு அழியவில்லை

அப்புவும் ஆச்சியும் அன்று
அருமையாய்த் தலைமயிர் வளர்த்து
செப்பமாய் குடுமி கட்டி
சிறப்புற வாழ்ந்தார் அன்றோ
இப்பவும் இந்தப் பண்பு
இறந்திடவில்லை என்பேன்
கப்பலால் வந்த தம்பி
கனகரின் கடைசிப் பேரன்

அப்பு போல் தலை முடித்து
அருமையாய்க் கடுக்கன் பூண்டு
செப்பிலே காப்பு மாட்டி
திரிகிறான் பட்டினத்திலின்று
அப்பனே! களிசான் விட்டு
அருமையாய் வேட்டி கட்டில்
இப்புவியில் எமது பண்பு
இழிவுபட்டழியா தென்பேன்!

## தருகிறார் கோடி கோடி

கேட்டதோ முப்பதாயிரம் கோடி
கிடைத்ததோ நாற்பதாயிரம் கோடி
இட்டம் போல் பீரங்கி வாங்கி
இடி ஒலி பல்குழலும் பூட்டி
துட்டராய் மாறிப்பின்னே
தொடுப்பரோ கொடிய போரை
திட்டங்கள் போட்ட பின்னே
திரட்டியே தருவாராம் இன்னும்
கெட்ட இக்காலம் தன்னில்
கேட்பதற்கு யார் தான் உண்டு
இட்டம் போல் "ஈராக்" நாட்டை
இடித்ததும் ஓர் இரவிலன்றோ?
பட்ட நம் பாட்டை எண்ண
பயமதும் அதிகமாச்சு

## நடப்பது நடந்தேயாகும்

மம்மி நீ டடி உடனே
மானிப் பாய் காணி விற்று
செம்மையாய் பிளேன் ஏறி
சிறப்பான ஜேர்மனிக்கு வாரும்

தம்பையர் எழுபத் தேழில்
தங்கம்மா மனையாளோடு
அம் மண்ணுக்குப் பறந்து சென்று
ஆறு நாள் ஆகுமுன்னே
செம்மையாய் மூச்சடைத்துச்
சிவபதம் அடைந்தார் அங்கு
அம்மையார் தங்கம்மாவும்
அழுது மிக புலம்பிவிட்டு
தம்பியன் கொடுத்த காசில்
தரியாது இங்கு வந்தார்
செம்மையாய் வீடு சேர
சீவனும் பிரிந்த தன்றே!
இம் மண்ணில் சாவதற்கு
இவள் கொடுத்து வைத்தவளே - என்றார்.

## ஒழிந்து போ! செவ்வாய் நீயே!!

அழகினில் அவளை மிஞ்ச
அவ்வூரில் எவரும் இல்லை
களங்கமில் மனதுடையாள்
கற்பினில் கண்ணகியை ஒத்தாள்
வளமுடன் வாழ்ந்த பாவையை
வாட்டிற்று "செவ்வாய்"க் குற்றம்
இளமையின் எழிலும் போச்சு
இனியவள் வயதும் போச்சு
குளமதாய் கண்ணீர் மல்கக்
கூனிற்று கும்பம் மெல்ல
அழஅழ அவளின் கண்கள்
ஆழமாய் உள்ளே போச்சு
பாழான இச்செவ்வாய்க் குற்றம்
பழி வாங்குது மாதர் தம்மை
வளமாக உலகில் வாழும்
வனிதையரைத் தீண்டாச் செவ்வாய்

இளமையில் மாதர் தம்மை
இழிவுறச் செய்யு திங்கே
அளப்பெரும் கொடுமை செய்யும்
அநியாயச் செவ்வாய் உன்னை
"ஒழிந்து போ" என விரட்ட
உன்னத இளைஞர் வாரீர்!

## கல்வித் தொண்டே கடவுள் தொண்டு

ஒழுகிடும் ஓலைக் கொட்டில்
ஓரிரு ஒடிந்த வாங்கு
பழுதற இருந்து கற்க
பாய்கூட அங்கேயில்லை
முழுதுமாய் தண்ணீர் தேடின்
முன்வீட்டுக் கிணறே தஞ்சம்
ஊரின் நடுவனாய் ஓர்
உயர்ந்த கோபுரமும் கட்டி
பாரிய தீர்த்தக் கேணி
பலருமாய் கூடி வெட்டி
தேரினுக்கு அடிக்கால் நாட்டும்
திருத் தொண்டு செய்கின்றார்கள்
கல்வியே தெய்வம் என்று
கருதுவாரை இவ்வூரில் காணேன்
நல்ல எம் கல்வி ஓங்கில்
நலம் பெற்று ஊரே ஓங்கும்
வல்ல நல் ஈசனாரும்
வந்திங்கு தங்குவாரே!

## மாமியும் மருகரும்

பேதை ஒருத்தி சென்று
பெருமனை முன்னே நின்று
ஆதரவு அற்ற எனக்கு
அருளுக பிச்சை என்ன

மாதரசி அந்த மாமியாரும்
மனையை விட்டு ஓடு என்றாள்
பாதகி சொல்லைக் கேட்டு
பையவே அவளும் ஓட
ஏதையே! உள்ளே வா!
என இயம்பிய மருமகனும்
பேதையே இது என் வீடு
போடி நீ! வெளியே என்றான்
ஆதரவு அற்ற மாது
அழுதுகொண்டோட லுற்றாள்
மாதரசி எங்கள் அம்மை
மறுத்தெமை விரட்டி ஓட்ட
பாதகம் செய்யேன் என்ற
பிரதமருமே விரட்டுவாரோ?

## ஆக்கமோ? அழிவுதானோ?

அம்மையே! அப்பா! என்றார்
அருள் வாதவூரர் அன்று
அம்மையே ஐயனே! என்பேன்
அன்பினால் அடியேன் இன்று
செம்மையாய் எம் பிணக்கைச்
சேர்ந்த நீர் தீர்ப்பீரென்று
நம்பியே தலைவர் எல்லாம்
நல்கினார் பெரு நிதியை
உம்மிடை சண்டை போட்டு
உணர்வினை மிகப் பெருக்கி
வம்புக்கு வாது செய்தால்
வளர்வதும் பகைமை அன்றோ?
இம் மண்ணுக்கு இதுபோல் வாய்ப்பு
இனி வந்து கிட்டிடாது

அம்மணியும் ஐயனுமாய்
அகமகிழ்ந்து பிணக்கைத் தீர்ப்பின்
இம்மண்ணின் வரலாற்றோடு
இணைந்திடும் உங்கள் நாமம்.

## கம்பன் வடித்த கண்ணீர்

அழுதவாறு கம்ப நாடான்
அழுக்கடைந்த வேட்டியோடு
முழுதுமாய் உடல் மெலிந்து
முணுமுணுத் தேதோ சொல்லி
வெள்ளவத்தை மிஷன் அருகே
வீதியில் தனியே நின்றான்
ஐயனே! என்ன கோலம்!
ஆரிதற்குப் பொறுப்பு? என்றேன்
கூட்டியே என்னை வந்து
கொழும்பிலே விழா எடுக்கிறார்கள்
நாடியே என் மனது
யாழ்ப்பாணத்தையே நாடுதென்றான்
பட்டின வாழ்வு வேண்டேன்
பல கொடி குடையும் வேண்டேன்
இட்டம்போல் எனைக் கூட்டிச்சென்று
இருத்தடா யாழ்ப்பாணத்திலென்றான்.

## பாணுண்ட கணவன் பாவம்

காலையில் எழுந்து ஓடி
கடையிலே பாணை வாங்கி
நாலைந்து துண்டாய் வெட்டி
நண்பகலுக்குப் பாதி வைத்து
சேலையைக் கட்டிக் கொண்டு
செப்பமாய் 'ரீவி' முன்னிருப்பாள்
நாலைந்து நாடகங்களோடு
நல்லதோர் படமும் ஓடும்
வேலையால் கணவன் வந்து
விறுவிறுத்துப் பசியால் வாட

காலைப்பாண் மிகுதி உண்டு
கடையில் பழம் வாங்குமென்ன
நிலைகுலைந்த கணவன் மெல்ல
நிம்மதிப் பெருமூச்சு விட்டு
குலமகள் கொடுத்த பாணை
குழம்பின்றிப் பழத்தோடு உண்டான்.

## எங்கே இந்தக் கடவுள்?

கடவுளை நேரில் கண்டவர் யாருமுண்டோ?
கண்டவர் இங்கு வந்து சொன்னதும் ஏதுமுண்டோ?
கடன்பட்டுக் திருவிழாவைச் செய்துவிட்டால்
கடவுளும் மனம் மகிழ்வதுண்டோ?
இடம்பட ஆலயத்தைக் கட்டி
இன்னவன் உபயம் என எழுதிவிட்டு
குடமுழுக்கால் நீராட்டிவிட்டு
கோட்டில் வந்து வழக்கிடலாமோ?
இடர்பட்டுத் தவிக்கும் ஏழை தன்னை
இன்முகத்தோடு வாழ வைத்து
நடைப்பிணமான உரியவர்க்கு
நாளும் உணவளித்தல் புண்ணியமே
அட இந்த மூலன் சொன்ன
அன்பே சிவம் என அறிந்த பின்பு
உடைமைகள் விற்று ஒரு கோபுரத்தை
ஊரினில் கட்டி என்ன பயன்?

## பெற்றோர் பாசம்

பலகாலம் படுக்கையாகி
பார்ப்பவர் எவருமின்றி
பங்குனி பதினெட்டாம் நாள்
பரமசாமியார் உயிர் பிரிந்தார்.

அமெரிக்கா, கனடா, நோர்வே
ஆருயிர்க் குழந்தை ஐந்தும்
வருவோம் வாரம் ஒன்றின் பின்னே
வடிவாய் "எம்பாம்" செய்யுமென்றார்.

கறுத்துப்போய் கருவாடான
கல்விமான் பரம சாமியாரை

பங்குனி இருபத் தெட்டில்
பாடையில் கிடத்த வந்தார்.
வைத்த கொள்ளி எரியுமுன்னே
வந்தவர் பயணமானார்
காடாறு முன்னே மக்கள்
கனடா சென்றடைந்து விட்டார்.
இப்படிப் பெற்றோர் பாசம்
இருக்குது இந்த நாட்டில்!

## குற்றமா? செய்தானிவன்

தங்கம்மா மகள் விரும்ப
தாலிகட்டியே அவளை ஏற்றான்
சிங்கப்பூர் சிவத்தார் மகளை
சீதனம் வேண்டிச் செய்தான்
அங்கயற் கன்னி என்பாளுக்கு
ஆண்மகவு இவனுக்குண்டு
இங்கிதமாய் இவர்களோடு
இணைந்திவன் வாழும்போது
சங்கரி மகளைத் தூக்கி
சரசாலையில் ஒளித்து வைத்தான்
அங்கவனை கைது செய்து
அடைத்திட சிறைக் கூடமதில்
சிங்கம்போல் அப்புக் காத்தர்
சீறியே வழக்குப் பேசி
இங்கிவன் என்ன குற்றம்
இழைத்தனன்? என்று கேட்டார்.

## அப்புவின் கடைசி ஆசை

ஐயா!

எல்லாமாய்ப் பெற்றெடுத்தேன் ஏழு பிள்ளை
இதில் முதல் மூன்றுமே ஆண் மகவாகிப் போச்சு
நல்ல மாதினை முடித்து நாற்பதாண்டு
நல்லவளும் கைலாயம் போயே சேர்ந்தாள்

எல்லாமே உயிரோடு இருந்துமென்ன
எட்டியொன்று எனைப் பார்த்து ஏழு மாதமாச்சு
நல்லதுதான் பிள்ளைகளைப் பெற்றாலென்று
நம்பிநீர் நடப்பதினி மோசமாச்சு
பல்லாண்டு காலம் இந்த மண்ணின் மீது
பொல்லூண்டி முடமாக வாழ்ந்து விட்டேன்
வில்லூன்றி சென்றடைந்து விறகடுக்கி
வேண்டிவந்த நஞ்சினையே குடித்து விட்டு
மெல்லவே விறகின்மேல் படுத்த வண்ணம்
மெதுவாக என்னுயிரைப் போக்கப் போறேன்
நல்லதோர் "பிண விளக்கம்" எனக்கு வேண்டாம்
நற்கவியாய் விகடகவி இதனைப் பாடும்.

தெருக்கரை மடத்தடி,
திருநெல்வேலி,
30.05.2003

வாழ்க்கையில் வெறுப்புற்ற
அப்புக்குட்டியர்,
அகவை 81.

## வயோதிபன் ஆன குமரன்

காலையில் கால் அடியாவிட்டால்
கையதும் நடுங்கு தென்பான்
வேலையில் இருக்கும் போதே
விரும்பியே அரைக்கால் அடிப்பான்
மாலையில் வீடு போகும் போது
மறைத் தொரு கால் கொண்டு செல்வான்
நாலைந்து கால் அடியாவிட்டால்
நடைப்பிணம் ஆகிடுவான்
வாலைக் குமரன் போல்வான்
வயோதிபன் போலாகி விட்டான்
சாலையில் உடை ஏதுமின்றி
சவம் போலக் கிடந்தான் தன்னை
நாலைந்து பேர் காவிச் சென்று
நண்பகல் வீட்டில் போட்டார்.

## எங்கே இந்த இறைவன்

பட்டுடுத்துப் பூவும்சூடிப் பால்பழங்கள் ஏந்தியே
இட்டமுடன் தங்க நகை எல்லாம் ஒன்றாய் மாட்டியே
கட்டிய நற் கணவனோடு 'காரில்' செல்வது எங்கேயோ?
எட்ட உள்ள அம்மனுக்கு இவற்றைக்கொண்டு செல்கிறாய்
கிட்ட வந்து அழுது கெஞ்சிக் கேட்ட பிச்சைக்காரியை
ஒட்ட அடித்துத் துரத்திவிட்டு
இழுத்துக் கதவைப் பூட்டினாய்
முட்டாள் அந்தப் பிச்சைக்காரி - முத்துமாரி அம்மனாய்
கிட்ட வந்து எட்டிப்பார்க்க கேடு என்று விரட்டினாய்
எட்டச் சென்று அவளைக் காண
எண்ணுவது மடமையே
இட்டமுடன் ஏழைகட்கு இரங்கினால் - இறைவனும்
உன்னைக் கண்டு இரங்குவான் அல்லவோ?

## கொடுத்திடு சம்பளத்தைக் கூட்டி 'மே தின வேண்டுகோள்'

ஒடுங்கிய நாகம் கூட
இசை கேட்டு எழுந்து ஆடும்
நடுங்கிடும் கிழவன் கூட
நல்லுணவினால் எழுவான் துள்ளி
படுக்கையாய் கிடக்கும் பாலன்
பாலூட்டந் துடித் தெழுவான்
ஒடுங்கியே காரியாலயத்தில் நாளும்
உருக்குலைந்த ஊழியரெல்லாம்
துடுக்குடன் துள்ளிப் பாய்ந்து
துரிதமாய் வேலை செய்ய
கொடுத்திடு சம்பளத்தைக் கூட்டி
குறையொன்றும் வந்திடாது
படுத்திடும் இந்த நாடு
பையவே இவர்கள் தூங்கில்
எடுத்திடு இம்முடிவை இன்றே
இந்த "மே" தினத்தில் இப்போ.

## 'புஷ்' மான்மியம்

உலகம் யாவையும் ஒழிக்க வல்லவன்
நிலவில் கால்வைத்த நீள் புகழ் கொண்டவன்
பலம்மிகு படைபலம் பாரினில் படைத்தவன்
நிலமிசை 'புஷ்ஷினை' நினைந்து வாழுவாம்
உலகின் தளபதி தானென உறுமுவான்
நிலை குலைந்திட நீண்டபோர் நடத்துவான்
பல்லாயிரம் உயிர்களைப் படுகொலை செய்தபின்
நல்லவர் நானென நவில்பவர் 'புஷ்ஷரே'

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென்னிலங்கையில்
எண்ணைக் கிணற்றினில் 'புஷ்ஷர்' இட்ட தீ
மண் உலகினில் மாபெரும் கொடுமையே!

## அப்பீலுக்கு எங்கு போவேன்?

பத்தாண்டு விரதம் பூண்ட
பகவதிக்கோ பிள்ளை யில்லை
ஆண்டிற்கு ஒரு குழந்தையாக
ஆனந்தி பெறுகின்றாளே!
குலமகள் குணவதிக்கோ
குழந்தைகள் எட்டும் பெட்டை
அருந்ததி பெற்றாள் ஆறு
அனைத்துமே ஆணாய்ப் போச்சு
நீதியே இறைவன் என்று
நினைவூட்டினார் வாத வூரர்
அநீதியை இறைவன் செய்யின்
அப்பீலுக்கு எங்கு போவேன்?

## பேயுறை காடாகும் நாடு

முன் என்னைக் கண்ட மாதர்
முத்துப் பல்வரிசை காட்டி
அன்பொடு முகம் மலர்ந்து
ஆசிகள் செப்பிச் செல்வர்
பெண்ணினம் பெருமை பேண
பேதையேன் கவிதை பாட
கொண்டனர் பெண்கள் கோபம்
கோதையர் திட்டு கின்றார்
கண்மணி உனது வாழ்வு
கறை படக் கூடாதென்றே
எண்ணத்தில் தூய்மை மேவ
எழுதுகின்றேன் தினம் கவிதை
பெண்ணவள் பெருமை போனால்
பேயுறை காடாம் நாடு.

## இலண்டன் மாப்பிள்ளை

அத்தரோடு 'சென்ட்' பூசும்
ஆளும் நல்ல சிவலைதான்
மொத்தமான சங்கிலியும்
முழுதாய் கழுத்தில் தொங்குது
மெத்த நெளிந்த தலை முடி
மேலும் ஒரு தொப்பிதான்
அத்தான் என்று மெச்சி
அவரைச் சுற்றி புறோக்கர்மார்
மெத்தக் கள்ளை விரும்பியே
மூன்று போத்தல் குடித்தபின்
அத்தான் வெறி ஏறிடவே
அகற்றி விட்டார் 'டோப்' பினை
நத்தை ஓடு போல மண்டை
நன்கு கறுத்துக் கிடக்கவே
செத்தேன் பிழைத்தேன் என்று
செருப்பை விட்டு புறோக்கர் ஓடினார்.

## யாருக்கிந்த இந்து மாநாடு?

இந்து மதம் மிகஓங்கி வளர்ந்திருக்கும்
எழில் தவழும் யாழ்ப்பாணம் தனைவிடுத்து
முந்தி வந்து கொழும்பினிலே மாநாடு கூட்டும்
முடிவதனை எடுத்திருந்த மூடர் யாரோ?
அந்தி பகல் ஆலயங்கள் தனிலே கூடி
அரிய சைவ தத்துவத்தைப் பேணுமிந்த
சுந்தர நற் தமிழர்களைத் தூசிபோலத்
தூற்றிவிட்டு மாநாடு கூட்டலாமோ?
சந்ததமும் தமிழ் சைவம் என்றே போற்றும்
சிவபூமி யாழ்ப்பாணப் பூமியன்றோ?
நிந்தனை செய்து இம்மண்ணை நீக்கிவிட்டு
நீர்காணும் மாநாடும் ஒரு மாநாடாமோ?
அந்தமில் அருவிதனில் நீராட்டாமல்
அழுக்கடையில் மகேஸ்வரனை நீராட்டலாமோ?

## கேசத்தின் மாண்பு கேள்மின்

நல்ல குலம் நல்ல பண்பு
நல்ல இடத்துப் பையன்தான்
கல்வி கேள்வி ஞானமதில்
கரைகடந்த பண்டிதன்
பல்கலைக் கழகம் தன்னில்
பட்டம் பலவும் பெற்றவன்
நல்ல பல மணங்கள் பேசி
நாளும் வீடுதேடி வருகின்றார்
மெல்ல தலை வழுக்கையென்று
மெல்லியர்கள் வெறுக்கின்றார்
நல்ல பண்பு மிக்க இவரை
நங்கையர் நீர் வெறுப்பதேன்?
மெல்ல உதிரும் கேசத்துக்கு
மேன்மையேது பெண்களே!

## அறுபதைத் தாண்ட அனைத்துமே வந்து சேரும்

கம்பியை வாய்க்குள் வைத்து
கடும் ஜுரம் என்று கூறி
வந்தது மலேரியா நோய்
வார்ட்டிலே படுப்பாய் என்றார்
குழலினை நெஞ்சில் வைத்துக்
கூடிற்று சளியும் என்றார்
பெட்டியில் வயரைப் பூட்டி
பிணைத்ததைக் கையில் கட்டி
உற்றது பிரசர் இனி நீ
உப்பினை விடுவாய் என்றார்
சலத்தினை சூடு காட்டி
சலரோகமும் உண்டு என்றார்
அறுபதை அகவை தாண்ட
அனைத்துமே வந்து சேரும்
உண்டிதான் இதற்குக் காலோ
ஊழ்வினையோ அறிகிலேனே!

## கைதடி – கண்டி வீதிக் கணபதியார்

கைதடியில் பிரதான கண்டி வீதியிலே
கட்டுகின்றார் கணபதிக்கோர் கல்லால் கோவில்
வைத்துவிட்டு விநாயகரைத் தெரு ஓரத்தில்
வரும்படிக்கு நாளும் தட்டேந்துகின்றார்
பையவே கல்லுடைக்கும் சத்தம் கேட்க
பல ஆண்டாய்க் கோயிலும் கட்டுகின்றார்
வையகத்தில் இப்படியோர் பிள்ளையாரை
வைத்தனரோ பலஆண்டு நடுத்தெருவோரத்தில்
ஐயனிவன் ஆலயத்தைவிட்டு வெளியே வந்து
ஆண்டதுவும் கால் நூற்றாண்டாகிப் போச்சு அன்றோ
பயத்துடனே அகதிகளாய் மக்கள் கூட்டம்
பலஆண்டாய் இத்தெருவில் அலைகின்றார்கள்
கஜமுகனும் இத்துன்பக் காட்சி யினைக் கண்டவாறு
கண்மூடி மௌனியாய் வாழ்கின்றாரே

தெய்வத்தைத் திருமுழுக்காட்டிப் பின்னே
திண்ணமுற ஆதிமூலத்தில் அமர்த்தினாலேயன்றி
மெய்யாக அமைதியிங்கு வந்திடாது
மேன்மையுற்று மக்களும் வாழமாட்டார்
பையவே கைதடியார் இதனைக் கேளும்
பக்குவமாய்க் குடமுழுக்காட்டி வையும்
கைதடிக் கணபதிக்கு களங்கமென்றால்
கடும் பழியும் கைதடிவாழ் மக்கட்கன்றோ?
ஐயமின்றி நம்நாட்டில் அமைதி பூக்க
அரோகரா. இத்தொண்டைப் புரிய வாரீர்.

## கிடக்கிறான் எட்டாம் வாட்டில்

அழகினில் இராமன் போல்வான்
ஆண்மையில் இராவணனை ஒத்தான்
தளர்விலா பக்தி மிக்கான்
தானதர்மத்தில் குமணன் போல்வான்
அளப்பெரும் அழகன் அன்னான்
அமெரிக்க நாடு சென்றான்
பழகினான் போதை வஸ்து
பலமாதருடன் உறவு பூண்டான்
வளமெலாம் இழந்து போக
வாடினான் எய்ட்ஸ் நோய் மேவ
கிழவன் போல் உடல் மெலிந்து
கிடக்கிறான் எட்டாம் வார்ட்டில்

## விஞ்ஞான விந்தை கண்டீர்

கால்சட்டை பைக்குள் இருந்துகொண்டு
கத்திற்று அணில்குஞ்சு தொனியிலொன்று
மெல்லவே அதனை எடுத்து அவனும்
மெதுவாக காதண்டை வைக்க
சொல்லிய சேதி கேட்ட போதே

சோர்வுற்று அலற லுற்றான்
"நல்ல உன் தந்தையார் இப்போ
நடுத்தெரு விபத்தில் சிக்கி

அல்லலுற்று இலண்டன் வீதிதன்னில்
அவ்விடத்தில் உயிர் பிரிந்ததென்று"
பலநூறு மைல்கட்கப்பால் அந்த
பண்புசேர் இலண்டன் நாட்டில்
குலமகன் உயிர் பிரியுமுன்னே
கூறிற்று செய்தி இங்கே
நலம் பெறு விஞ்ஞான விந்தையினை
நாநிலம் வியக்கு தன்றோ!

## ஆரிவள் அறிவீர் நீரே!

நேற்று நான் மாலை வேளை
நின்றனன் நல்லூர் அண்டை
உற்று நான் பார்த்தேன் ஒன்றை
ஒன்றுமாய்ப் புரியவில்லை
சற்றே கால் - சட்டை ஒன்றை
சரிவர இழுத்துமாட்டி
முற்றிலும் தலை முடியதனை
முழுதுமாய் ஒட்ட வெட்டி
வற்றிய உடம்பில் நல்ல
வாசனைப் பொருள்கள் பூசி
முற்றிலும் ஆங்கிலத்தில் ஏதோ
முணுமுணுத்து அவளும் செல்ல
சற்றே அருகில் சென்று கேட்க
சரவணமுத்து மாமா வீட்டில்
பெற்ற என் தாய் வாழுகின்றாள்
போவதற்கு வழி ஏதென்றாள்
அப்போது நான் அறிந்து கொண்டேன்
அட இவள் தமிழ்ப் பெண் என்று.

# நாட்டு நடப்பு

குழந்தைக்குப் பயிற்சி தந்து
கூட்டியே நடுநிசியில் சென்று
வளமாக யன்னல் பிரித்து
வளைத்துள்ளே அவனைத் தள்ள
மளமளவென மூட்டை கட்டி
மாயமாய் மறைவான் தம்பி
வளமான செயல் வீரர் வாழும்
வான் புகழ் சேர் ஈழநாடு.

கடல் தனில் மீன்களெல்லாம்
கவின்பெறப் பரந்து செல்லும்
அடவியில் மான்கள் கூட
அணி அணியாகச் செல்லும்
படர்ந்த புல் தரையினிலே
பசுக்களும் பரந்தே மேயும்
அட! ஆறறிவு படைத்தவனும் கூட
அப்படிப் போகின்றானே!

கலியாண மண்டபத்திலோ கதலி வாழை
கச்சேரி கேட்கவோ கனத்த பெரும் கூட்டம்
வலிய பெண் கேட்டு வந்தவராம் வரதர்
வாசிங்டனில் இவர் வகிப்பதோ பெரும் பதவி
வதனாவுக்கோ வயது பதினெட்டாகவில்லை
வழுக்கையருக்கோ வயதைம்பத்தாறு
சீதனக் கொடுமையால் சீரழிகின்றார் பெண்கள்
சீர்பெறவே நீவிர் தாருங்கள் திட்டம்!
கற்பகத்தைத் தூக்கியதாய் வழக்கு
கனகண்ணை மீது பிடி விறாந்து
"குற்றத்தை ஏற்கிறாயோ?" என்று
கோட்டிலே கேட்டாரே ஜட்யு

கற்பகத்தின் நிறையோ கிலோ நூறு
கனகனின் நிறையோ ஐம்பத்தெட்டு
ஏற்குமோ இவள் உடம்பைத் தூக்க
என்றதுமே "ஓடு" என்றார் ஐட்யு.

கல்லு பொறுக்கி யெல்லோ
காற்சட்டைக்குள் போட்டபடி
நல்லாற்றை நாடுவான்
நடந்து போறான் பள்ளிக்கு!
மெல்லக் கல் பொறுக்கி
மெதுவாகச் சேகரித்தால்
கல்லூரிப் பரிசளிப்புக்குக்
கணக்காய் எறியலாமாம்.

கந்தையா விதானை வீட்டில்
கடப்புக்கை கிழடர் கூட்டம்
வந்தனை செய்து வீழ்ந்து
வழங்குகிறார் கையில் லஞ்சம்
தந்ததோ சிறுதொகை தானே
தரமாட்டேன் பிச்சைப்படி
வந்து நீவீர் கிடுகு பின்னும்
வழங்குவேன் பிச்சைப் படி என்றானே!

கனகசபையர் கனகம்மாவோடு
கனடா புறப்பட்டார் ஒன்றாய்
இனசனம் பிள்ளைகுட்டி விட்டு
ஏகினார் மகன் அழைத்தானென்று
புதுமணத் தம்பதியர் போலங்கே
பூட்டினான் அறைக்குள் ஒன்றாய்
'இதுபோதும் 'பூதாக்கலம்' எமக்கு
இன்றே அனுப்படா நல்லூர்" என்றார்
புதுப்பூட்டு உடனே வாங்கி
பூட்டினான் கிழட்டை ஒன்றாய்.

"கன்னியாம் கனகசம்பன்னா" மென்று
கனிந்தே வேதியரும் செப்பிடவே
இன்புற்றுப் பலரும் அறுகரிசி போட
இனிதே திருமணமும் முடிந்து போச்சு
எண்ணி ஆறாம் மாதத்தன்று
இனியவள் ஈன்றாள் பெரு மகவு
எண்ணத்தில் பேரிடி விழுந்திடவே
எடுத்தான் ஓட்டம் கோட்டடிக்கு
'என்ன இது பெரும் புதினம்?' என்று செப்பி
ஏங்கியே தவித்துவிட்டார் இளைய ஐட்யு.

வெளி நாட்டால் வந்திருந்தான் வேணு
விவாகங்கள் பேசி வந்தார் நூறு
சுழிபுரத்துப் புறோக்கர் துணையாலே
சுந்தரிக்குத் திருமணமுமாச்சு
படுக்கைக்குப் போன முதல் இரவு
பவுடர் ஒன்றைத் தானிழுத்தான் வேணு
அடுத்த நாள் மதியம் கண்விழித்தபோது
அவள் போய்விட்டாள் தன்சொந்த வீடு.

வெய்யோன் ஒளி படர்ந்தந்த
வேலவன் தேர் மின்ன
கையோ தலை வைத்தடியார்
கதறி மன முருக
மெய்யோ சிலிர்த்தடியார் பலர்
மேனி புரண்டு உருள
'ஐயோ' என அடியாள் அழ
அறுத்த தாலியுடன் மறைந்தான்.

வயிற்றைக் கலக்கியதால் வாரி
வடலிக்குள் ஓடினான் பாவி
பயத்தோடு பனையண்டை பதுங்க
பலத்து வெடித்ததந்த நிலக்கண்ணி

அயலார் விரைந்தங்கு கூடி
அலைந்தார்கள் அவன் உடலைத்தேடி
வயலில் கிடந்தவனின் காலை
வழி நாய்கள் இழுத்தனவே கூடி.

செத்துவிட்டாள் முத்தம்மா குடலொட்டி
செய்தார்கள் 'எம்பாம்' அயலார் கூடி
பெத்தம்மாவுக்குக் கொள்ளி என்றெழுதி
முழுதாக சந்தனக்கட்டை எடுத்து
அத்தர் புனுகு திருநீறு பூசி
அதை அழகாய்ப் பொதி பண்ணி
மூத்த மகன் அனுப்பினான் பாஸல்
மூன்று மணிக்கு வந்தது பிளேனில்

சுப்பையா சோதிடர் மகன் மனோகரனும்
சுந்தரியை மணக்க மேடையேறலானான்
தப்பாது சுபநேரத்தைத் தந்தை சாற்ற
தனையனும் தாலியினைக் கையில் தூக்க
'பொறு!பொறு! சற்றே நில்" என்று
சடுதியாய்க் கத்தினான் 'ரீ.வி' க்காரன்
சீறியெழுந்தார் சாத்திரியார் கெட்ட
சகுணம் இதுவென்றார்
இறுக்கமாய் மாப்பிளையை இழுத்தவண்ணம்
இனி நடக்காது திருமணம் என்றுரைத்து
குறுக்காகக் கிடந்த மணப்பெண்ணைத் தாண்டி
குடல் தெறிக்க ஓடினார் மகனோடு
சிக்ஸர் அடித்த தோளும்
சிகரெட் பிடித்த கையும்
ஒன்றன் பின் ஒன்றாய் விஸ்கி
ஒரு சேரச்சுவைத்த நாவும்

மண்ணிறப் பவுடர் பைக்கற்
மனதார இழுத்த மார்பும்
கொண்டிடும் எயிட்ஸ் நோய் தாங்கி
கொழுநனும் பிளேனில் வந்தான்.

வேகுகின்ற வெய்யிலிலே வேலன் என்னை
விடாப்பிடியாய்க் கொண்டோடிப் போகிறார்கள்
ஆகுமட்டும் ஆறுதலாய் வீதிவலம் வந்தால்
அருமையாய் நாதஸ்வரம் நானும் கேட்பேன்
பக்குவமாய்ப் பண்பாடும் பக்திப் பாடல்
பரவசமாய்க் கேட்பதற்கு நேரம் ஏது?
முக்கியம் நேரம்தான் இங்கே என்றால்
முழுதாக என்னை உள்ளே பூட்டி வையும்
இக்குறையை இயற்றடா கவியாய் என்றான்
இயம்பினேன் விரும்பினால் ஏற்றுக்கொள்ளும்.

"நாலுமாதம்" என்றாயடி நேற்று
நாகம்மா பொங்கை சைக்களிலை போறாள்
பாலு கொண்டோடிப்போய்க் காட்டி
படிப்பிற்கிடைஞ்சல் என்றானாம் கெஞ்சி
பிறசர் என்று பெட்டியைச் சாட்டுக்குப் பூட்டி
பேரம்பலத்தார் அழிச்சுப்போட்டாராம்
இரக்கமில்லாத இப்பரியாரியார்
இரண்டாயிரமும் வாங்கிப் போட்டாராம்.
நல்லூர் வீதியிலோர் குட்டி
நல்ல நிறம், கண், காது, மூக்கு!
மெல்ல மெல்ல எல்லோரும் பார்க்க
மெதுவாய் அணையுதடா என் பக்கம்

நல்லபடி கட்டிக்கொண்டு நான் போனால்
நாலுதை தருவாளடா நல் அம்மா பாட்டி
செல்லர் வீட்டு பொமனேரியன் என்று
சிவனேசன் இழுத்துக்கொண்டு போறான்.

நந்தினியின் நளினம் தன்னில்
நாதனும் மதிமயங்கிப் போனான்
மந்தபுத்தி மிகுதியினால்
மனம்போல அள்ளிக் கொடுத்தான்
இந்த எழில்மிகுந்த கன்னி
எனக்கென்றே பறை அடித்தான்
தந்திரமாய் அவள் அறியாவண்ணம்
தான் மட்டும் மன்னார் போனான்
நந்தினியின் குழந்தைகளை கணவன்
நலம்பெற வளர்க்கக் கண்டான்.

தேரேறி திருமுருகன் திருவுலா வருவதை
திரண்டடியார் காணவந்தார்
சீராக நான் இன்று திருவுலா வரவுள்ளேன்
சீரடியார் குழப்ப வேண்டாம்
ஆராத காதலுடன் அறுமுகன் எண்ணியதை
அடியோடு ஒதுக்கிவிட்டார்
தீராத கோபத்தில் செவ்வேள் முருகன் அவன்
திருத்தேரைத் தடுத்து வைக்க
அரோகரா என அலறி அழுகுரல் ஓங்கவே
அத்தேரை நகர வைத்தான்.

நல்லூரான் திருவிழாவை நாடி
நாரதரும் புறப்பட்டார் ஓடி
எல்லா இடமும் சென்று தேடி
ஏது வழி என்றாரே வாடி
"நில்! ஓய்! எங்கே போறே?" என வினவ
நீல மயில் வாகனனிடம் என்றார்
"இல்லை ஐயா அவன் அங்கு இல்லை
இரண்டு வாரம் கொழும்பு போச்சி!" என்றான்.

நல்லூரான் வீதித் தேரும்
    நயினையாள் தந்த அமுதும்
வல்ல சந்நிதியான் மடத்தில்
    வயிறார உண்ட சோறும்
மெல்லவே வல்லிபுரத்தான் தேரை
    மெதுவாக இழுத்த நாளும்
எல்லாமே ஒன்று சேர்ந்து
    ஏரம்பர் மனதை வாட்ட
அல்லும் பகலும் எண்ணி
    அழுகின்றார் கனடா நாட்டில்.

மொட்டையர் ஆளோ கட்டை
    முழுதுமாய்த் திருநீற்றுப் பட்டை
கொட்டையால் மாலை இரண்டு
    கட்டியதோ காவிப் பட்டு
பக்கத்துக் கிணத்தருகே சாமி
    பக்குவமாய்க் கழட்டி வைத்து
முக்காலே மூன்றுவாளி தண்ணி
    முழுதுமாய்க் குளித்து விட்டு
பக்கத்துக் கொட்டில் பூந்தார்
    பருகினார் புளித்த கள்ளு.

மும்மணிகள் ஆசி என்பார் புத்தர்
    முழுதும் அதன் பொருளறிய மாட்டார்
இம் மண்ணில் பல மணிகள் ஒலித்தும்
    இதுவரை பயனென்ன கண்டோம்?
அம்மணி ஆணையிட்டதாலே
    அகழ்கின்றார் அறிஞர்கள் கூடி
செம் மணியை அறியாதோர் இந்த
    செகத்திலுண்டோ செப்படி தோழி.
முத்தம்மான் 'உதயன்' வாங்கி வந்து
    முழுதுமாய்க் குறித்துக் கொள்வார்
அந்தியேட்டி, பிறந்தநாள், ஆட்டத்திவச வீடு,
    அரிய பூப்புனித நீராட்டல்,

செப்பரும் பூணூல் சடங்கு மற்று
சிறப்புறு கலியாணவீடு
முந்தியே முதல்சபையில் குந்தி
முழுதுமாய் வெட்டி விட்டு
அப்பனே 'உதயனே' நீ!
ஆண்டு பல்லாண்டு வாழ்கவென்பார்.

முட்டை விற்கும் முத்துப்பாட்டி
முதுகெலும்பு வளைந்த மூதாட்டி
இட்டமுடன் இருபாலைக்கு நடைபோட்டு
இளைய பேத்தி வீட்டுக்குப் புறப்பட்டாள்
கட்டைப்பிராய்ச் சந்தியிலே 'ரவுண்டப்' பாம்
காட்டுங்கள் 'ஐடென்ரி' என்றனராம்
மட்டை பெறாத காரணத்தால் பாட்டி
மறிக்கப்பட்டாள் மணிக்கணக்காய்!

மாலை மரியாதை மேளம்
மக்கள் புடை சூழப் பவனி
காலை வேளையில் கோட்டடியில்
கலியாணமோ? பாரடி கனகி
வேலை தேடித் திரிந்த எங்கள்
வேதாசலத்தார்க்குப் பதவி
வாலைக் குமரன் போல் வாரார்
வாச்ச பதவி ஒரு ஜே.பி.!

முன் ஆசனத்தில் வீற்றிருந்த தொன்று
முழுக் குடுமி மாலை அத்தர் காப்பு
இன்பமுறத் தொட்டு விளையாட
இடம் கொடுத்தே நெளிந்ததந்த மாது
'இன்ரேவல்' மணி அடிக்க வெளிச்சம்
இன்பமுற இவன் மாதைப் பார்த்தான்
முன் இருது சிவஸ்ரீ குருக்கள்
முணுமுத்தார் 'சொறி' என்னம் கொஞ்சம்
முத்தம்மான் தடல் புடலாக
முழங்குகிறார் மேடையிலை கேளன்

"செத்துத்தொலையுதாம் சனங்கள்
சீரழிக்கு தாமிந்தக் கசிப்பு"
இப்ப தான்ரி காப்போத்தல் வாங்கி
இடுப்பிக்கை செருகினார் முத்தர்
தப்பாது உவர் பிரசங்கம் பண்ண
தாலி அடைவிலை அவள் படும் பாடு.

## அபலையின் கடிதம்

**ஜனாதிபதி அறிவது!**

ஒழுகிடும் ஓலைக் கொட்டில்
ஒடிந்ததோர் மேசையோடு
முழுதுமாய் முடமாய்ப் போன
மூன்றுகால் கட்டில் ஒன்று
பழுதிலாக் கலப்பை ஒன்று
பாங்கான எருது இரண்டு
வழுவிலா உரல் உலக்கை
வண்டியும் ஒன்றைவிட்டு
எழுந்து நீ ஓடு என்ன
இடுப்பிலே குழந்தையோடு
முழுதுமாய் வலக்கால் போன
முடவனாம் கணவனோடு
அழுது கொண்டோடிவந்து
அரசமரத்தண்டை வாழுகின்றேன்
பழுதிலாப் பத்து ஆண்டு
பறந்துபோய் விட்டதம்மா
எழுந்து நான் வீடு போக
இன்னும் எத்தனை ஆண்டு ஆகும்
குழந்தையும் குமராய்ப் போக
குடித்தனம் இனி தெருவில் தானோ?

இப்படிக்கு
அநாதை அபிராமவல்லி

அகதிகள் முகாம்,
அரசமரத்தடி, யாழ்ப்பாணம்.

## அம்மா போட்ட சட்டை

குலமகள் தேர்த் திருவிழாவிற்கு
கூட்டியே மகவைச் சென்றாள்
அலைகடல்போல மக்கள்
ஆங்கே திரண்டனர் ஒன்று கூடி
தலைமகள் தனைப்பிரிந்து
தவித்தது அப்பெண் குழந்தை
மலைத்த அக்குழந்தையோ
"மம்மி"யென்று அலறலுற்றாள்

அம்மாவின் சேலையை ஏன்
அன்புடன் நீ பற்றவில்லையென்ன
அம்மாவோ சேலை கட்டிக் கொண்டு
ஆலயம் செல்வதில்லை என்றாள்
அம்மாவின் சட்டையை ஏன்
ஆதாரமாய்க் கொள்ளவில்லையென்ன
அம்மாபோடும் சட்டையோ
அதி மிக உயரம் என்றாள்
அம்மா அண்டை துள்ளிப் பார்த்தேன்
அகப்படவில்லை சட்டை என்றாள்.

## பணம் படுத்தும் பாடு

காசு இன்றி மனித வாழ்வு
கசந்து போவது நீதியோ?
காசு பணம் எண்ணியோ
காட்டில் விலங்கு வாழுது
காசு பணம் வந்ததாலே
கனத்த சண்டை ஆச்சுது
காசு உள்ள மூடனை
கட்டி அணைக்கும் உலகிது
காசு அற்ற அறிஞனைக்
காறி உமிழ்ந்து தூற்றுது

காசைக் கட்டி தெருவில் போட்டால்
காக்கை குருவி கொத்துமோ?
காசு இன்றி வாழும் நாள்
காசினியில் மலருமோ?

## சொல்லாமல் உண்டாள் நஞ்சு

சல்லி முட்டி கொண்டு
தான் சேர்த்த சில்லறையால்
நல்லவள் நாகம்மாவும்
நால் மூன்று முட்டை வாங்கி
செல்லமாய் வளர்த்த கோழிகொண்டு
சிறப்புற அடையும் வைத்தாள்
எல்லாமாய் இருபது நாள்
எண்ணியே முடித்த பின்பு
மெல்லமாய் குஞ்சொவ்வொன்றாய்
மெதுவாகத் தலையை நீட்ட
பொல்லாத "ஷெல்" வந்துவீழ
பொசுங்கிற்று குடிசையொன்றாய்
எல்லாமே இழந்தோம் என்று
ஏங்கியே நாகம்மாவும்
சொல்லாமல் நஞ்சை உண்டு
சொர்க்கம் போய் சேர்ந்தாளன்றோ!

## கேடு வந்து சூழ்ந்திடும்!

ஓட்டைப் பிரித்த கள்வனுள்ளே
ஓடி ஓடித் தேடினான்
இட்டம் போலக் குடித்துவிட்டு
"இன்பன்" வீட்டில் உறங்குகிறான்
கெட்டவெறியில் வாய் புலம்பி
கொண்டா "வாளை" என்றதும்
எட்ட நின்று கண்ட கள்வன்
ஏங்கித் துடித்து ஓடியே

கிட்டக் கிடந்த கிணற்றில் வீழ்ந்து
கிடுகிடுத்து நடுங்கினான்
துட்டனந்தக் கள்வனைப் போய்த்
தூக்க யாரும் வரவில்லை
முட்டக்கிடந்த நீரிலவன்
மூழ்கி மாண்டு போயினான்
கெட்ட வழியில் வாழ்பவரைக்
கேடு வந்து சூழ்ந்திடும்
இட்டம் போலக் களவெடுப்போர்
இதனை மனதில் கொள்ளுவீர்!

## அனைத்தையும் இழந்தார் ஒன்றாய்

மாடதும் கன்று போட்டு
மணியாறு ஆகவில்லை
கூடத்தில் குரக்கன் கூழும்
கொதித்தின்னும் ஆறவில்லை
பாடத்துப் புகையிலையும்
பதப்படுத்திப் பிரிக்கவில்லை
வீடதில் விழுந்த குண்டு
விளைத்திடக் கொடிய நாசம்
ஓடினாள் சுகிர்தம் ஓடி
உழுகின்ற கணவனுக்கு
மாடதும் வீடும் ஆடும்
மாண்டது ஒன்றாய் என்றாள்
ஆடவன் மறத்தோள் வீரன்
"அஞ்சாதே! என உரைத்து
நடந்தனன் வன்னி நோக்கி
நாட்டினான் குரக்கன் அங்கே
"அட இச் சுதந்திரத்திற்காக
அனைத்தையும் ஏற்போம்" என்றான்.

## பாட்டி சேர்த்த பணம்

பாட்டி பெரிய ஈச்சாப்பி
பணத்தை மிகவும் சேமித்தாள்
கட்டி படலை பூட்டியே
காசை எண்ணிச் சேமிப்பாள்
வெட்டி அரைக்கால் பாண்வாங்கி
வெந்நீர் தொட்டுத் தின்னுவாள்
இட்டம் போலப் பணம் சேர்த்து
இட்டு வைத்தாள் பானையில்
எட்டி இரவு பானையில்
இட்ட காசை எடுக்கையில்
கெட்டியாக இரண்டு எலி
கிழவி மீது பாய்ந்தது
முட்டி தன்னைத் தூக்கியே
முழுதுமாகப் பார்க்கையில்
வெட்டி அந்தக் காசெல்லாம்
வெள் எலிகள் தின்று விட்டன
பாட்டி இதனைப் பார்த்ததும்
பரிதவித்து அலறினாள்

## விதியினை வென்றார் யாரோ!

பத்மினியை மணந்து அவன்
பதினாறு நாள் ஆகவில்லை
மெத்தவே தலையிடி என்று
மோகனும் முணு முணுக்க
உத்தமி கூட்டிக் கொண்டு
உடன் சென்றாள் "டாக்டரிடம்"
மெத்தவே "பிறசர்" என்றார்
மேலும் சலத்தினில் சீனி என்றார்
பத்திரமாய்ப் பாருமென்றார்
பழுதுண்டு "கிட்னி" என்றார்

பத்தியம் மிகக் கடுமை
படம் பிடிக்க வேண்டுமென்றார்
புத்திரப் பேறோ உமக்கு
பூச்சியம் என்றே சொன்னார்
உத்தமி சிரித்தே சொன்னாள்
ஊழ்தனை வென்றார் யாரோ?
எத்தனை பேசிவந்த போதும்
ஏந்திழை இவனைச் செய்தாள்.

## கைக்கு எட்டியது வாய்க்கெட்டுமா?

ஐயனோ அரங்கம் ஏறி
அனைவரிடம் கையை ஏந்தி
பையவே பணமும் சேர
பக்குவமாய் மூடை கட்டி
கையிலே கனத்த மூடை
காவியே கொண்டு வாறார்
தையலாள் எமது அம்மா
தனிப்பெரு வீர நங்கை
கை எழுத்ததனை யிட்டு
கலைத்திடில் நாடாளுமன்று தன்னை
ஐயகோ! ஆண்டி மண்ணால்
அமைத்த பொய்க் கோபுரமும்
பையவே சரிந்து வீழ
பரிதாபமாய்ச் சிரிப்பரன்றோ
கையினுக்குக் கிடைத்த காசும்
வாய்க்கெட்டாமல் போயிடுமோ?

## வெஞ்சமர் மூளுமோ?

ஆகுமோ வெஞ்சமர் அமைதியும் குலையுமோ
சாகுமோ சமாதானமும் சண்டைதான் மிச்சமோ
உலகெலாம் எம்நிலை உணர்ந்து கொண்டபின்
பலமெலாம் கொண்டெமை பகைவர் அழிப்பரோ?

கூடியே கோடிகள் கொட்டிட நினைத்தவர்
நாடிவந் தெங்களின் நலன்களைக் காப்பரோ
ஓடியே அவரெலாம் ஒளிந்து நின்றபின்
கூடியே வந்தெமைக் கொன்று குவிப்பரோ?

நாளெலாம் பொழுதெலாம் நம்பியே இறைவனை
வாழ்வெலாம் அவனையே வழுத்திய மக்களை
ஆளலாம் அடக்கலாம் அடிமை கொள்ளலாம்மென்பது
வாளதால் நீரதை வெட்டுமாப் போன்றதே.

## விடியும் நேரம் நெருங்குது

படை நடத்திப், போர் தொடுத்து
பணியவைத்துப் பகைவர்
அடி பணிந்து தலை குனிந்து
அகன்று சென்ற நாளினை
கொடிய போரின் வெப்பம் நீங்கி
குளிர்ந்து சிவந்த மண்ணிலே
விடிவு மிக நெருங்கும் வேளை
வந்த தென்று முழங்கியே
நெடிய வானில் கொடி யசைய
நின்று வணங்கித் தொண்டர்கள்
இடியிடிக்க மழை பொழிய
இணைந்து சென்று வீரர்கள்
முடி யணிந்து தலைவன் புகழ்
முழக்க மிட்டு நின்றனர்.

## இப்படியும் ஓர் கண்ணீர் அஞ்சலி

ஒப்பரும் கள்வனாக ஒருவரும் பிடியா வண்ணம்
எத்தனை தாலிதனை இழுத்து நீ அறுத்துக்கொண்டாய்
தப்பியே ஓடுவதில் தன்னிகர் அற்ற கள்ளா
தந்திரமாய் ஓடுபிரிப்பதில் தனக்கிணை அற்ற தீரா!
அப்பையரைக் கட்டி வைத்து அனைத்தையும் சூறை ஆடி
அவர் உயிர் பறித்திடாத ஆன்மீக வாதி நீயே!
கப்பங்கள் நிறைய வாங்கி கசிப்பினைக் காய்ச்சி விற்றாய்
எத்தனை பசுமாடு கன்று இரவினில் அவிழ்த்து விற்றாய்
இப்ப நீ இறந்ததாலே இவ்வூரே மகிழுதடா
தப்பித்தவறி நீயும் தமிழனாய்ப் பிறந்திடாதே
அப்படிப் பிறப்பதானால் ஆடு மாடாய் பிறந்திடடா!

அங்கொரு வயது வந்த
அழகிக்குத் திருமணம் பேசி
சங்கரன் சமய பக்தன்
சான்றாண்மை மிகவும் மிக்கோன்
பண்புள்ள பட்டதாரி தன்னை
பார்த்திடப் பாவை வந்தாள்
கையினில் சிகரட் இல்லை
கழுத்தினில் சங்கிலியும் இல்லை
வெண்மைசேர் வேட்டிகட்டும்
வித்தகரை நான் விரும்பேன் என்றாள்
கட்டுவேன் காற்சட்டை மாட்டி
கரத்தினில் "சிகரட்" தாங்கி
இஷ்டம்போல் "கொண்டா" ஓடும்
இளைஞனையே முடிப்பேன் என்றாள்.

## கம்பன் கடத்தப்பட்டான்

உலகவாழ் தமிழர் எல்லாம்
உவப்புடன் இங்கு வந்து
நலம்பெறு தமிழர் வாழ்வை
நாம் காண வந்தோம் என்றார்

எழில்பெறு கம்பகோட்டம் வந்தார்
எதனையுமே கண்டார் இல்லை
விழிப்புலன் அற்ற வெளவால் அங்கு
வியப்புடன் கண்டோர் தொங்க

வல்ல அக்கம்பன் தன்னை
வருந்திடக் கடத்திச் சென்றார்
எல்லோரும் இழுத்துக் கொண்டு
ஏகினார் கொழும்பு நோக்கி
கலங்கிய கண்களோடும்
கனத்த பேர் கவலையோடும்
தலைநகர் விட்டு நானும்
தப்பியோடுவேன் என்றான் கம்பன்

## யார்தான் வாழ்த்தப் போகிறார்?

ஊரெல்லாம் வீதி யெல்லாம்
உள்ளூறை கிராமம் எல்லாம்
சீரெலாம் ஒன்று சேர
சிறப்புறப் பந்தல் நட்டு
ஆறாத காதல் மேவ
அலையென மக்கள் கூடி
பாரெலாம் புகழ்ந்து போற்றும்
பைந்தமிழ் சிவபூமிதன்னில்
சீரான சைவப் பண்பை
சிறப்புற எடுத்துக் காட்டில்
பாரோங்கு சைவப் பண்பிங்கு
பல காலம் நிலைக்குமன்றோ
ஆரையா கொழும்பு சென்று
அம்பலத்தரங்கு ஏறி
வாராது போல் வந்த வாய்ப்பை
வாழ்த்தியே மகிழப் போகிறார்?

## அவனியின் முதல்வி நீயே!

பாரதி தன் பாட்டினாலே
பருக்கினான் தமிழ் உணர்வை
தீராத தமிழ்ப்பசிபோக்கத்
தீத்தினான் கண்ணதாசன்

சீராகப் பசி மாறாதபோது
சேக்கிழார் குழைத்துத் தந்தார்
ஆராத காதலோடு எனக்கு அரும்பாலைக்
கம்பன் தந்தான்
பேரான ஔவைப்பாட்டி
பெரும் கனி பிழிந்து தந்தாள்
நேராக வாழ்வாய் என்று
நெறி சொன்னான் குறளின் ஆசான்
ஊரார்க்கு ஊழ்வினை சொல்ல
உணர்வினை இளங்கோ தந்தான்
பாருக்கு இவரைத் தந்த
பைந்தமிழ் தாயே அன்றோ
ஆரம்மா ஈடுனக்கு
அவனியின் முதல்வி நீயே!

## குமரனும் கிழடனும்

அப்பியாசக் கொப்பி கொண்டு
அன்று பள்ளிக்கூடம் சென்றவன்
கொப்பி கொண்டு பொல்லு மூன்றி
குளிகை வாங்கப் போகிறான்
அப்பியாசக் கொப்பி கொண்டு
அநேக கிழடு அவனோடு
கொப்பி காட்டிக் குளிகைவாங்க
காத்திருக்கு வாங்கினில்
கொப்பி வாங்கி அடுக்கி வைத்துக்
குளிகை எண்ணிக் கொடுக்கிறார்

கொப்பியில்லாக் கிழடுகளை
கொதித்து விரட்டிக் கலைக்கின்றார்
கொப்பிகொண்டு பள்ளி செல்லும்
குழந்தைகளே! கேளுமின்
கொப்பியோடு பொல்லூன்றும் நாள்
கொஞ்ச ஆண்டில் வந்திடும்

பட்டினத்தில் என்னடி பதற்றம்
பாரடி வாகனங்கள் நூறு
ஒட்ட ஒட்ட ஒவ்வொன்றாய் நகர
ஒரு மணித்தியாலமாகுதடி ஏன்ரி?
கூட்டம் கொஞ்சலியோ பாரன்
குண்டுகிண்டு வெடித்ததோ கேளன்
கிட்டங்கி பெற்றோல் செட்டில்
கியூவில் கொடுக்கினமாம் பெற்றோல்!

பொன்னரம்மான் பொலிகண்டி விதானை
பூத உடல் நீத்தாராம் நேற்று
அன்பு மனைவி அன்னக்கா சென்ற ஆண்டு
அமெரிக்காவில் வாங்கிவிட்டா வீடு
முன்னவளும் பின்னவளும் கனடாவில்
முடிச்சாச்சாம் கலியாணம் அங்கு
பொன்னரைப் பொலிதீனில் பாக் பண்ணி
அன்னக்கா அனுப்பட்டாம் அமெரிக்கா இன்று.

பொன்னர் மகள் புனிதாவை
பொடியள் விட்டுத்துரத்த
ஒன்றன் பின் ஒன்றாக
ஊரார் கொட்டனுடன் ஓட
நன்றாய் ஒலிம்பிக்ஸ் மரதன்
நடக்குதென வியக்க

பின்னாலே பிஸ்டலுடன்
பொலீஸார் விட்டுத்துரத்த
இன்று ரியுசன் இதுதான் எனப்பெடியள் இயம்பி
இளைப்பகலக் குடித்தார்
'கூல் பெப்ஸி”

பேயுடன் சேர்வேன் வேண்டில்
பிசாசுடன் சேர்வே னென்றீர்
ஆயுள் உள்ள மட்டும் அம்மா
ஆரோடும் சேர்ந்து ஆளும்
இராமரே ஆண்டால் என்ன
இல்லை அனுமனே ஆண்டாலென்ன
தீராத எம் பிரச்சினையை மட்டும்
தீர்க்கவேன் மனது இல்லை?
பாரா முகமாய் இருப்பீரானால்
பாதிப்பால் நாடே சாகும்.

குருக்கள்மார் ஒன்று கூடி
கோட்டடியில் பெரிய கூட்டம்
பெருத்த காரில் டிரஸ்டிக் காரர்
பெருமெடுப்பில் வந்து சேர்ந்தார்
திருவிளக்கு, திருவாசி, செம்பு, குடை
தெருக்கரையில் பறித்திருக்கு
குருக்களுக்கோ டிரஸ்டிக்கோ
"ஐயனார்" சொந்தமென்று
உருப்படியாய் தீர்ப்பெழுதி
உயர் கோட்டால் வந்திருக்காம்

கையை வெட்டடா! காலை வெட்டடா!
கழுத்தைக் கொஞ்சம் இழுத்து வெட்டடா!
ஐயோ! ஐயோ!! அடிக்காதை யென்று
அலறித் துடிக்கிறான் ஆண் ஒருவன்

காவலரும் அயலவரும் கத்தியோடு சென்று
கதவைத்தள்ளித், திறந்து பார்த்தால்
பாவமந்த கிழட்டு "ரெயிலர்" மகனுக்கு
பழக்கிறான்கோட்டு சூட்டு வெட்ட பழக்கிறான்

"கொட்டனும் கையுமாய்
எங்கயடி உவன் போறான்?"
"கொட்டில் ரியூட்டறிக்குக்
கொண்டு போறான் கொழுப்பேறி
வாத்திக்கு இப்ப கொஞ்சம்
வாய் முத்திப் போச்சுதாம்
காத்திருக்கிறானாம் தம்பி
கட்டாயம் ஒன்று போட !”

கும்பியாய்க் குறுணிக் கல்லு
கூடத்தில் ஏனடி கிடக்கு?
தம்பரம்மான் பொழுது போக்காய்
தான் பொறுக்கிச் சேர்த்ததிந்தக் கல்லு
எங்கள் சங்கக்கடை அரிசி வந்தால்
எல்லாம் பொறுக்கி இவர் எடுப்பார்
தங்கச்சிக்கு மதிலொன்று கட்டடத்
தான் சேர்க்கும் கல்லென்பார் தம்பர்

## கீரிமலை புனித தீர்த்தம்

ஈழத்துக் கீரிமலை என்னும் தீர்த்தம்
ஈசனவன் நீராடும் இனிய தீர்த்தம்
அழகான கடற்கரையில் அமைந்த தீர்த்தம்
ஆன்மீக நாட்டமுள்ளோர் ஆடும் தீர்த்தம்
நகுலமுனி போற்றி நின்ற நல்ல தீர்த்தம்
நம் பிதிர்க்கு நற்கடமை செய்யும் தீர்த்தம்
மகேஸ்வரனார் மனம் வைக்கில் இந்தத் தீர்த்தம்

மாபெரிய சிவ தீர்த்த மாகும் அன்றோ?
ஒருகோடி பணமதனை ஒதுக்கிவிட்டால்
ஒப்பரிய தீர்த்தமதாய் மாற்றலாமே!
சிவமகாலிங்கமிதைப் பேணிக் காக்கின்
சிவனாரும் உமையவளும் மகிழ்வரன்றோ?

## கந்தன் கழல் பணிந்தால்...

உண்டெனவே நம்பி உருகிமனம் குழைந்து
கண்கசிய கந்தன்கழல் பணிந்தால் வண்ணமுற
வேலன் அருகிருந்து வேண்டுவன தந்திடுவான்
காலன் கை ஓங்காது காண்.

## கொற்றவேல் உதவாதோ சொல்!

கொடிய தொழு நோய் வந்தே
கொன்றது இரமண ரிஷியை அன்று
கடிதினில் வந்த கான்சர் நோயே
கவர்ந்தது இராமகிருஷணர் ஆவிதன்னை
இடித்த அப்பசுவால் அன்றோ
இடர்பட்டு யோகர் மாண்டார்
துடித்திட யானை தூக்கி வீச
துடிதுடித்துப் பாரதியும் மாண்டான்

முடிவிலாது அகிம்சைகாத்த அண்ணல்
காந்தியைக் கோட்சே கொன்றான்
அடித்துப் பல ஆணி ஏற்றியன்றோ
அருள்மகன் யேசு மாண்டார்
முடிவுதான் என்ன வென்றால்
முழுதுமே முன்வினையே என்பார்
விடிவெமக்கில்லை என்றால்
முன்வினையதும் விதியோ சொல்லு?
கொடிய இவ்வினையை வெல்ல
கொற்றவேல் உதவாதோ! சொல்!

### யோகர் சுவாமிகள்

இன்றிருளை நீக்கி யெழுந்த கதிரவன்போல்
அன்றென் அகவிருளைத் தீர்ப்பதற்குக் - குன்றுபோல்
வந்தானொருவன் வளஞ்சேரும் நல்லூரில்
தந்தா னருளெனக்குத்தான்

## நல்லைக்கந்தனை நாளும் தொழுவோர்க்கு.....

நல்லைக் கந்தனை நாளும் தொழு வோர்க்கு
வல் வினை நோய் வந்து மிக வாட்டா தாம்
கல்விப் பெரும் செல்வம் கலைஞானம் கை கூடும்
வல்லவராய் வாழ்வர் சிறந்து.

### வா தினம் வெளி வீதியே!

கொட்டும் வெய்யிலின் கொடுமை போக்கிட
குளிர வைத்தனை மாமழை தூவியே!
எட்டுத் திக்கும் வானவர் சூழ்ந்திட
எங்கும் மாமணி ஒலி கிளம்பிட
பட்டுக்குடையுடன் பவனி வந்துநீ
பக்தர்கள் மனச் சஞ்சலம் போக்கினை
மட்டிலா மகிழ்ச்சியில் மக்கள் மகிழ்ந்திட
மாமலர் தூவி நின் மலரடி பணிந்தார்
விட்டுவிட்டெமை நீ உள்வீதி வலம்வரின்
விம்முதல் அன்றி வேறெது செய்குவோம்
கட்டழகா! உன் கவின்நிறை வேலுடன்
கனகமா மயில்மிசை வா தினம் வெளியிலே.

## உலகினிற்குத் தலைவன் என்றே உரைத்ததும் பொய்யாய் போச்சோ

பாலொடு மிளகு மட்டும்
பருகியே ஆறு நாளாய்
சீலமாய் ஊண் உறக்கம் விட்டு
சிறப்புறு விரதம் பூண்டு
ஓலமிட்டு அலறி அன்பர்
ஒழிவின்றிக் கண்ணீர் மல்கி
வேலவா முருகா என்றே
விம்மியே கதறக் கண்டாய்
கோல மா மயில் மீதேற்றி
கொற்றவர் உனைப் பணிந்தார்
பாலனாய் படைத்த வெற்றி
பாரினில் மறப்பாருண்டோ
நலம் திகழ் கண் ஈராறும்
நற்செவி பன்னிரண்டும் கொண்டு
கலங்கிடும் கண்ணீர்க் காதை
கண்டு நீகேட்டிலையோ
உலகினுக்குத் தலைவன் என்றே
உரைத்ததும் பொய்யாய் போச்சோ
நிலமிசை அமைதி பூத்து
நிம்மதி காண வைப்பாய்.

## நல்ல தீர்வொன்றைத் தா!

மூ(ட்)டை கட்டிச் சுமந்து முள்ளெலும்பு நொந்திடவே
வீட்டை விட்டு நாம் வெளியேறி ஓடாமல் - இட்டமுடன்
பக்தி மிகப் பூண்டு பாதமலர் பணிகின்றோம்
தக்க நல்ல தீர்வொன்றைத் தா.

# கந்தன் கழலினைப் பணிவோம்

இமயத்தில் ஈசனொடு இருந்த அந்த உமையாள்
ஈழ நல்லூர் சென்றுவர ஈசனிடம் வேண்ட
உமையவளின் விருப்பமதை உடன் நிறைவு செய்ய
உவந்து ஒரு இடபத்தில் உடனிங்கு வந்தார்
அமைதியின்றி அவதியுறும் அம் மக்கள் தமைக் காக்க
அருள்புரிய வேண்டுமென அன்னை மிக வேண்ட
நம்மை இந்த நாட்டு மக்கள் நம்பி நிதம் வாழ
நல்லையினை பார்த்து வர நாம் செல்வோமென்றார்
அம்மையுடன் அப்பனிவன் அழகு நல்லை வந்தார்
அளப்பரிய பக்திதனை அகமகிழக் கண்டார்
உமையவளும் ஈசனுடன் உடனிருந்து காலை
உருளும் அடியார்களுக்கு உளமுருகி நின்றார்
இமையளவும் நாமினி இனிக்கலங்க வேண்டாம்
இனியிங்கு அருள் பொழிய இரங்கிடுக என்றாள்
அமைதியுடன் விடிவு பெற ஆனவற்றைச் செய்வேன்
அஞ்சற்க அபயமென அவனுறுதி சொன்னான்
இமையவான் சொன்னதும் இனிப்பொய்க்குமாமோ
இன்னும் சில மாதமே இருக்குதடி என்றான்
அமைதி பெற அன்னை தமிழ் அரியணையில் ஏற
அழகனிவன் அடியிணையை அனைவருமே பணிவோம்.

– விகடகவி

# மண்ணில் போரும் ஓய்க!

பண் நிறை பவளச்செல்வி
பார்வதி பரம னோடு
கண்நிறை கமலக் கண்ணன்
கந்தனைக் காண வேண்டி
விண்ணிறை கயிலை விட்டு
விடைதனில் விரைந்து ஏறி
நண்ணினர் நல்லை தன்னை
நலம் திகழ் மகனைக் காண

அண்ணலோ டிணைந்து அன்னை
அழகன் வேலவனைக் கண்டார்
பொன்னொளிர் கதிர்வேலன் தன்
புகழினைப் பாடக் கேட்டார்
வண்ணமார் நல்லூர் உள்ளே
"வருகவென" முருகன் வேண்ட
கண்ணுதல் ஈசனோடு அன்னை
கனகமாபீடம் சேர்ந்தார்

இன்புற இங்கு வந்தோம்
இனிதுளம் மகிழ்வு கொண்டோம்
வண்ண வேலவனோடு இங்கு
வாரம் மூன்று தங்கப்போறோம்
என்றுமே வந்திடாத ஈசன்
இணையடி இங்குற்றதாலே
மண்ணதில் போரும் ஓயும்
மகிழுவர் மக்கள் எல்லாம்.

# கண்ணா கண்ணையேன் மூடிவிட்டாய்

கண்களை மூடி விட்டாய் - கண்ணா
காரணம் யாது சொல்லு
பொன்னொளிர் பொன்னாலையிலே - நீ
போய்ப் பார்த்து வரவிலையோ
வண்ணைப் பெரும் பதியினை - நீ
வந்து பாராததென்ன சொல்லு
நண்ணிய பக்தர்களை - நீ
நாகேஸ்வரத்தினில் கண்டிலையோ
வண்ண வல்லிபுரத்தினிலே - நீ
வாழ்வதும் பொய்யாமோ?
கண்ணா! எனக்கதறி அழ-நீ
கமலக்கண்களை மூடிவிடில்
உன்னைத் தொழுவதிலே - கண்ணா
உண்மையில் என்ன பலன்?
கண் கண்ட தெய்வமெனில்
கண்ணா! கட்டுக்கதையாய் மாறிடுமோ!

– விகடகவி

# ஏன் விரைவாக வலம் வருகின்றாய்

பொல்லினை ஊன்றிய முதியவர் ஓர் பால்
பூவினைச் சூடிய பூவையர் ஓர் பால்
மெல்லிய 'பெல்ஸ்' அணி வாலிபர் ஓர் பால்
மேன்மை சேர் சைவ அடியவர் ஓர் பால்
சொலாணாத் துயரினில் துவள்பவர் ஓர் பால்
சுகபலமிழந்து சோர்பவர் ஓர் பால்
நல்லை வீதியில் உருண்டு எழுபவர் ஓர் பால்
நாயகன் புகழ் இசைப்பவர் ஓர் பால்
எல்லையில் புகழ்மிகு வேலவனே நீயும்
ஏன் விரைவாக வலம் வருகின்றாய்?

– விகடகவி

# பங்கம் வந்திடாது பரிவுடன் காப்பீர்

கங்கையைத் தலையில் சூடி களிநடம் புரியும் ஈசன்
அங்கயற் கண்ணி தன்னை அருகினில் இருத்திக்
கொண்டு
செங்கதிர் வேலோன் கோவில் சீர்பெறு விழாவைக் காண
இங்குவந்து காலைவேளை இனிய நற்காட்சி கண்டார்
அங்கப் பிரதிஷ்டை செய்து அரோகரா! முருகா! என்று
ஓங்கியே குரல் எழுப்பி உருளுவார் தம்மைக் கண்டார்
அங்கயற்கண்ணி அந்த ஆலவாய் அரனைத் தொட்டு
இங்கு நாம் காணும் காட்சி இதயத்தைப் பிசையுதய்யா
பங்கம் வந்திடாது நீரும் பரிவுடன் காப்பீர் என்ன
சங்கரன் மனம் இரங்கி சட்டெனக் கயிலை சேர்ந்தான்
இங்கெமக் கென்ன சேதி இயம்புவான் இருந்து
பார்ப்போம்.

\- விகடகவி

# வேலவனின் சூரன்போர் இன்று

தையலார் வீடு எங்கும்
தனித்திருந்து கவசம் ஓத
மை விழி மாதர் கண்ணால்
மழையெனக் கண்ணீர் மல்க
பையவே ஆண்கள் வேறாய்
பரிந்தவன் புகழைப் பாட
ஐயனே அபயம் என்று
அடியவர் அழுது வேண்ட
தூயபேர் மணி ஒலிக்க
துலங்கிட தூப தீபம்
கையிலே வேலைத் தாங்கி
கனக மா மயில் மீதேறி
போயிவன் புரியும் போரால்
புவிமிசை அமைதி பூக்கும்
சேயிவன் பெருமை செப்ப
செந்தமிழினில் வார்த்தையேது?

– விகடகவி

# அல்லல்கள் அகலுமடா!

வில்லொடு சூலம் அம்பு
　　வீரவாள் தன்னை ஏந்தி
சொல்லொணா அழகு சொட்டும்
　　சுந்தரத்தேர் மீதேறி
வல்வினை தீர்த்து எம்மை
　　வாழ்விக்க மனது கொண்டு
நல்லதோர் தீர்வுத் திட்டம்
　　நாட்டின் முன் வைப்பேனென்றாள்
அல்லல்கள் அகலும் காலம்
　　அதிக தூரத்தில் இல்லையடா
வல்லவள் இத் துர்க்கையடா!
　　வாயார வாழ்த்தி வாழ்வாய்.

– விகடகவி

# நல்லை நாதனே; சொல்லு பதிலை

*வெளி வந்து வீதி ; உலா வந்து சென்றால்*
*வினையெல்லாம் தீருமோ சொல்?*
*அழிவு மிகப்பெருகி அனைவரும் மாண்டிடின்*
*அப்பணியும் உனதாகுமோ?*
*விழிமுட்டி நீர் ததும்ப விம்மியே அடியவர்*
*விளம்புதலும் கேட்கவிலையோ?*
*பழி வந்து சூழும் பார்வதி மைந்தனே*
*பாரா திருத்தல் முறையோ?*
*ஊழிக் கூத்தாடியே உலகினை அழித்திட*
*உமையவள் வகுத்த சதியோ?*
*நளினமாய் நல்லை வீதியில் வந்திடும்*
*நல்லை நாதனே! சொல்லு பதிலை!*

**– விகடகவி**




# ஏன் இந்த விவாக இரத்து

பண்டைய ஈழ நாட்டின்
பழம்பெரும் யாழ்ப்பாணத்தில்
எங்கணும் கண்டறியாத வாழ்வு
இருந்திடக் கண்டோம் இன்று
ஆண்டிற்கு ஐந்தாறென்று
அன்றிருந்த விவாக இரத்து
இன்று ஆண்டிற்கு பலநூறாக
பரிணிமித்து விட்டதேனோ?
கண்டதும் காதல் கொண்டு
கனி மொழியாள் வீட்டை விட்டோடி
கொண்டவனைக் கைப்பிடித்து
குலமகள் தாலி யேற்று
மாதங்கள் "ஆறு" ஆக முன்னே
மனமுடைந்து வீடு வந்து
பெற்றவள் கதறி ஏங்க
பேதையாள் நஞ்சுண்டு மாளும்

உள்ளத்தை உருக்கும் கதை
உண்டிந்த நாட்டில் இன்று
மற்றவள், பிறி தொருத்தி
மனதினில் கவலை மேவ

பெற்ற அக் குழந்தையோடு
பெருங் கிணறுதனில் வீழ்ந்து
பேதையும் மகவும் மாளும்
பெருங்கதை கேட்டோமன்றோ!
அடுத்தவள் அழகுப்பாவை
ஆறு நான்கு வயதுடையாள்
விட்ட அக் கணவனைத் தேடி
வீதி தோறலைந்து விட்டு
கட்டளை கணவனுக்கு ஒன்று
கடிதினில் கோட்டில் வாங்க
மற்றவன் தலை மறைவாகிப்போக
மாதரசி கோட்டில் நின்று
மாதந் தோறும் அலையக் கண்டீர்
உத்தமி பிறிதொருத்தி
உணர்ச்சியால் மாலை மாற்றி
பெற்ற அக் குழந்தைக்குப்
பாலூட்ட வழியறியாது ஏங்கி
பற்றைக்குள் போட்டு விட்டு
பரிதவித்து நிற்கக் கண்டீர்
இத்தனை கதையும் கேட்ட
இளவலோ வேறோர் பெண்ணை
இஸ்டம் போல் காதலித்து
இல்லற வாழ்வில் சொக்க
புதியவள் கர்ப்பமாகி ஏங்க
புண்ணியன் மனது நொந்து
குழந்தையை அழிப்பதற்கு
கொண்டு போய் மருந்து செய்ய
அத்தனை கொடிய நஞ்சு
அவள் உயிரையும் பறித்துவிடும்
விட்டானோ கலியாணத்தை என்றால்
விடமாட்டான் இந்தக் காளை
இஸ்டம் போல் இன்னொருத்தி தன்னை

இடை நடு பஸ்சில் முட்டி
கிட்டக் கிட்ட அமர்ந்து நாளும்
கிளுகிளு கதைகள் பேசி
துட்டனோ இப் பெண்ணைக் கூட்டி
துரிதமாய்ப் பதிவு செய்வான்
கெட்டனள் மகளென்று கேட்டு
கட்டி வைத்துக் கதவைப் பூட்ட
காரிகை நஞ்சுண்டு மாள்வாள்
இப்படித் திருமணங்கள் இன்று
இஸ்டம் போல் நடப்பதாலே
பெற்றோரால் விரட்டப்பட்டுப்
பேதலித்துக் கோட்டில் ஏறி
எத்தனை விவாகரத்து இங்கு
இடம்பெறக் கண்டீரன்றோ!

கற்பதை மடவார் பேண
காளையும் ஒழுக்கம் காக்க
பெற்றவள் பிள்ளைகளை பெரும்
பொறுப்புடன் வளர்த்து விட்டால்
இப்படி விவாக இரத்து
இங்கினி இடம்பெறாது

## என்ன செய்வோம் நாம்

அழித்திடும் தமிழர் பண்பை
அழியாது காக்க வாரீர்
செத்தது தமிழ்ப் பண்பே என்றால்
சீரழிவது நமது இனமே அன்றோ
பெற்றோரே உம் பொறுப்பு
பெரிதென உணர்ந்து கொள்வீர்
மற்றைய இனத்தார் எம்மை
மதித்திட வேண்டு மெனில்
தமிழர் தம் மனையறத்தை
தளைத்திடச் செய்வீர் நாளும்

– விகடகவி

# அவனியில் தமிழர் மாண்பு

ஆயிரம் மொழிகள் சாதி
அவனியில் இருந்த போதும்
தாயவள் என் தமிழுக்கீடாய்த்
தரணியில் மொழி தாணுன்டோ?
ஈராயிரம் ஆண்டு முன்பே
இருந்ததோர் தமிழ்ப் புலவன்
பாயிரத்தினோடு பகன்று விட்ட
பக்குவக் குறளுக்கீடாய்
போயிந்த உலகிற் சொல்ல
பிறிதொரு கவிஞன் உண்டோ?
மாயிரு ஞாலம் போற்றும்
மாண்படா தமிழன் மாண்பு!

# தீராத பிடிப்பு




குழந்தையாய் இருக்கும் போது
குறையாது தாய்மேல் பிடிப்பு
வளர்ந்தவன் வாலிபனாய் மாற
வந்திடும் காதலிமேல் பிடிப்பு
தளராது காதல் மேவிடவே
தக்கவாறு கைப்பிடிப்பு
குழந்தையைப் பெற்று விட்டால்
கூடிடும் குழந்தைமேல் பிடிப்பு
வளர்ந்திடக் குழந்தையெல்லாம்
வலுவிழக்கும் இப்பிடிப்பு
மாளாத ஒரு பிடிப்பு
மாளும் வரை ஒரே பிடிப்பு
நாளாந்தம் வாட்டும் பிடிப்பு
"நாரிப்பிடிப்" பொன்று தானே!

**14.12.2001 – உதயன்**

# ஆனைத் தளபதிக்கு மௌலி

ஆனைத்தளபதி தேர்தல் வெல்ல
அம்மணியின் கட்சி தோற்க
தானைத் தலைவனாம் பிரதமரும்
தளர்ந்து தன் பதவி நீங்க
சேனைகள் விட்டகலச்
செழிப்புடன் கதிரோன் மெச்ச
ஆனைத் தளபதியைக் கூட்டி வந்து
அம்மணி புனைந்தாள் மௌலி

**09.12.2001 – உதயன்**

# தாபரிக்க யாரே உள்ளார்?

*கையிலே ஒரு குழந்தை*
*காலடியில் மற்றதொன்று*
*பையவே பின்னால் ஒன்று*
*பரிதவித்து அலறி ஓட*
*தையலாள் கோட்டில் ஏறி*
*தாபரிப்புக் கோரி நின்று*
*"ஐயா! அவன் என்னை விட்டு*
*அம்பிகாவோடு ஓடி விட்டான்*
*மெய்யாக நஞ்சை ஊட்டி*
*மெதுவாக கொல்லப் போறேன்*
*தெய்வமே! எனக்குத் தாபரிப்புத்*
*தாரும்" என்று இறைஞ்சுவாளைக்*
*கையிலே பிடிவிறாந்தைத் தந்து*
*காட்டென ஜட்யும் கூற*
*"மைவிழி அம்பிகாவோடு*
*மகவொன்று பெற்றுவிட்டு*
*பையவே கப்பலேறி*
*பாஸ் இன்றிச் சென்றான்" என்றாள்.*

**26.12.2001 – உதயன்**

# காலின் கதை

நாலிளைஞர் ஒன்றாய்க்கூடி
நண்பகல் உண்ண வந்தார்
காலுண்டோ? என்று தம்பி
கணக்கரை எட்டிக் கேட்டான்
கால் என்றால் நண்டுக்காலென்று
காத்திருந்தேன் காலைக்காண
கால் ஒன்று கிளாசில் வர
"கபக்" எனக் குடித்தான் தம்பி
காலென்ன விலையென்று கேட்க
சீலென்றால் எண்பது என்றான்
பாலென்றால் எட்டு ரூபா என்றே
பகர்ந்தேன் நான் பகிடியாக
காலொன்றை உள்ளே விட்டால்
கல்வியும் பாதிக்கும் அன்றோ?

**24.02.2002 - உதயன்**

# அந்த நாள் எந்த நாளோ?

"ஷெல்" லதும் சீறிப் பாய
சிறப்புறு மனைகள் வீழ
பல்குழல் கூவிப் பாய
பற்பல உயிர்கள் மாள
அல்லலுற்று பங்கருக்குள்ளே
அபயமென அடைந்தோர் சாக
நல்ல நீர் சுரக்கக் குண்டு
நலம் பெறு கிணறு தோண்ட
அல்லல்கள் பட்ட நாட்கள்
அனைத்துமே கனவாய் மாற
இல்லை இனி யுத்தம் என்று
இயம்பும் நாள் எந்த நாளோ?

**15.04.2002 - உதயன்**



# மாண்புற - மா - நகர ஆட்சி

சாதனை என்று ஐம்பதாண்டில்
சாதித்தது எதையும் காணோம்
ஆதலால் எம் தலைநகரை
அலங்கரிக்கச் சிறிது சொல்வேன்
மாதரார் கூடி ஒன்றாய்
மகிழ்ந்திடப் பூங்கா ஒன்று
ஆதரவற்ற சிறார்கள் தம்மை
அரவணைத்திடும் நிலையம் ஒன்று
சீதலம் சேர் நீர் சுரந்து மேவ
சிறப்புறு நீச்சல் தடாகமொன்று
ஓதரும் தமிழ்க் கலைகள் எல்லாம்
ஓளிபெறக் கூடம் ஒன்று
மாநகர ஆட்சி நல்குவீராகில்
மக்கள் மதிப்பினைப் பெறலாமன்றோ?

**12.04.2002 - உதயன்**



# வேலவன் வினை தீர்ப்பான்

ஆலடி வேம்படி அரசடி மருதடி
அனைத்திலும் கோயில் கட்டிவிட்டோம்
சாலவும் சிறந்த கோயில்கள் பலவும்
சரிசமமாக நாம் அமைத்து விட்டோம்
சீலர்கள் போல் காவியும் கட்டி
கோவிலைச் சுரண்டியும் வாழ்ந்து விட்டோம்
ஆலமதுண்ட ஆண்டவனுக்கு இனி
ஆலயம் கட்டியது போதுமையா!
சாலவும் சிறந்த பாடசாலைகள் தம்மை
சரிவர அமைத்திட முந்திவிட்டால்
கோலமிழந்து கூனி நடந்திடும்
குப்பனும் குப்பியும் வாழ்ந்து விட்டால்
வேலோடு முருகன் விரும்பியே வந்து
வினைகள் தீர்ப்பது திண்ணமையா!

**03.08.2003 - உதயன்**

# தெல்லி மாநகரில்

## அருங்கொடி ஏறிற்றன்றோ?

வானுயர் கோபுரம் சூழ
வண்ணமார் தெல்லியூரில்
தேனுடன் அமுது சொட்டும்
செப்பரும் தெய்வத் தாயார்
விண்ணவர் வியந்து போற்ற
விரும்பியே கோயில் கொண்ட
தானமும் தவமும் ஒன்றாய்
"தங்கம்மா" தந்து நிற்க
கானமா மழை தன்னை
கருணையாய்ச் சொரிவாள் துர்க்கை
ஆன எம் துயர் களைய
அருங் கொடி ஏறிற்றன்றோ?

## எண்திசை நோக்கிறாரே !

ஒன்பது நவக்கிரகங்கள் ஒன்றாய்
ஒரு சேரக் கூடமொன்றில்
மாண்புறு சிவனார் கோயில்
மண்டபத்து இருக்கக் காண்பீர்
ஒன்றை மற்று ஒன்று
ஒரு போதும் பார்த்ததில்லை

தென் திசை வடக்கு மேற்கென
திசை பல பார்த்தே நிற்கும்.

ஒன்பது கட்சிகள் இன்று
ஒப்பிலா நம் நாடாளுமன்றிலுண்டு
ஒன்றை மற்று ஒன்று
ஒரு போதும் பார்ப்பதில்லை
வண்ணமார் மாலை சூடி
வாழ்த்தியே பாடி என்ன?
எண்ணம் போல் திசைகள் எட்டை
இவை பார்த்துப் பேதலிக்கும்
எங்களின் பிரச்சனைகள் தம்மை
எப்படி இவர்கள் தீர்ப்பர்
பங்கம் விளைவிப்ப திந்த
பாராளு மன்றம் தானே!

# அக்கரை நாகரிகம்



1. *ஆங்கில நாட்டு யுவதி ஒருத்தி*
*அன்னைக்குச் சொன்னாள் செய்தி*
*எங்கள் திருமணம் முற்றாய்ப் போச்சு*
*ஏப்ரல் பத்தில் என்றாள்*
*எங்கம்மா மணவாளன்? எனத் தாயார் கேட்க*
*ஏனம்மா உனக்கென்றாள் நங்கை*
*தங்கமனது உடையான் அம்மா*
*தகப்பனாம் குழந்தை இரண்டிற்கு என்றாள்*
*இங்கவன் முதல் மனையாளைக் கைவிட்டு*
*எனக்கம்மா முத்தம் தாறான்.*
*தங்கமே! உன் முடிவை மெச்சுகின்றோம்*
*தவறாது சமூகம் தருவோம் என்றார்*
*உங்கு உனது அயல் வீட்டுக்காரனையே!*
*உவந்து நான் முடிக்கப் போறேன்*
*அங்கவன் மனையாள் பாவம்*
*என் அண்ணனே அவளை முடிப்பான் அம்மா!*

**25.02.2002 – உதயன்**

2. பருவமகள் பதினான்கு எய்தி
பள்ளிக்குப் போகும் போது
கருத்தரியாது இருப்பதற்கு
கையினில் குளிகை தந்து
உருக்கமாய்த் தாயாள் சொன்னவாறு
உத்தமி நாளும் குளிகையுண்ணும்
அரும்பெரும் பண்பெல்லாம் உண்டாம்
அமெரிக்க நாட்டில் என்றார்.

3. பெருமை சேர் யுவதிகள் இங்கு
பேணுறார் கற்பை என்ற
அரும் பெரும் செய்தி கேட்க
ஆறுதல் அடையுது உள்ளம்
உருகுது உள்ளம் அம்மா
உன் கற்பினை எண்ணும் போது
பெருமை சேர் தமிழர் பண்பை
பேணிடும் பெண்ணே வாழ்க!
ஊரதும் உலகதும் உன்தன்
உயர் கற்பினைப் போற்றுதன்றோ?

4. காலையில் ஒருவன் தன்னைக்
கட்டியே முத்தம் இட்டு
மாலையில் பிறிதொருவனோடு
மனம் விட்டுக் காதல் கொள்வாள்
சாலையில் ஒருவனைக் கண்டு
சகசமாய்ப் பழகிப் பின்னே
வேலைத்தளத்தில் வேறோர்
வீணனைக் கட்டிக் கொள்வாள்
நாலைந்து கணவன் மாரை
நல்லுடை மாற்று மாப்போல்
சிலகாலம் மாற்றும் மங்கை
சீரெலாம் அழிந்து மாள
காலனாம் எயிட்ஸ் பிடிக்க
கண்கலங்கியே மாள்கின்றாளே!

# நடுத்தெரு சீதனமோ

நாடது சொந்தம் என்றால்
நடுத்தெருவுமே சொந்தமாமோ?
கூட்டமாய் நால்வர் ஒன்றாய்க்
கூடியே சைக்கிள் ஓடலாமோ?
இட்டம் போல் மோட்டார் சைக்கிள் ஓடி
இருவர் இழுபடல் என்ன நீதி?
கட்டியது தாலி என்றோ
கைப்பிடித்து ஓடுகின்றீர்?
கிட்டப் போவார் தம்மைக்
கீழ்த் தரமாய்ப் பேசலாமோ?
விட்டிடு இப்பழக்கமெல்லாம்
விரைவினில் விடிவு கிட்ட
கட்டாயம் உம்போல் வாரைத்
தண்டிக்கும் காலம் வந்தேயாகும்.

13.02.2002 - உதயன்

# கனடா மாப்பிள்ளை

கனடா மாப்பிள்ளையோ கடும் சைவம் எனக்கூறி
கந்தப்பு புறோக்கரும் பல கதைகள் புனைய
உண்ணமுன் சிவபூசை ஒரு நாளும் தப்பாத
ஏரம்ப இக்கதைகள் எல்லாமே நம்பிவிட்டு
எண்ணம் போல் கலியாணம் எடுப்பாய் மிக நடத்தி
இன்புற்றார் ஏரம்பர் இனி என்ன குறை? என்றார்
வண்ணமுற மகளவளைக் கூட்டிவரத் தான் எண்ணி
வந்தார் ஏரம்பர் வாகனத்தில் நாலாம் நாள்
கண்டார் மாப்பிள்ளை கண் சிவக்கத் தள்ளாடி
கோழிக்கால் சூப்பும் கோரக்காட்சி தனைக் கண்ணாலே
மண்டையில் அடித்தபடி மதி மயங்க ஏரம்பர்
மாமா! இது மச்சமில்லை! என்றான் மணவாளன்
அன்பான அம்மகளும் ஆறுதல்கள் பல சொல்லி
என்செய்வேன் விதி என்றாள் ஏற்றாள் மணமகனை
கந்தப்பு மாமாவும் இப்போ கொஞ்சம்
களவாக மீன், முட்டை உண்கின்றாராம்
கால் மாட்டி விட்டுத் தானாம்
கண்மூடித் துயில் கின்றாராம்

14.02.2002 – உதயன்

# எயிட்ஸ் யமன்

யாமறிந்த நோய்களிலே எயிட்ஸைப் போல்
யமனாக வரும் நோயை எங்கும் காணோம்
பாமரரும் படித்தவரும் மேல் நாட்டினிலே
பல வயதில் பாதிப்புற்றுப் பான்மை கெட்டு
நாமமதும் கெட்டிடவே நரம் பொடிந்து
நாசமுறல் நன்றோ? சொல்வீர்!
சேமமுற வேண்டுமெனில் செகத்தீரே!
சிந்தையிலே தமிழ்ப்பண்பைத் தேக்கி வாழும்

நாமறிந்த பண்பாட்டில் நம் தமிழைப் போல
நானிலத்தில் வேறெங்கு முண்டோ சொல்வீர்
பூமிதனில் எம் இனத்தின் புனிதம் போல்
புகன்றிடவோர் உவமையும் உண்டோ சொல்வீர்
சேமமுற வேண்டுமெனில் ஈழநாட்டார்
சிறப்புறவே சிந்திக்க வேண்டுமன்றோ
ஊமையாய்ச் செவிடர்களாய் வாழ்வீராகில்
உலகத்தின் இழிநிலை அடைவோமன்றோ?

**02.03.2002 - உதயன்**

# அன்னை தங்கம்மாவின் மான்மியம்

சங்கத் தமிழ் எடுத்து அன்னை
தங்கக் குரல் இணைத்து - அதை
எங்கும் தந்தாரடி - கிளியே
இங்கிதமாய்க் கேட்டோமடி.

நாட்டிற்குக் தாயான அன்னை
நற்தமிழ்த் தாய் தந்த அன்னை
துர்க்கை அன்னை வளர்த்த அன்னை - கிளியே
தூய பணி செய்தாரடி.

ஏழைகளைக் காத்து வைத்தார்
இன்பக் கல்வி ஊட்டி வைத்தார்
வண்ணமுறு நூல்நிலையம் தந்தாரடி - கிளியே
வார்த்தையுண்டோ போற்றுதற்கு.

நாட்டிற்கு ஒருவரடி
நல்ல தொண்டிற் குவமையடி
போற்றிப் புகழ்ந்தோமடி - கிளியே
போய்ச் சேர்ந்தார் கயிலையடி.

# அளவையூர் அருட்கவி அமரரானார்



தாயினை இழந்தாற் போல
    தந்தையும் மறைந்தாற் போல
சேயெலாம் அழுதாற் போல
    செந்தமிழ் கண்ணீர் மல்க
போயினை என்ற சேதி
    பொங்கியே செவியில் பாய
ஐயனின் மறைவு கேட்டு
    அழுதனர் சைவர் எல்லாம்
இன்னிசை கலந்து மேவ
    இனியபேர் உரைகள் செய்தாய்
மாண்புறு ஜோதிடக் கலையை
    மறுஉயிர் பெறவே செய்தாய்
ஆன நற் பக்தியாலே
    அருள்வாக்கு பலவும் சொன்னாய்
இதற்கிவன் ஒருவன் என்றே
    இயம்பிட மக்கள் எல்லாம்
இணைந்தனை இறைவன் ஓடு
    இனி எங்கு காண்போம் ஐயா!

# அருட்கவி வினாசித்தம்பிப் புலவரன் ஆசி உரையில் இருந்து

ஆயிரத்து தொளாயிரத்து அறுபதுகளில் ஓர் நாள் - நான் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படிக்க விரும்பினேன். என் விருப்பை என் தாயார் ஏற்றுக்கொண்டார், ஆனால் எனது தந்தையார் மிக கண்டிப்பானவர். இதனை ஏற்றுக்கொள்ள வில்லை. வழக்கறிஞரானால் பொய் பேசி உழைக்கவேண்டும் என்பது அவர் நிலைப்பாடு.

இந்நிலையில், என் நிலைப்பாட்டில், மாற்றம் ஏற்பட வில்லை. ஒருநாள் வெள்ளிக்கிழமை என்று ஞாபகம், விடி காலை என் தந்தையார், எவருக்கும் பேசாமல் ஐந்தரை மணிக்கே எங்கோ புறப்பட்டுவிட்டார்.

பின் ஏழு மணியளவில், வீடு திரும்பினார். என்னையும் தாயாரையும் அழைத்து, மகனை சட்டம் படிக்க விடு என்றார். எங்களுக்குக் காரணம் புரியவில்லை. அதன் பின்தான் தெரிய வந்தது. அருட்கவி வினாசித்தம்பி ஐயாவிடம் போயிருக்கின் றார். அவர் குறிப்பைக் கையிலே வாங்கினாரேயன்றித் திறந்து கூடப் பார்க்கவில்லை. அவனைச் சட்டம் படிக்க விடு. அவன் வழக்கறிஞன் மட்டுமல்ல, நீதிபதியாக வரப்போகிறான் என்றார். இதை என் தந்தையால் நம்பமுடியவில்லை. நீதிபதி யாக என்னைக் காணாமலே காலமாகிவிட்டார். இப்படி அருள்வாக்கால், என்னைச் சட்டக்கல்லூரிக்கு அனுப்பியதை அவர் மறந்தாரில்லை. நானும் நீதிபதியானதும் இதனையும் உணர்ந்து கொண்டேன்.

எதைப் படிக்க, எங்கே படிக்க என்று அங்கலாய்த்த எனக்கு ஒரு கலங்கரை விளக்காக இருந்த அருட்கவியை நினைவு கூறாமல், இந் நூல் நிறைவடையாது.

– விகடகவி

## நல்லையில் பத்மநாதன் குறுகிய சுரத்துக்குள்ளே இந்த குவலயத்தை அடக்கி வைத்தாயன்றோ?

*சோலை சூழ் புகழ்*
*சுந்தர நல்லையில்*
*மாலை மதியமும்*
*மங்கிடும் வேளையில்*
*சாலவும் சிறந்த எம்*
*சங்கரன் மைந்தனார்*
*கோல மா மயிலதில்*
*கோதையர் சூழ்ந்திட*
*பத்ம நாதனார்*
*பாங்குடன் வழங்கிய*
*கான மாமழை*
*காதில் ஒலிக்குது*
*ஓடி ஓடியே வாசித்த தோடியும்*
*கூடி வாசித்த பைரவி ஓசையும்*
*முடிவிலா இன்பத்தில் மூழ்கடித்தது மோகனத்துடன்*
*கடிதினில் இராகமாலிகை ஆக்கியே*
*அடக்கி வாசித்த கல்யாணியின் மேன்மையே*
*நாடி நரம்பினை தொட்டே இழுத்தது*
*முடிவிலாததோர் சங்கரா பரணத்தையும்*
*முழுதுமாக வடித்து வழங்கினை*
*கேடில்லாத கேதார கௌளையைக் கேட்டவர்*
*கூடிக்கூடிக் குதூகலித்து மகிழ்ந்தனர்*
*சுடச் சுட சுருட்டியை சுருட்டி எடுத்து*
*சுவைக்க வைத்த சுந்தரக் கலைஞனே!*
*முடிவிலாக் கலையினாலே மூவுலகினை*
*வென்றாயன்றோ!*

# எனது ஊர் நாதஸ்வர மேதை N. K. பத்மநாதனை பிரிந்தபோது பாடியது



எந்தனூர் உன்தனூர் என்றே
    இறுமாப்புக் கொண்டிருந்தேன்
விந்தைகள் குழலில் காட்டி
    வியக்கவைத்தனை உலகோர் தம்மை
சிந்தையை அக் குழலுக்குள்ளே
    செலுத்தியே வாசித்தபோது
அந்த நற் குழலுக்குள்ளே
    அடைத்தனை செகத்தையெல்லாம்
முந்தியே சபையின் முன்பே
    முழுதுமாய் அமர வைத்திட
தந்த நின் தோடி தன்னை
    தரணியில் எங்கு கேட்போம்?
நந் தமிழ் இசையின் மன்னா!
    நாடுனை இழந்த போதும்
வந்துனைத் தேவ தூதர்
    வருகென அழைத்துச் சென்று
இந்திரன் சபையின் முன்பே
    இருந்து நீ குழலை மீட்க
அந்த மில் ஆனந்தத்தால்
    அமரரும் மகிழ்வ ரன்றோ?

## 'ரமில் டே - I'

*பேரம் பல மாஸ்டர் வீட்டி லேன்ரி*
*பெடியள் பெரும் அமளியாய்க் கிடக்கு?*
*கரங்களில் வேட்டி மற்றும் கயிற்றோடு*
*காத்து நிற்கிறார்கள் கியூவில்*
*தமிழ்த்தினம் வருகுதென்று தெரிந்து*
*தம்பியர்க்கு வேட்டி கட்டப் பழக்கிறார் வாத்தி*
*அவிழ்ந்து விடுமோ என்று அஞ்சி எல்லோ*
*அடி வயிற்றில் கயிறு கட்டி விட்டா பாட்டி*
*கடிதனில் தமிழ்ப் பண்பாடிங்கு*
*மடிவதும் உறுதியாச்சு*

## 'ரமில் டே - II'

*இங்கிலீசில் தமிழ் பற்றி எழுதி*
*இரவு பகலாய்ச் சப்பித்துப்பி*
*அங்கிள் அன்ரி அதிதி யாய் அமர*
*அரை குறைத் தமிழில் வரவேற்று*
*பேராசிரியர் 'சூட்' 'ரை' யோடு வந்து*
*பேருரையை ஆங்கிலத்தில் நிகழ்த்த*

தீராது எம் தமிழ் மோகமென்ற
திருப்புகழோடு முடிந்தது கூட்டம்
சீராக தமிழ் விழா வெடுக்க
சிந்தனை செய்ய வாரீர்

## " ரமில் டே" – III
## உயர்ந்தது தமிழர் சாதி

சீர் கெட்டு மதுவில் ஊறி
சீரழிந்தது உலக சாதி
கார் குழலாரோடு கூடி
கண்டதை உண்டு உறங்கி
பாரினில் கொடிய எயிட்ஸைப்
பரப்பியது உலக சாதி
ஆரடா தமிழ்ச் சாதிக்கு
அருகினில் நிற்க வல்லார்?

– விகடகவி

# இப்படியும் ஒரு மாப்பிள்ளை

அன்புளான் அறிவில் மிக்கான்
அமைதியே உருவம் ஆனான்
கண்ணெனும் கல்வி தன்னை
கருத்தொடு கற்றுத் தேர்ந்தான்
தீண்டிடக் "கல்லைப்" போன்ற
திரண்ட தோள் வலிமை மிக்கான்
அழகுறத் தமிழைக் கற்று
அடைந்தனன் (எம்.ஏ.) பட்டம்
மேடைகள் தோறும் ஏறி நாளும்
மேன்மை சேர் தமிழின் மாண்பை
அமிழ்தென இனிக்க வல்ல
அரியபேர் உரைகள் செய்வான்
கேட்டவர் வியந்து மெச்சி
கிளுகிளுப் பெய்தி நிற்பர்
குறிகளும் நெறிகள் யாவும்
குணமுளான் என்றே செப்பும்
இன்னிசை இராகம் சொட்ட
இனிய நற் தேவாரத்தை
பண்உடன் பாடக் கேட்போர்
பரவச மெய்தி நிற்பர்
எழுதிடும் எழுத்திலெல்லாம்
இன்பத் தமிழது நடனமாடும்
நடிப்பினில் பதக்கம் பெற்றான்

நாவண்மையில் இணையிலாதோன்
உயர் பெரு பதவி பெற்று
ஊதியம் நிறையப் பெற்றான்
அகவை நாற்பதைத் தாண்டினாலும்
அவன் திருமணம் முடித்தானில்லை
உடுப்பது வேட்டி அன்றி
நீள் கால்சட்டை அணிய மாட்டான்
காலணி செருப்பே அன்றி
கனத்த "சப்பாத்து" அணிந்தறியான்
வெண்புகை தொட்டறியான்
வீரன் போல் "மோட்டு"ச் சயிக்கிள் ஓடி
வீணன் போல் அலைய மாட்டான்
அன்னைக்கோ இவனே மைந்தன்
அனைத்துமே இவனே ஆனான்
அடுக்களையில் அன்னைக்காக
அவன் பெரும் உதவி செய்வான்
மூத்தவர் இவனைக் கண்டு மெச்சி
முழுதுமாய் வியந்து நிற்பர்
பற்பல திருமணங்கள் பேசினாலும்
பலனேதும் கிட்டவில்லை
வேட்டிக்காற மாப்பிளை இவனை
விரும்பவே மாட்டோ மென்றார்
'விஸ்கியை பிறண்டி" தன்னை
விரும்பாத மூடனை நாம்
எப்படி கைப் பிடிப் போமேன்று
ஏந்திழையார் தூற்றி நிற்பர்
வெண்புகை இழுக்கா வீணன்
வெறுங்காலில் நடக்கும் மூடன்

எப்படி இவனை நாங்கள்
ஏற்பது கணவனாக என்றார்
இவ்வாறே கன்னியர் எல்லாம்
இழித்தனர் பழித்து நின்றார்
தப்பாது தமிழைக் கற்று
தமிழ்மணம் கமழ வாழ்ந்தோன்
இப்போதும் தமிழ்த்தாயாளை
இதயத்தில் இருத்தி விட்டு
தப்பாது தமிழ்த் தொண்டாற்றி
தாயோடு வாழ்கின்றானே!
"உத்தமப் பெண்டிர்" வாழும்
உவமையிலா நாடு வாழி!!
இல்லை, இல்லை வாழுமா?....
ஏங்கினேன் மனது நொந்து
எழுதினேன் இந்தப்பாடல்
மங்கையர் மனமதுவும்
மாறுமோ அறியேன்யானே!

– விகடகவி

# டெங்கினை
# ஒழிக்க வாரீர்!



பாம்பதும் பல இனமதாகி
    பலரையும் கொன்றதன்று
பாம்பதும் ஒழிந்து போக
    பயமதும் மறைந்து போச்சு
பாம்பிலும் கொடிதாய் இன்று
    பல்வகை நுளம்பினங்கள்
பாம்பு போல் பலரைத் தீண்டி
    பறிக்குது பற்பல உயிரையன்றோ!

காலையில் ஒருவகை நுளம்பாம்
    கடும் பகல் வேறு ஒன்றாம்
மாலையிலோ மற்றதொன்று
    மக்களைக் கொல்லுதென்று
சாலவும் ஆராய்ச்சி செய்து
    சரிவரக் கண்டிட்டாராம்
பலவகை நுளம்பு பற்றி
    பற்பல உரை ஆற்றுகின்றார்
இலகுவில் இவற்றைக் கேட்டு
    இந்நுளம்பு இடம் பெயருமாமோ?

அட இந்தக் கொடிய 'டெங்கு'
ஆச்சியப்பு காலத்தில்
இடர்படுத்தி எவரையும்
இங்கு கொன்றதில்லையாம்
கடந்த மாதம் மட்டுமிங்கு
கன பாலகரை இழந்து விட்டோம்
தொடர்ந்து இது பரவினால்
தொலைவர் எங்கள் இளைஞரே!

குப்பை கூளம் அள்ளி வந்து
கொட்டுகிறார் வீதியில்
செப்பமாகப் பூரான் பூச்சி
செழித்து வாழ்வதிங்கையே
தப்பாது நகரத்து நாய்கள்
தாமும் தலைபுகுத்தியே
அற்ப சொற்ப உணவு கண்டு
அதனை உண்டு வாழவே
உற்ற குப்பை கூளத்தில்
உதிக்குதிந்த நுளம்பெல்லாம்

ஒப்பரிய இந் நுளம்பு வகை
ஓராயிரமாய்ப் பெருகியே
செப்பரிய கொடுமை தனை
செய்யுமிந்த நாட்டிலே
தப்பாது இந்நுளம்பு தன்னைத்
தடுத்து நிறுத்தத் தவறினால்
ஒப்பாரி ஒலி மட்டுமே
ஓங்கி ஒலிக்கும் இந்நாட்டிலே
சுகாதார வாரமொன்றை
சுபீட்சத்திற்காய் அறிவித்து
மிக நல்ல தொண்டு பல
மிகவிரைவில் நல்குவீர்

அகமகிழ்ந்து இளைஞர்களும்
ஆயிரமாய்க் கூடுவர்
மிகப்பெரிய வாகனங்கள்
நூறு நூறாய் சேர்த்துமே
சகல குப்பை கூளமதை
சடுதியாக அகற்றுவீர்

தொண்டு செய்யும் நிறுவனங்கள்
தூர நின்று பார்ப்பதேன்?
கண்டுமிந்த உயிர் இழப்பை
காணாதிருப்பதும் நீதியோ!
என்றும் தொண்டு என இயம்பும்
இணையிலாத அரிமா கழகத்தீர்
இன்று உங்கள் பணி தொடர
இன்னுமென்ன தாமதம்?

செம்மணியில் கோம்பையனில்
சென்று புதைத்த சிறார்களும்
அம்மா! அம்மா! என்றலறியன்றோ
ஆன்மாவை விட்டிங்கு வந்தனர்
செம்மையாக மருந்து தந்து
சிறப்பாக இவரைப் பேணினால்
உண்மையாக இவ் இளைஞர்கள்
உம்மோடு இன்னும் இருப்பாராம்
நன்று நன்று இப்பழியெல்லாம்
மாந(ர)க சபையைச் சேருமே!
கண்டு கொண்டு வாழாதிருக்கக்
கருங்கல்லோ உமது நெஞ்சமே!

- விகடகவி

# சென்று வா தலைவா நீயும்

(கலைஞர் முடியிழந்த பதவி துறந்த போது பாடியது.)



முடியதும் உதிர்ந்து போக
மூப்பினுக்கு அடிமை யாகி
நடையதும் இழந்து நொந்து
நாற்காலியே தஞ்ச மென்று
ஆயிரம் பிறையைக் கண்ட
அண்ணலே கலைஞர் ஏறே!
கடிகமழ் தமிழ் அன்னை தன்னை
கட்டியே அணைத்து நீயும்
முடிவினில் மூச்சடங்கு மட்டும்
முத்தமிழினைக் காப்பேன் என்று
துறவிகள் அணியும் தூய
மஞ்சள் துண்டினைச் சால்வையாக்கி
செஞ் சொல்லால் மாலை கட்டி
சிறப்புறு மகுடம் சூட்டி
செய்தனை சிறந்த தொண்டு
பாலர்க்கு முட்டை தந்து
பள்ளியில் படிக்க வைத்தாய்
ஒரு கொத்து அரிசி தன்னை
ஒரு ரூபாய்க்கு உண்ணத் தந்து
செம்மொழி தமிழே என்று

செகத்தினிற்கு எடுத்து ரைத்து
அலைகடல் ஆர்ப்பரித்த தென்ன
ஆர்ப்பரித்து முழக்க மிட்டு
ஒரு கோடி மக்கள் தங்கள்
உள்ளத்தினில் கோயில் கொண்டாய்
அன்பினில் அடக்கம் தன்னில்
அறிவினில் மேதையான
அறிஞராம் அண்ணா கண்ட
அற்புதத் தொண்டனே கேள்!
முடிதனை இழந்தாய் இன்று
முத்தமிழ் இரங்கி நோக்க
அலைகடற் கப்பால் உள்ளோர்
அதிர்ந்தனர் உன் தோல்வி கேட்டு
ஐயனே மக்கள் உன்னை
அதிரடியாய் அகற்றி விட்டு
அம்மைக்கு அரசு ஓச்ச
அளித்தனர் வாக்கை என்றால்
உண்மையில் உனது வீழ்ச்சி
உணர்த்திடும் உண்மை கேளாய்
குடை நிழல் இருந்து நீயும்
குஞ்சரம் ஊர்ந்த வேளை
நீதியைத் தூக்கி லிட்டு
நிம்மதி கண்டாய் என்றும்
இலஞ்சமும் ஊழல் தொட்டு
நிகரிலாக் கோடி செல்வம்
பெற்றதைக் குடும்பத்தார்க்கு

பிரித்து நீ தந்தா யென்றும்
செல்வத்தில் நின் குடும்பம்
சீரொடு திகழ வைத்தாயென்றும்
அண்டையில் ஈழம் தன்னில் மக்கள்
அழுதிடும் தமிழ்க் குரலைக் கூட
மெல்ல நீ கேட்டிடாது
மெதுவாகப் பேசினாய் என்று
மேடையில் முழக்க மிட்டார்
மெல்லவே மக்கள் கேட்டார்
போய்வா! தலைவா! என்று
பொன் முடி அகற்றி விட்டார்
சால்வையை மட்டுமல்ல
சரிவர மஞ்சள் கட்டி
போதுமினி அரசியல் என்று
புகன்றொரு பாட்டெழுதி விட்டு
கானகம் தன்னை நோக்கி
கையிலோர் பொல்லு மேந்தி
பொல்லூண்றி மண்மேல்
பல்லாண்டு நீடுழி வாழி!

# கலைஞர் மு. கருணாநிதி கடிமனை அடையும் காட்சி

திக்கெட்டும் திரும்பிப் பாரான்
திசை ஒன்றும் குறித்து நோக்கான்
பக்கத்தில் நின்றொரரை யெல்லாம்
பார்த்திடாது மவுனி ஆனான்

கைத்தலம் மகனார் பற்ற
காவியாம் சால்வை போத்தி
நித்தமும் தங்கி நின்று
நீழுரை ஆற்றி நின்ற
கொத்தளம் கோட்டைவிட்டு
கோமகன் வெளியே வந்தான்

தான் செய்த தொண்டை எல்லாம்
தனித்தனி எண்ணிப் பார்த்தான்
தான் செய் தானமும் தர்மமெல்லாம்
தன்னையே தள்ளி வீழ்த்தக் கண்டு
கண்களும் குளமதாகி நிற்க
கறுப்புக் கண்ணாடியைத் துடைத்துக் கொண்டான்
அரை நூற்றாண்டாக மண்மேல்
ஆற்றிய சேவை எல்லாம்
சுனாமி போல் வந்த அலைக்கட்டு
சுறுட்டியே கொண்டு போக
பிசாசுகள் ஒன்று சேர்ந்து தன்னை
பித்துப் பிடிக்க வைக்கக் கண்டான்

மணவறை தன்னை நோக்கி
மணப் பெண் செல்லுமாப் போல்
குலமகள் மாலை கொண்டு
கொழுனனை அடைதல் போல
நிலமகள் தன்னை நோக்கி

நீள் பெருமூச்சும் விட்டு
கலைஞனாம் கருணாநிதியார்
கண்கலங்கிட நடக்கலுற்றார்

நிலமிசை வீழ்ந்த கண்ணீர்
நிலமகளை நிலை குலையச் செய்ய
கலைஞனுக்கு உற்ற கதிக்கு
காரணம் தெரிந்து கொண்டாள்
கானகம் இராமன் செல்ல
காரணம் இருக்குமாப் போல்
கலைஞனின் வீழ்ச்சிக்கிங்கு
காரணம் பலவும் கண்டாள்

தானுறை வீடு நோக்கி
தளர்ந்துகால் தடுமாறி வைத்து
மதுபோதையில் செல்வோர் போன்று
மனம் நொந்து முணுமுணுக்க
நிறைகுடம் கதலியின்றி யாங்கே
நீள் பெருமூச்சுக் கேட்டதம்மா
முதல் இரவு கண்ட அந்த
முதிரையால் ஆன கட்டில்
வெண்ணிற மெத்தை மீது
வேறு மோர் பட்டுச் சேலைபோத்தி
கண் குளமாக அந்தக் காரிகை
கணவனாருக்கு விரித்து வைக்க

விதியினை நொந்த வண்ணம்
வேதனை பிழிந்து வாட்ட
பால், பழம் கண்ட கட்டில்
பன்னீரும் இன்றி ஆங்கே
வெந்நீரை வேண்டி உண்டு
வேதனையோடு கலைஞர் சாய்ந்தார்
கொழுனனைத்தொழு தெழுந்து
குலமகள் சொரிந்தாள் கண்ணீர்.

– விகடகவி

# உயர்திரு அப்துல்கலாம் பதவி நீங்கியபோது பாடியது



– அருந்தமிழன் அப்துல்கலாம்

ஆண்டு ஐந்து பாரதத்தை
அழகுறவே ஆண்டனை
பண்நிறைந்த வார்த்தைகளால்
பலர் மனதைக் கவர்ந்தனை
அன்னையின்றி தந்தையின்றி
அரவணைக்க மனைவியின்றி
எண்ணற்ற கோடி இந்தியர்க்கு
எல்லாமாகி நின்றனை
மண்ணதில் விஞ்ஞான மதை
மறுமலர்ச்சி செய்தனை
எண்ணரிய சாதனைகள்
இயற்றி நீயும் காட்டினை
கண்ணியத்தால் நேர்மையதால்
கன்னித் தமிழின் பற்றினால்
வண்ணமுற நம் பாரதியை
வான் புகழும் கம்பனையும்
எண்ணரிய குறள முதின்
ஏற்றமதைக் காட்டினாய்
என் சமயம் உன் சமயமென

ஏன் பிரித்துப் பார்க்கிறீர்
அன்னை ஒன்று எம்மவர்க்கு
அரிய தமிழ் அல்லவோ?
என்று சொன்ன தமிழ்மகனே
ஈடுனக்கும் இங்குண்டோ?
மண்ணில் தமிழர் துன்பம்கண்டு
மனமுருகி நின்றனை
எண்ணில் உனது தமிழ் பற்றிற்கும்
என்ன பரிசு தந்தனர்?
'அண்ணா" வழிவந்த தொண்டர்
அறியவில்லை நின்புகழினை
உனது சொத்து இரண்டு பெட்டி
உருக மனம் தூக்கினாய்
மண்ணில் கல்விதன்னை ஊட்டி
மனம் களித்து வாழுவாய்!

**பதவியைத் துறந்தபோது பாடியவை**

– விகடகவி
உதயன்

# ஆண்களையும் வாழவிடுங்கள்

யாழ்குடா நாட்டை இன்று
யாவரும் வியக்கும் வண்ணம்
ஆள்பவர் அனைத்தும் நல்ல
அற்புத மகளீர் ஆச்சு
தாழ்வுற்று மனது நொந்து
தடுமாறும் ஆண்கள் எல்லாம்
உள்ளத்தால் இப்பெண்களெல்லாம்
உயர்வுற்று வாழ்க என்றே
கள்ளமில் உள்ளத்தோடு
களிப்புற்று வாழ்த்துகின்றார்.

பட்டங்கள் பற்பல பெற்றுயர்ந்து
பதவிகள் பற்பல பெற்றுவிட்டீர்
இட்டமுடன் இப்பெண்கள் எல்லாம்
இனிதே மனம் மகிழுகின்றார்
கட்டழகு மாதர் உம் செயலால்
கவின்பெறும் நாடு மிகவிரைவில்
மட்டிலா மகிழ்ச்சியால் யாழ் மாதா
மகிழுகின்றாள் உம் உயர்வை எண்ணி.

நீதித்துறையில் மட்டுமன்றி
நிகரிலா பல்வகை துறைகளிலே
ஊதியம் பலமடங்காகப் பெற்றவராய்
உயர்ந்திடும் பெண்களைக் காணுகின்றோம்
மேதினி வியந்து புகழும் வண்ணம்
மேன்மைசேர் அரச அதிபராக
மாதரசி ஒருத்தி வருவதாக
மக்கள் பலர் இங்கு பேசுகிறார்.

பதினெட்டுப் பதவியைப் பெண்களுக்கு
    பரிந்துரை செய்து அனுப்பியுள்ளர்
மாதிசை எட்டையும் நோக்கிவிடின்
    மாண்புறு பதினெட்டுப் பெண்மணிகள்
தீதிலாது அரசு ஓச்சக்கண்டு
    திடுக்குற்று நிற்குது ஆணின் வர்க்கம்
ஏதிந்த மாற்றத்தின் பின்னணியென
    ஏங்கித் தவிக்கிறார் கற்றவர்கள்

கோடிட்ட இடத்தினில் கையெழுத்தை
    கோதையிடுவாள் என்ற எண்ணத்திலே
கூடி இவர்கள் கூட்டி வைத்து
    குதூகலமாகவே பேசிவிட்டால்
நாடி எதை எதைச்செய்யச் சொன்னாலும்
    நசுக்கிடாமலே செய்வரென்றோ
ஓடித்திரிந்து இப்பெண்களெல்லாம்
    ஒன்றையும் எதிர்த்துப் பேசிடாது
ஆடிப்பாடியே மனம் மகிழ்ந்து
    அரசுக் கட்டளையை ஏற்பரென்றோ
தேடித் திரிந்து பிடித்து வந்து
    திக்கெட்டும் இவர்களை நிறுத்தினரோ?

அன்புள்ளம் கொண்டவள் இப்பெண்மகள்
    அடக்கமே உருவானவர்கள்
பண்புடனே எல்லாம் பேசிவிட
    பகைக்காது காரியம் பார்த்திடுவர்
என்ற எண்ணமே இப்பெண்டுகளை
    ஏற்றமுற வைத்ததோ! நானறியேன்
கண்ணியத்தோடு உம் குடும்பங்களைக்
    காத்து வளர்த்திடும் மாதரசிகளே!
உண்மையில் இந்நாடும் உம்குடும்பமென்றே
    உன்னி உணர்ந்து செயற்படுவீர்.

பெண்களுக்கு ஓர்தினம் என்று சொல்லி
பெருமைப்படுகின்ற பெண்மணிகாள்
ஆண்களின் நிலைகண்டு மனம் வருந்தி
ஆண்களுக்கும் ஓர் தினம் தந்திடுவீர்!
வீண்இனி மீசை வளர்ப்பதெல்லாம்
விட்டுவிடும் இந்த மீசையினை
ஆணுக்குப் போதும் இனிக் தாடியென்றே
அதட்டித் தீயமீசையை அகற்றிடாதீர்!
விண்ணுக்குச் சென்ற நம் பாரதியும்
விரும்பி உமையின்று வாழ்த்துகிறான்
கண்ணுக்கு இமை காவலெனறால்
காரிகையர் எமக்குக் காவலன்றோ!

மான்மீது கொண்ட மையலினாலந்த
மாண்புறு சீதை சிறை புகுந்தாள்
கண்கவர் மாதவி கற்பை இழந்திட
கனலது கக்கிற்று மாமதுரை
கூன் நிறை கூனியின் குள்ளத்தினாலன்று
கானகம் சென்றிட்டான் இராமபிரான்
வண்ணப் பெண்ணிவர் பெற்ற பதவியை
வாய்மையுடன் செய்யத் தவறிவிட்டால்
எண்ணிலடங்காத தீவினை சூழ்ந்து
எம்மை அழித்திடும் யாழ்ப்பாணத்திலே!

# தந்தை செல்வா



காந்தியைக் கண்டேன் இல்லை
கனிமொழி கேட்டேனில்லை
அந்த மில் பக்தி பூண்டு நானும்
அடிதனைப் பணிந்தேனில்லை
வந்தனை மனதில் செய்தேனன்றி
வாழ்த்திட அவரைக் காணேன்
எந்தை செல்வ நாயகத்தில்
இவர் சாயலைக் கண்டு கொண்டேன்
நந்தமிழ் மக்கள் தம்மையிங்கு
நாயகன் காப்பன் என்றே
செந்தமிழ்த் தாயாள் அன்று
செல்வ நாயகனை அனுப்பிவைத்தாள்
முந்தியே காலிமுகத்திடலில்
முழுதுமாய் வீற்றிருந்து
அந்தமில் அடி உதைகள் தாங்கி
அண்ணல் நீ காந்தியானாய்
சொந்த உடமைகள் தன்னை விற்று
சோர்விலாது எம்மைக் காத்தாய்
தந்தையே! நின்னை நாமும்
ஈழக்காந்தியாய் போற்றுகிறோம்
நிந்தனை செய்வார் முன்னே எமை
நீ விட்டுச் சென்று விட்டாய்
வந்தனை செய்து வேண்டுகிறோம்
வரமளித்து எம்மைக் காப்பாய்
அந்தநாள் தந்தை சொல்லிச் சென்றார்
ஆண்டவன் தான் காப்பான் எம்மை
எந்தையே ஈசா எம்மை
எப்போது காக்கப் போறாய்?

# எனது ஊர் தவில் மேதை திரு. தட்சணாமூர்த்தி அமரராகியபோது பாடியது

தவில் தனை எடுத்து வைத்து
தட்டு வாய் சுதியைச் சேர்க்க
தவிலதும் உன்னைப் பார்த்து
தக்க நல் ஒலி எழுப்பும்
தவில்தனைத் தூக்கி வைக்க
தளிர் விரல் தாளம் போடும்
தவிலினில் விரல்கள் ஐந்தும்
தக்கவாறு சதிரே ஆடும்
தவில் தரும் தேவ கானம்
தரணியில் ஆறாய் ஓடும்

தவில் வல்லோர் மெய் மறந்து
தலைகுனிந்து தமை மறப்பர்
தவில் என்றால் யாழ்ப்பாணமென்றே
தமிழ்க் திருநாட்டார் சாற்ற
தவில் தனை இங்கே விட்டு
தம்பி! நீ எங்கே சென்றாய்?
தவிலொடு மீண்டும் வந்து
தவிலிசை பொழிவாய் ஐயா!
தவிலிசை வாழும் மட்டும் உன்னை
தமிழர்கள் மறக்க மாட்டார்.



## போதை – I

கொட்டிலில் என்னடி அமளி
　　குமாரசாமியர் கோவிச்சுக்கொண்டு போறார்?
இட்டப்படி இனிக் கள்ளு
　　இந்தக் கோப்றேசனில் கிடையாதாம்
பட்ட பகல் புதுக் கள்ளு
　　பெடியளுக் கொதுக்கி விட்டாச்சாம்
கிட்டக் கிடலைக்கும் புதுக்கள்
　　கிழடு கட்டைக்கு இனிக்கிடையாதாம்

## போதை – II

காலை அடிச்சால் மச்சான்
　　கண்ணிரண்டும் மின்னுதடா
பாதி அடிச்சால் மச்சான்
　　பகலிரவாய்த் தெரியுதடா
போத்தல் தேடி மச்சான்
　　போராட்டம் நடத்துகையில்
ஈரல் இல்லை யென்று
　　எழுதி விட்டான் டாக்குத்தன்

## போதை – III

கொழும்பாலை வரயிக்கை வரதன்
    கொழுக்கட்டை போலெல்லோ வந்தான்
வழு வழுப்பாய்த் தேகக்கட்டு
    வாட்டசாட்டமான உடம்பு
அடுத்தொரு மாதமிந்தக் கசிப்பை
    ஆசை தீர மண்டின பின்பு
ஒடுக்கெட்டு நடையிழந்து பாவம்
    ஓடாய்க் கிடக்கிறான் சாக!

## போதை – IV

**சுதந்திர (க / ப)ள்ளு!**

விஸ்கியை பிறண்டி தன்னை
    வெளிநாட்டுக் குடிவகையை
இஷ்டம் போல் இங்கு வாங்க
    எவரிடம் பணந்தானுண்டு?
கஷ்டம் தான் உன்பாடு தம்பி
    கவலை நீ கொள்ளவேண்டாம்
இஷ்டமாய்ச் சுதந்திரத்தை நாமும்
    இங்கு உடன் பெற்றுவிட்டால்
உஷ்ணத்தைத் தணிக்க வல்ல
    உயர் பானம் கள்ளில் செய்வோம்!

## போதை – V

கொட்டிலில் ஒன்று கூடி
    குவளையைக் கையில் ஏந்தி
வட்டமாய் ஒன்றாய்க் குந்தி
    வடையினைப் பகிர்ந்து உண்டு
இட்டமாய் மாமா மச்சானென்று
    இணைந்தொன்றாய் "தேவபாசை" பேசி

கெட்ட இச்சாதிப் பேயை
கிட்டவே விடாது ஓட்டும்
கொட்டிலின் புளித்த கள்ளே!
கோடிவந்தனை உனக்கா மன்றோ!

## போதை – VI

கந்தரின் வீடு நண்ணி
கனகி கருவாடு வாட்ட
மொந்தையில் புளித்த கள்ளை
மெதுவாக பிளாவில் ஊற்ற
குந்தியிருந்து மண் மேல்
குடித்திட்ட நாளை எண்ணி
சந்தியாப்பிள்ளை மாஸ்டர்
சலிக்கிறார் கனடா நாட்டில்

## போதை – VII

பனைதந்த கள்ளை மொன்று
பாழான வயிறு புரள
பனை பின்னால் பதுங்கிக் குந்தி
படுதுயர் போக்கும் போது
இடையிலே கிடந்த கண்ணி
இடியெனப்பின்னால் முழங்க
கடையவனே! இவனின் காலை
காப்பதுன் கடனே அன்றோ?

## போதை – VIII

மண்டிக் கள் அருந்தினோர்க்கு
மலசலச் சிக்கல் இல்லை
வண்டியும் சுருக்கம் கண்டு
வயிறொட்டிப் போவ தில்லை
வண்டுகள் பூச்சி பூரான்
வாயாரக் குடித்த எச்சம்
உண்டிடும் போது மீசை
உதவிடும் வடியாய் அன்றோ?

## போதை – IX

*பேதி மருந்து வாங்கென்றல்லோ*
*பேரன் பரியாரி வீட்டைப்போறான்*
*ஊதிவிட்டால் விழும் கிழட்டுக்கு*
*உந்தப் பேதி ஒத்துவராது*
*கொட்டடிக் கோப்பரேசன் கள்ளு*
*குடித்ததும் வேலை செய்யுதாம்*
*எட்டி நடந்தடி மேனை*
*ஏனைக்கை வாங்கி வா கொஞ்சம்*

## போதை – X

*மாப்பிள்ளை தண்ணி வென்னி*
*மருந்துக்குமில்லையாம்*
*எப்பாலும் முழுக்கென்றால்*
*இடை சுகம் எடுப்பாராம்*
*தப்பாமல் முழுகச் சொல்லி மாமன்*
*தன் மாப்பிள்ளைக்குக் கட்டளையாம்*
*மாப்பிள்ளைக்குக் கால் என்றால்*
*மற்றக் கால் மாமனுக்காம்!*

## போதை – XI

*"போத்தலை வையடா கீழை*
*போகட்டும் கதை சொல்லிறன்"*
*"எத்தனை தடவை மச்சான்*
*எடுத்தெடுத்துக் கீழை வைக்க...?"*
*"இப்ப போன மொட்டையர்தான்*
*என்னைப் பெத்த அப்பனடா"*
*"அப்பொருத்தர் அரை அடித்தார்...?"*
*அவர்தான் என் அம்மானடா"*

**- விகடகவி**



# கசிப்பு மான்மியம்

## குறும்பா

கால் பகிர்ந்து அடித்துவிட
கண்ணிரண்டும் மின்னுதடா
அரை வாங்கிப் பகிர்ந்தடித்தால்
அடிவயிறு எரியுதடா
முழுதாய் ஒன்று வாங்கி வந்து
மூன்றுபேரும் அடித்துவர
கண்கெட்ட டொக்டர் இவன்
காணவில்லை ஈரலென்றான்

## காலும் பாதியும்

அடித்ததோ கால் கசிப்பு
அவனுண்டதோ அரை வயிறு
வெடித்த நிலக்கண்ணியாலே
வீழ்ந்ததோ வலக்கால் பாதி
குடி இருப்பதோ கால் பரப்புக் காணி
கூரையோ அதற்குப் பாதி
கூடிக் குடித்ததோ கூழில் பாதி
குடல் நிரம்பியது காலில் பாதி
முடிவிலே இறந்தான் பாவி
மூட்டிய தீ கால் தூக்கில் பாதி
கடிதினில் விடிவு இவர்கட்கில்லை
கால் நூற்றாண்டாகும் என்றார்
படியடா இதனைத் தம்பி
படித்து நீ வெற்றி காண வாராய்!
விடிவதும் நிலைக்க வேண்டில்
வறுமையை ஒழிக்க வாரீர்!

## புகழவா? இகழவா?

கணவனும் மனைவியுமாய்
காப்போத்தல் கசிப்பை வாங்கி
மனமொத்துக் கருவாடு சுட்டு
மகிழ்ந்தொன்றாய் பருகிவிட்டு
இணக்கமாய்க் கிடந்த சோற்றை
இருவரும் பகிர்ந்தே உண்டு

பிணக்கின்றிக் தம்பதியர் ஒன்றாய்
இன்பமே காணக் கண்டேன்
துணைவியை மகிழ வைத்து
தூய நற் காதல் மேவ
இணைத்த இக்கசிப்பின் மாண்பை
இகழவா? புகழவா யான்?

## கொன்றிடும் கொடிய நஞ்சு

கண்ணதும் பார்வை குன்றும்
காததும் மந்தம் ஆகும்
உண்டியில் வெறுப்பு உண்டாகும்
உடலதும் தளர்ந்தே போகும்
கொண்ட நல் மனையாள் கூடத்
கொட்டனும் கையும் ஆக
சண்டையிட்டுக் கதவைப் பூட்டித்
தாழிட்டுக் கலைக்கின்றாளே!
புண்பட வைக்கும் இந்தப்
பொல்லாத 'கசிப்பை' உண்டோர்
மண்மிசை விசர்நாய் போல
மதிகெட்டு அலைகின்றாரே!
வண்ணமார் இளைஞர் கூடி
வகுத்தொரு சபதம் ஏற்பீர்
கண்டிடில் விஷப்பாம் பாமென்று
கொல்லுவீர் கசிப்பை மண்மேல்.

## பெருங்குடி மகன்

பெருத்த பேர்வண்டி தள்ள
பெருங்குடி மகன் இருவர்
ஒருவர் முன் ஒருவராக
ஓரமாய்க் கிடந்தார் வார்ட்டில்
அடித்தேன் கசிப்பு காலை மாலை
அதுதான்டா இந்த வண்டி
குடிமகன் பதில் உரையாய்
கள்ளுடன் கலந்தால் கசிப்பு
கடும் வண்டி தள்ளா தென்றான்
பெறுமாதக் கர்ப்பிணி போல்
பிரண்டு போய் கிடக்கு தென்று
பெண்டுகள் பேசிக் கொண்டு
போயினர் இவர் அருகால்
மச்சானும் மச்சானுமாய்
மறுபக்கம் பிரண்ட வாறு
இழுத்து நீ போர்த்திக் கொண்டால்
இவ்வண்டி தெரியா தென்ன
அடுத்தங்கு டாக்டர் வந்து
அரை அடி ஊசி ஏற்றி
அரை வாளி நீர் இறைக்க
அவ்வண்டி வற்றிப் போச்சு

– விகடகவி




# நாட்டு நடப்பு

செல் உயர சீரழியும்
சீரழிய நாடழியும்
நாடழிய அரசழியும்
அரசழிய அறமழியும்
அறமழிய அதர்மமோங்கும்
அதர்மமே ஓங்குமானால்
அழிவதே அனைத்து மன்றோ?

# கறுப்பது கண்ட வெற்றி

கறுப்பு நிறம் கார்குழல் என்பதாலே
　　காரிகையர் களைந்துவிட நினைப்பதுண்டோ?
மறுவற்ற வெள்ளை முழி நடுவிற் கொண்ட
　　மாசற்ற கறுப்பு விழி அழகாமன்றோ
குறும்பு நிறை குழந்தையர் கண்திஷ்டி போக்க
　　குலமகளிர் சூட்டுவதும் கரும் பொட்டா மன்றோ?
பொறுமையுடன் கை ஏந்தும் கரும் குடையும்
　　பொல்லாத வெயில் மழையில் காக்குதன்றோ?
வறுமை மிக குசேலர் அவல் கொண்டு செல்ல
　　வரமளித்த கண்ணனும் கறுப்பா மன்றோ
பொறுப்புடன் இராமருக்குத் தொண்டு செய்த
　　புகழ் பூத்த குகனாரும் கறுப்பரன்றோ
உறுதியுடன் அமெரிக்கர் உவந்தளித்த
　　உத்தமனார் ஒபாமாவும் 'கறுப்பர்' கண்டீர்
கறுப்பதனின் மாட்சிமையை கவிதையாக்க
　　காணாது இடமெனவே விட்டு விட்டேன்
மறுப்பின்றி காந்தி வழியில் நின்று
　　மானிடத்தின் மகிமைதனை மலரச் செய்வீர்
வறுமை போர் வன்செயலற்ற உலக மதை
　　வழி நடத்த வந்த 'ஒபாமா' வாழி நீடு

– விகடகவி

# ஒபாமா வெற்றி உலகினைக் காக்குமா?



கறுப்பரை அடிமை ஆக்கி
கட்டி வைத்து அடித்த நாட்டில்
கறுப்பரை விலைபேசி விற்ற
காலமும் இருந்ததன்று
கறுப்பராம் 'ஒபாமா' தன்னைக்
களங்கமில் தலைவராக ஏற்று
கறுப்பரும் வெள்ளையரும் ஒன்றாய்
களிக்கின்றார் அகமகிழ்ந்து
கறுப்பராம் ஒபாமா பேச்சில்
கக்கிய கனலைக் கண்டோம்
கறுப்பராம் உம் நீதிகாண
காத்திருக்குலகு இன்று
கறுத்த போர் முகில்கள் சூழ
கலங்கிடும் உலகை இந்த
கறுப்பராம் ஒபாமா நாளை
காப்பாரோ பொறுத்திருந்து பார்ப்போம்
கறுப்பதும் வெளுக்குமானால்
கடவுள்தான் என் செய்வாரோ?

# விதியதும் மழையே யாச்சு!

விதியே விதியே தமிழர் சாதியை
என்செய நினைத்தாய் என்றனன் பாரதி
ஆதி திராவிடர் வழிவழி வந்த நாம்
அன்பொடு அறநெறி கொண்டு வாழ்ந்தவர்
தீதிலா ஒழுக்கமும் திறமுடை பண்பெலாம்
திக்கெட்டும் பரப்பி வாழ்ந்தது எம்மினம்
ஓதியே பற்பல ஓதரும் பாக்களை
ஒப்பரும் பக்தியோடு ஓதித் திளைத்தனர்
ஆதியாம் பரம்பொருள் ஐயனை வேண்டியே
அவனடி பரவியே வாழ்ந்தது தமிழினம்
கதி நீயெனக் கண்ணீர் சொரிந்தவர்
கண்ணீர் மல்கிட வைத்தனை விதியே!

* * *

இடியதை இடித்துநீ எச்சரித்திலை
இருள் கவிந்திட இடி இடித்திலை
கொடிய மழையதைக் கொட்டிட முன்னர்
காரிருள் கிழித்து மின்னினை இல்லை
குடிமக்களைக் கொன்றிட எண்ணியோ
கூதல் காற்றாய்க் குலுங்கிட வைத்தனை

விடிய முன் வெள்ளம் வீறிட் டெழுந்து
  வீடு வாசலை நிறைத்தது எங்ஙனம்?
குடிசைகள் சாய்ந்து குழந்தைகள் அலற
  கூடிய வெள்ளம் கொன்றது பலரை
நாடியே கோவிலை நண்ணிட மக்கள்
  நல்லைக் கந்தனை சூழ்ந்தது வெள்ளம்

* * *

பற்பல பெருமரம் பாறியே வீழ்ந்தது
  பல பல குடிசைகள் மூழ்கின நீரில்
நற்பெரு வயல்களில் விளைந்த நெற்பயிரெலாம்
  நாணிக் கோணி நலிந்து வீழ்ந்தன
முற்றிலும் உழைப்பால் முளைத்த இப்பயிர்
  முழுவதும் கடலெனும் வெள்ளத்தில் மூழ்கின
பெற்ற பிள்ளை போல் பேணிய வாழைகள்
  பேதலித்துச் சாய்ந்தன குலையுடன்
அற்புதம் இதுவென அகமகிழ்ந்தனை விதியே
  ஆவினம் தன்னை அலற ஏன் வைத்தாய்
பற்பல கூட்டினைக் கட்டிய பறவைகள்
  பார்த்தே பதறச் சாய்ந்தன பழமரம்

* * *

அழித்து எம்மை அடிமை ஆக்கி
  அனாதையாக்கி விரட்டி ஓட விட்டனை விதியே!
பழி யென்ன செய்தார் மக்கள்?
  பகர்ந்திடு விதியே நீயும்
விழி யெல்லாம் கண்ணீர் மல்க
  விடிந்தது வெள்ளக் காடாய் மாற

அழிந்தது வடகிழக்கு என்றால்
ஐயனே அதுவுன் விருப்பமாச்சோ
பழியெல்லாம் உனக்காம் அன்றி
பைந்தமிழ் இனத்துக் கல்ல
அழித்தொழிப்பது உன்விருப்பே என்றால்
ஆரிடம் இனி நாம் இதைச் சொல்வோம்?

* * *

சாலைகள் பலதைத் தடுத்தரண் பலர்கட்ட
சரிவர வெள்ளம் ஓடிடவில்லை
சாலவும் சிறந்த மாநகர சபையார்
சரியாய் வடிகால் அமைத்தது மில்லை
காலையும் மாலையும் குப்பை கூழத்தைக்
களவாய் தெருக்களில் குவித்தனர் மக்கள்
வேலையற்ற வீணர்கள் பொலித்தீன் பையை
வீதிகள் தோறும் வீசி எறிந்தனர்
நலம் பெறு பட்டினம் நமதென எண்ணார்
நாலாபுறமும் வெட்டினர் வீதியை
மலசல கூடக் கழிவதும் கூட
மறைவாய் வீதியில் மறைத்தே எறிந்தனர்
நிலமகள் இவற்றால் நிம்மதி இழந்தே
நலம்பெற என்றே நாடினாள் மழையை!

* * *

விதியதே வலியதென்று நீயும்
வித்தகா விளம்பி நின்றால்
துதி செய்து உன்னைப் பாடி நாமும்
தொழுவதில் பயன் தானேது?
அதி உயர் விதியின் மேன்மை
ஆழிப் பேர் அலையே என்றார்
மதிமிகு இளைஞர் இதனைக் கேட்டால்
மதிப்பரோ ஈசா உன்னை
அதிபதி உலகுக் கெல்லாம் என்று
அன்று நாம் படித்த பாடம்
விதியதே வலிய தென்ற பின்னர்
வியக்கவே வைத்ததெம்மை

– விகடகவி

# காலத்தின் கோலம்

ஒன்பது மணிக்குக் கந்தோர்
　　ஏகினார் ஏரம்ப மூர்த்தி
ஏனிந்த தாமதம் என்று
　　ஏசினார் முகாமையாளர்
என்றும் நான் பழைய நேரத்தையே
　　இறுக்கமாய்ப் பற்றுகிறேன் என்றார்
பின்னேரம் நாலடிக்கும் முன்பே
　　புறப்பட்டார் ஏரம்பமூர்த்தி
ஏன் இந்த வேளைக் கென்று
　　ஏசவே முகாமையாளர்
பின்னேர வேளைகளில் நானோ
　　பின்பற்றுவது புதிய நேரம் என்றும்
என்னதான் வந்தால் என்ன
　　இங்கிருப்பது இரண்டு நேரம்
அன்னத்தை சாளியில் ஏற்றிக்கொண்டு
　　ஏகினார் ஏரம்பமூர்த்தி தியேட்டருக்கு.

10.04.2002 - **உதயன்**

# கோட்டுக்கு வந்த தெய்வம்

கோயில் வழக்குத் தீர்க்க
    கோடொன்று புறம்பாய் வேண்டும்
கோயிலின் பெயரைச் சொல்லி
    கோஷ்டிகள் மோதிக் கொள்ள
ஆயிரமாய் பணத்தை வீசி
    ஆருக்கு இறைவன் என்று
வாயாரச் சட்டம் பேசும்
    வம்பினைக் காண்கின்றோம் இங்கு
போயிந்த அநாகரிகம் தன்னைப்
    போக்கிட வேண்டும் மக்கள்
"சீ!" இந்த அநாகரிக செய்கை
    சிவநிந்தை ஆயிற்றன்றோ!

**18.02.2002 - உதயன்**

# களவிலும் கவனம் வேண்டும்

ஆச்சியும் அப்புவுமாய்
அடைமழை பெய்வதாலே
உச்சுவை அவிழ்த்துவிட்டு
உள்வீட்டில் உறங்கிவிட
கச்சிதமாய்ப் புகுந்த கள்வர்
கிழட்டு ரீவியைத் தூக்கிக் கொண்டு
முச்சக்கர வண்டி ஏற்றி
மூலையால் திரும்பும் போது
கீச்சு கீச்சென சத்தம் கேட்டு
கிழட்டுப் பெட்டியைத் திறக்க
ஆச்சி அடைவைத்த கோழி
அவுக்கெனப் பறந்து போச்சு
பேச்சின்றிப் பெட்டியைப் போட்டு
பேயனும் எடுத்தான் ஓட்டம்.

10.01.2001 – உதயன்

# தென்மராட்சி அன்றும் இன்றும்

## இன்று – II

கலைதவழ் கோபுரம் சூழ்
கவின் பெறத் திகழ்ந்த மண்ணில்
மலையெனப் பழங்கள் ஒன்றாய்
மண்மிசை குவிந்த மண்ணில்
நிலை குலைந்து அலறும் மக்கள்
நீங்காத துயரில் மூழ்க
தலை மகன் தனை இழந்து
தவித்திடத் தாய் மாரெல்லாம்
அலையலையாக வந்து வீழ்ந்து
அழித்திடப் பல்குழல்கள் ஒன்றாய்
கலங்கியே கண்ணீர் மல்க(க)
கடந்து சென்றனர் தாயாம் நாட்டை.

**06.02.2002 – உதயன்**

## இன்று – III

மாதவக் கொழுந்து கற்பால்
மதுரையை எரித்தாள் அன்று
தீதற நீதியோச்ச சோழன்
தேரேற்றி மகனைக் கொன்றான்
பாதகம் என்ன செய்தார்
பண்புசேர் தென்மராட்சி மக்கள்?

ஓதரும் தமிழ்ப் பண்பாட்டிற்கு
ஒப்பரும் உவமை சொன்ன
மாதவம் செய்த மண்ணை
மாய்த்தது புரிந்த இப் போர்.

07.02.2002 - உதயன்

## இன்று - IV

தேனொடு பால் கலந்ததென்ன
தெவிட்டாத இசை முழங்க
கான மாமழை பொழியக்
கன்னியர் உவகை பூக்க
வானவர் புகழ்ந்து போற்ற
வனிதையர் அறத்தைக் காக்க
தானமும் தவமும் ஓங்க
தமிழவள் உளம் மகிழ
மானத்தைக் காக்கும் வீர
மறவர்கள் முரசு ஒலிக்க
தொன்மைசேர் தமிழர் பண்பைத்
தொலைக்காத தென்மராட்சி
வண்ணமார் தமிழ்த் தாயாளின்
வதனமாய்த் திகழ்ந்ததம்மா!

04.02.2002 - உதயன்

# சமாதானம் எப்போ வரும்?

புகைவண்டி என்றால் என்ன
புகலுவீர் என்று ஆசான்
நகைப்புடன் ஆண்டு ஆறை
நயந்து வினவி நின்றார்
நாற்பது மாணவரில் நால்வரே
நாம் அதைக் கண்டோம் என்றார்
முப்பத்தாறும் எழுந்து ஒன்றாய்
முனைப்புடன் ஒன்று கேட்டார்
எப்படி புகைவண்டி இருக்கும்
இயம்புவீர் ஐயா! என்றார்
தப்பாது சமாதானத்தோடு
தவறாது இங்கு வருமே என்றார்
எப்படி சமாதானம் தன்னை
ஏற்றிவரும் என்று இளைஞர் கேட்க
ஒப்பரும் நோர்வே நாட்டார்
ஒருவாறு கிரேனால் ஏற்ற
தப்பாது சமாதானத்தைத் தாங்கி
தரைவழி வருமே என்றார்
இப்போ புகைவண்டி இல்லாததாலோ
இங்கு சமாதானம் இல்லை? என்றான்
இளைஞன்.

10.03.2002 – உதயன்

# ஹோட்டலில் மிதிவெடி

அதிக பசியினால் வாடி
ஆகாரம் உண்ண எண்ணி
புதிதாக என்ன போட்டீரென்று
பூரித்துக் கேட்டார் மாஸ்ரர்
அதி விரைவாக ஓடிப்போய்ப் பார்த்துவிட்டு
அடுப்பில் 'மிதிவெடி' என்றான் பையன்
மிதிவெடி என்று கேட்ட போது
மெதுவாகப் பண்டிதர் ஓடலானார்
அதிசுவை உண்டி ஐயா!
அதில் ஒன்றைச் சுவையுமென்ன
இது என்ன பார்ப்போமென்று
இட்டமாய் சுவைத்தார் வாத்தி
அதி சுவை அதனில் கண்டு
அதிலொன்றை வாங்கிச் சென்றார்
புதிதாகப் போண்டா பெயரை
எறி குண்டென மாத்தலாமோ! என்றார்.

**23.02.2002 - உதயன்**

# காண்பனோ? வாழ்வில் நானே!

காலினில் பாதசரம் அசைய
கைவளை கலகலக்க
ஆல் விழுதினை ஒத்த
அணியெனப் பின்னல் ஆட
சேலையால் மறைத்த மேனி
செப்பமாய்க் கற்பைக் காக்க
மாலையில் சூடிய பூ
மரகதத் தேனைச் சொட்ட
சாலையில் ஓரமாக மங்கை
சஞ்சலம் அற்றவளாய்
வேலைக்கு நடந்து செல்ல
வியந்ததை ஆடவர்கள் மெச்ச
நிலையினில் உயர்ந்த நங்கை
நில மகளையே நோக்கிச் செல்லும்
காலமது மலரும் நாளைக்
காண்பனோ? வாழ்வில் நானே!

08.04.2002 - உதயன்

# கிழடுகள் திருந்துவாரோ?

இளைஞர் ஒழுக்கமிப்போ
இழிவின்றி ஓங்கக் கண்டு
வளர்ந்திடும் இளைஞர் பண்பை
வாயார வாழ்த்துகின்றார்
கிழடது தட்டும் காலம்
கிட்டுதே மயானம் என்று
தளர்ந்திடும் உடல் நிலையில்
தாம்மிகப் பொறுப்பிழந்து
வளர்ந்திடும் வாலிபர்களெல்லாம்
வனப்புற உவமை ஆகார்
பழசுகள் கசிப்பு மண்டி
பள்ளத்தில் வீழ்தல் காண
அளப்பரும் அவமானம் மேவ
அங்கு வாலிபர்கள் கூடி
வளர்த்தியே கிடத்தி பாயில்
விசுக்கிட வியர்ந்தேன் உள்ளம்
கொழுத்த நற் பென்சன்காரர்
கொட்டலாமோ? கசிப்பில் காசை!

**16.03.2002 – உதயன்**

# இதுவும் அது

## செம்மறியும் நகர் பஸ்ஸும்

கூடி ஒன்றாய் நிற்பதனால் கூட்டமாய் ஓடுவதால்
ஓடி உட்புகுந்து உரஞ்சுவதால் - வாடிப்போய்
முட்ட முட்ட நின்று மூச்சுத் திணறுதலால்
நாட்டுச் செம்மறியும் நகர் பஸ்ஸும் ஒன்றென்றே நவில்.

## நுளம்பும் மனையாளும்

படுத்திருக்க மெல்ல பக்குவமாய்க் கிட்ட வரும்
அடுத்து இன்னிசையை அது எழுப்பும் - உருக்கமாய்
தொட்டுத் தடவித் தூங்கவிடாது வைத்திருக்கும்
கெட்ட நுளம்பும் கெடுதியில்லா மனையாளும் ஒன்றே அறி.

**(23.08.2001)**

## மாணவரும் கழுதையும்

மூட்டை கட்டிப் பொதியை முதுகில் சுமப்பதனால்
இட்டமுடன் தெருவில் இடர் தந்து நடப்பதனால் -
கூட்டமாய்க்
கட்டளையை மீறிக் கத்திக் கனைப்பதனால்
கெட்ட மாணவனும் கேடான கழுதையுமொன்றே கேள்.

**(22.08.2001)**

## துணைவியும் துவக்கும்

கொண்டு திரிவான் கொடுக்கான் ஒருவரிடமும்
கண்டும் காணாமல் கட்டி அணைத்திடுவான்
அணைத்தே படுத்திடுவான் அடிக்கடி தொட்டிடுவான்
துணைவியும் துவக்கும் ஒன்றென்றே அறி!

(24.08.2001)

## தும்மல் கிழவியும் இருமல் கிழவியும்

நித்தமும் அரசியல்பற்றி நீயும்
நீள்கவிதை எழுதென்றார் நண்பரெல்லாம்
சத்தியமாக ஒன்றை நானுமிங்கு
சாற்றுவேன் பகிரங்கமாக
பச்சைச்சேலை கட்டிய கிழவியொன்று
பரப்புவாள் இருமியே கிருமிதன்னை
நீலச் சேலை கிழவியாளோ நாளும்
தும்மியே பரப்புவாள் கிருமியெல்லாம்
நிச்சயம் எக்கிழவி வென்றாலென்ன
நீங்காது எம்பிரச்சினைகள்
கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு
களத்தில் இறங்கி என்ன?
உச்சமாய் இதை உணர்ந்ததாலே
ஊமையாய் இருப்பேன் யானே!

(06.11.2001)

## எருதும் திருமண நங்கையும்

கூட்டிவரக் கொஞ்சம் குனிந்தே நடந்துவரும்
மாட்டிவிடக் கழுத்தில் மசிந்தே அதை ஏற்கும்
- நாட்டமுடன்
பூட்டிவிடப் பொறுப்பாய்க் கொண்டிழுக்கும்
தன்மையினால்
கட்டும் தாலியும் கட்டை வண்டி எருதும் ஒன்றே அறி.

**(06.08.2001)**

## பெட்டையும் பெடியும்

மொட்டைத் தலைவெட்டால்
முழுநீளக் காற்சட்டையினால்
கட்டை பதித்த உயர்காலணியால்
காதிலிருதோடதனால்
வட்டக் காப்பு அனிவதனால்
வலிந்து சைக்கிள் ஓடுவதால்
பெட்டையும் பெடியும் இங்கு
ஒன்றென்றே பேசு. இனி

**(27.08.2001)**

## புடலையும் பின்னலும்

பார்க்க நீண்டிருக்கும் பக்குவமாய் ஆடி நிற்கும்
காற்றில் ஆடாமல் கடைசியில் முடிச்சிருக்கும்
- ஏற்றமுற
தூங்கும் அழகு தூண்டிவிடும் கொடி அழகை
பாங்கான புடலையும் பாவையரின் பின்னலும் ஒன்றேஅறி.

# கண்டவுடன் காதல்

கண்ணால் வலைவீசிகால் விரலால் கோலமிட
எண்ணரிய பரிசில்களை இவன் தருவான் - பெண்ணிவளோ
மாற்றான் ஒருவனுடன் மனம்விட்டுப் படம் பார்த்தபின்பு
பெற்றோரை விட்டோடுவாள் இப் பெண்.

அப்பன் பிடித்துவந்து அடிஉதைகள் தான் தரவே
செப்பமாய்ச் சிலகாலம் சீவிப்பாள் – தப்பாது
கை அடக்கத் தொலைபேசி காதல்தனை வளர்த்திடவே
பையவே பாய்ந்திடுவாள் இப் பெண்.

பெற்றெடுத்தார் பிள்ளையொன்று பேதலித்தாள் அறியாது
நற்தந்தையோ யாரென்று நவிலாது - பிற்பகலில்
பெற்றெடுத்த பாலகனைப் பெரும்பாயில் வளர்த்திவிட்டு
அற்புதமாய்ப் போய் மறைந்தாள் பெண்.

குழந்தைவரம் கேட்டழுது
குல மகளும் கண் கலங்க
களங்கமிலா அக்கணவனவன்
கசிந்து மிக மனம் உருக
ஆழக்கிடங்கில் அழுதகுரல் கேட்டு
அள்ளி அணைத்த அழகுத் திருமகளை
களங்கமிலா வேல் முருகன்
கனிந்தளித்தான் கந்தசஷ்டியிலே!

## (கொழும்பில் தண்ணீர் விநியோகம் பாதிக்கப்பட்டபோது அதன் பின்னிணியில் எழுந்த கவிதை இது)

வடகிழக்கிலங்கை தன்னில்
வாழ்ந்திடும் தமிழர் ஒன்றாய்
இடர்பட்டு வடிக்கும் கண்ணீர்
நிலமகளினை நீராட்டி நிற்க
விடும் அவர் வெப்ப மூச்சு
விரவியே தென்னிலங்கை மேவ
கொடும் அனல் காற்றாய் வீசி
குடி நீரை உறிஞ்சி நிற்கும்
படுதுயர் நீங்க வேண்டில்
பகிர்ந்தளிப்பீர் ஆட்சி தன்னை.

# வேலையில் உயர்ந்த ஐயா

காலையில் கனகர் அண்ணை
கந்தோரை தேடிக் கொண்டு
காண வேண்டும் எம் ஐயாவை என்று கெஞ்ச
வேலையில் இருந்த பியோன் விறுக்கென
ஓடிவந்து
வியாழன் இன்று ஐயாவுக்கு வெளியூர் வேலை
என்றான்
வேலை வெட்டியை விட்டுக் கனகர்
விறுக்கென மறுநாள் வர
விழாவொன்றுக்கு போய்விட்டார் என்று
சொன்னான்
மாலையில் ரேடியோவின் மகத்தான செய்தி
கேட்டான்
மக்கள் சேவையை மதித்து இலங்கை அரசு
வேலையில் சிறந்த ஐயாவுக்கு
விஷேச சலுகை தந்து வியப்புற
பெரும் பதவி வழங்கினார் என்று சொன்னார்.

**11.04.2002 – உதயன்**

# ஆங்கிலம் மெல்லச் சாகும்

பண்டைய யாழ்ப்பாண மண்ணில்
பாங்குடன் ஆங்கிலத்தைக் கற்றார்
இங்கிதமாய் பேசுமாற்றல் பெற்றார்
இன்புற்றார் ஏற்றம் கண்டார்
பொங்கிடும் ஆங்கிலப் பேருரைகளை
பொழிந்தனர் பொன் இராமநாதன்
ஆங்கிலத்தைப் பேரிடி மழையாய் பெய்து
அதிரவைத்தார் "ஐ.நா" வில் ஜீஜீ
அங்கிருந்த ஆங்கில மாதரெல்லாம்
அணைத்தனர் முத்தம் தந்தார்
இங்கே ஆங்கிலத்தின் தரமதோ
இழிந்து பட்டழியலாச்சு
ஆங்கிலத்தைப் பல்லாயிரவர் கற்றார்
ஆனால் இறுதியில் என்ன கண்டார்?
ஆங்கில இலக்கியச் சோதனையில்
ஆக மூவரே விஷேட சித்தி பெற்றார்.
இங்கினி இங்கிலீசு சாகும்
இதனை இனித் தடுப்பார் யாரோ?

**07.04.2002 - உதயன்**

# யாழ் நகர்க் காட்சி

2. தெருவெல்லாம் குப்பை சேர்ந்து திரட்டியே
மலைபோல் சேர
ஒருபெரும் இந்துக்கல்லூரி யண்டை ஓரமாய்க்
கொட்டிவிட
அருகினில் கல்லூரி ஆசான்மார் அயராது
நுளம்பை ஓட்ட
திருவுடை இளைஞர் எல்லாம் திரள்கிறார் மருந்து
தேடி.

தெருவோரம் புல்லுப்பற்றை செருக்குவார்
யாருமில்லை
ஒரு சேர அயலார் கூடி ஒரு போதும்
அழிப்பதில்லை
இருக்குது நமக்கு வேலை இப்பணி நமது அன்று
என்பார்
ஒரு சேரக் காய்ச்சல் வாட்ட உயிர்பிரிய
வாடுறாரே.

**25.01.2002 – உதயன்**

4. உள்ளத்தில் உறுதி வேண்டும்
ஊக்கமும் உணர்வும் வேண்டும்
கள்ளமிலா மனது வேண்டும்
கடமையில் பக்தி வேண்டும்
தெய்வமே தூய்மை என்று
தெரிந்திட வேண்டும் மக்கள்
உயர்ந்திட உயர்வு கிட்ட
உகந்ததோர் மார்க்கம் சொன்னேன்.

அன்பொடு நகர பிதாவை
அதன் பின் கூட்டி வந்து
இன்புறக் காட்டி விட்டு
இன்னுரை பலவும் நல்கு
பொன்னொளிர் மகுடம் சூடு
போற்றியே புகழ்ந்து பேசு
வண்ணமார் பட்டினத்தின்
வனப்பினைக் காக்க முந்து!

**27.01.2002 – உதயன்**

# கல்வியின் தரம் குறைந்ததேனோ?

அன்று யாழ்ப்பாணத்தில் கல்வி
அதி உயர் நிலையில் கண்டோர்
இன்று இங்கு கல்வி வீழ்ச்சி கண்டு
இரங்குகின்றார் மனது நொந்து
அன்றிருந்ததோ ஒரேயொரு கல்விக் கந்தோர்
அங்கிருந்ததோ ஒரேயொரு கல்வி
அதிகாரி

இன்றே சந்திக்கும் சந்தி தோறும்
இருக்குது கல்விக் கந்தோர்
எண்ணினால் முப்பத்தேழாய் இங்கு
இருக்கின்றார் கல்வி அதிகாரிகள்
எண்ணிலா அதிபர் மார்கள்
இருக்கிறார் நிறைய இங்கு
எண்ணில் தரம் ஒன்று இரண்டு
இன்னும் மூன்று நாலு என்றும்
இன்னமும் தரம் கிடையாது
தவிக்கின்றார் பல அதிபரிங்கு

எண்ணியே பொயிலைப் பாடம்
தரகர் தரம் பிரிப்பது போல்
வண்ணமார் ஆசிரியர் தம்மை
வகுக்கிறார் பல பிரிவாய்
உண்மையில் கல்வி இங்கு
உயரவே இல்லை என்று
எண்ணிலா இளைஞர் ஒன்றாய்
ஏகிறார் ரியூசன் கொட்டில்!
மண்ணினிலே கல்வி போச்சு
மதிப்பதும் ரியூசனுக்கே ஆச்சு.

**13.11.2001 – உதயன்**

# மாதர் மாண்மியம்



## நாடோ இது காடுதானோ ?

கோடேறி அறியா நங்கை
 கொழுநனைத் தொழுது வாழ்ந்தாள்
வீடதே கோயிலாகக் கொண்டு
 வித்தகி வாழ்ந்தாள் அன்று
காடேகிக் கசிப்புக் காய்ச்சி
 கள்ளமாய் அதனை விற்று
சூட்டோடு கடலை சுண்டல்
 சுந்தரி வழங்கி விட்டு
கோடேறித் தெண்டம் கட்டும்
 கொடுமையைக் கண்ட போது
நாடோ இது காடுதானோ
 நம்பிட முடியவில்லை.

## இது தகுமோ?

சிறப்புறு வீடுவாசல்
செந்நெல் விளையும் பூமி
பொறுப்பற்று இவற்றை விட்டு
போயினை மேலை நாடு
பெறுமதி இவற்றுக்கு இப்போ
பெருகிற்று மும் மடங்கு
அறிந்ததும் அங்கிருந்தவாறு
அனுப்பினாய் "அற்றோணித்தத்துவம்"
பெறுபவன் கொட்டன் பொல்லு
போத்தலும் கையுமாய் வந்து
வறுமையோடு ஆண்டு பல அங்கு
வாழ்வானை விரட்டி ஓட்டி
தருமங்கள் செய்வதாக
தரணிக்குச் சொல்லலாமோ?

## பெயரும் போச்சு

ஆங்கில நாடு மற்று
அமெரிக்க நாடு போன்ற
ஓங்கிடும் புகழ் படைத்த
ஒப்பரும் மேலை நாட்டில்
தாங்கள் தம்பெயரை மாதர்
தாம் மாற்றிக் கொண்டாரில்லை
ஈங்கு நம் ஈழநாட்டில் இன்று
எல்லாமே புதிதாய்ப் போச்சு
தங்கம்மா பொன்னம்மா தங்கச்சிப்பிள்ளை
தங்கமுத்து அன்னப்பிள்ளை ஆச்சிமுத்து
இங்கிதமாய் இனியிந்தப் பேரையெல்லாம்
இந்நாட்டில் எப்போ நான் கேட்கப் போறேன்?

## பூவையர் மாவையார் ஆகிவிட்டார்

பூவினைத் தலையில் சூடி
பொழுதெல்லாம் 'பூ' மாலை கட்டி
பாவையர் வாழ்தல் கண்டு
பூவையர் எனப்பேர் பெற்றார்
மாவினை முகத்தில் பூசி
மாக்குழைத்தே பொழுது போக்குவோரை
நாமினி "மாவையர்" என்று
நவிலுதல் தப்போ சொல்வீர்
பூவையர் மாவையரானதாலே
புகுந்தது பல கேடிங்கு.

## ஆரைத்தான் நம்பிடுவாள்

காலையில் நல்லூர் நண்ணி
கண்ணீர் சொரிந்து நிற்பாள்
மாலையில் துர்க்கை அம்மனுக்கு
மலர் மாலை சூடச் செல்வாள்
சோலையில் பூப்பறித்து நாளும்
சொக்கனுக்குப் படைத்தே உண்பாள்
வேலைக்குப் போகு முன்னே
வித்தகி வேதக்கோவில் போவாள்
நாலைந்து மெழுகேற்றி விட்டு
நாளும் முழங்காலில் நிற்பாள்
நிலையாக ஓர் தெய்வத்தை
நம்பினால் பயனில்லை என்பாள்
ஆலையில் பஞ்சைப் போல்
அலைந்தென்ன கண்டீர் மிச்சம்?

## குலமகளே வாழ்க நீடு

குடித்து விட்டு நிதமும் வந்து
கூந்தலைப் பிடித்திழுத்து
அடியுடன் உதையும் தந்து
அயலவர் சிரிக்க வைப்பான்
குடித்த கள் வேலை செய்ய
கூடுவர் அயலோர் எல்லாம்
படித்த நீ இப்பட்டதாரி தன்னை
பாங்குடன் நேசிக்கின்றாய்
படிகடவா பத்தினி உன்
பண்பினை மெச்சுகின்றேன்
குடிமகன் தன்னைப் பேணும்
குலமகளே! வாழ்க நீடு!
அடி உனக்கு ஈடு இந்த
அவனியில் உண்டோ சொல்லு?

## ஏந்திளை என்ன செய்வாள்?

மெல்லியல் அந்த நங்கை
மிதிலை நற் செல்வி போல்வாள்
நல்ல பேர் பண்பில் மிக்காள்
நலம் பெறு குணத்தில் குன்று
வல்லவன் வடிவில் மிக்கான்
வரதனை முடித்து வைத்தார்
நல்லவனாய் நடித்த காளை
நாளும் கால் கசிப்பை உண்டான்
பொல்லாத காலம் என்று
பூவையோ பொறுத்திருந்தாள்
எல்லாமே பயன் அற்றுப்போக
ஏந்திழை உண்டாள் நஞ்சு.

## ஒப்பரும் இந்நாட்டு மங்கை

கூப்பனுக் கரிசி வாங்கி
கொண்டு போய் உலையிலிட்டு
தப்பாது கணவன் உண்ண
தானதைத் தந்து விட்டு
எப்போதும் அதன் மீதி தன்னை
இரங்கியே மக்கட்கீந்து
ஒப்பனைக்கு உண்பது போல்
ஒருவாய் உண்டு காட்டி
செப்பரும் பசியைப் போக்க
செம்மையாய்த் தண்ணீர் உண்டு
இப்படிப் பசியோடு வாழும்
உத்தமி இந்நாட்டு மங்கை
தப்பாது உன்போன்றோராலே
தமிழ் இங்கு தளைக்குதம்மா
எப்படி உனைப் புகழ்வேன் தாயே!
என் இதயத் தெய்வம் நீயே!

## பய பக்தி

பூட்டாத சயிக்கிள் தன்னைப்
பூவையோ வெளியே விட்டு
உட் புகுந்து ஆலயத்துள்
உத்தமி பூசை காண்பாள்
எட்டி எட்டிப் பல முறையும்
என்னாச்சு சயிக்கிளுக்கென்று
விட்டு விட்டு ஓடி வந்து
வித்தகி வெளியே பார்ப்பாள்

இட்டம் போல் பூசை தன்னை
இவள் காண முடிந்ததில்லை
பட்ட இவள் பாட்டைக் கண்டேன்
"பய பக்தியை" அறிந்து கொண்டேன்.

## மின்னுவதெல்லாம் பொன்னல்ல

அன்ன நடை மாதரசி அழகுப் பாவை
அணிந்தது அனைத்துமே அழகு நகை
பெண்ணிவள் மயிலதுபோல் நடந்து செல்ல
பின் தொடர்ந்த காளையோ கொள்ளைக்காரன்
வண்ணமுறு வனிதையோ நடந்து செல்ல
வந்தவனோ நகையனைத்தும் பிடுங்கலுற்றான்
பொன்னகையே இவை என்று பூரித்த பேயன்
போயிதனை நகைக்கடையில் மதிக்கலுற்றான்
கண் கவர்ந்த நகையனைத்தும் பொன்னேயல்ல
கட்டழகி போட்டதெல்லாம் 'காக்காய் பொன்னு'
எண்ணத்தில் இடிவிழவே இந்த முட்டாள்
ஏக்கத்தில் தலைகுனிந்து தவித்து நின்றான்
கண்ணுக்குப் பொன்னாகத் தெரிவதெல்லாம்
கடைசிவரை பொன்னென்று கருதிடாதே!

## பாவம் சரசக்கா

சயிக்கிளில் ஓடிய சரசக்கா
சடுதியாய் விழுந்தார் நடுத்தெருவில்
பையவே கிட்டப் போய் பார்த்தால்
பக்கத்தில் கிடக்குது பல் செற்று
கழன்று விழுந்த தலை டோப்பை
கவ்விக் கொண்டோடுது நாய்க்குட்டி
சுழன்று சுழன்று பின் திரிந்த
சுந்தரன் விட்டான் 'லவ்' அன்று.

## நிர்க்கதியான நங்கை

சுதுமலை வாழ் சுகன்யாவுக்கு
        சுந்தரேசன் சுவிஸ் மாப்பிள்ளை
மது அருந்தா மாப்பிள்ளைக்கு
        மணமகளை அனுப்பி வைத்தார்
குதூ கலமாய் சுந்தரேசனங்கு
        கூட்ட வந்தார் மணப்பெண்ணை
இது ஈழத்து வேலைக்காரியென்று
        இழுத்துச் சென்றாள் முதல் மனையாள்
தீது தரும் வெளிநாட்டுத் திருமணத்தால்
        திக்கற்றுத் தவிப்போரைக் காணவாரீர்.

# பேச்சடா! எல்லாம் போச்சடா!

**(தென் இலங்கை வரட்சி பற்றி பாடியது)**

*கங்கைகள் தமிழ்நெஞ்சம் போல*
*கடுமையாய் வறண்டு போச்சு*
*நங்கையர் விடும் வெப்பமூச்சால்*
*நாடெல்லாம் வறட்சி ஆச்சு*
*எங்கணும் இருளே சூழ்ந்து நிற்க*
*ஏதுமே அறியாமலாச்சு*
*சங்க நல்நூல்கள் சாற்றும்*
*சரிதமும் மறந்தே போச்சு*
*பொங்கிடும் இனமதபேதம் தன்னை*
*போக்கிடாது ஆட்சி போச்சு*
*வங்கக் கடலில் புயலும் போச்சு*
*வான மா மழையும் போச்சு!*

**– விகடகவி**

# ஒரு மரண அறிவித்தல்

பண்டிதர் பத்மநாதனார் பட்டினத்தில் காலமானார்
பத்தினி இப்போ பாரிஸில் வாழுகின்றார்
இன்புறப் பெற்ற மைந்தர் இப்போ
இலண்டனில் வாழுகின்றார்
அன்பான பெண் குழந்தை இப்போ
அவுஸ்திரேலியாவில் குடியேறிவிட்டாள்
கண்ணெனக் காத்த கடைக்குட்டி
கனடாவில் வாழுகின்றான்
வண்ணமார் குழந்தை நாலும் இப்போ
வனப்புற வெளிநாட்டில் வாழுகின்றார்
நண்பன் வீட்டில் பத்மநாதனார்
நாலுமணிக்குக் கண்மூடி விட்டார்
கண்ணெனப் போற்றும் மாணவர்கள்
காவுவார் உடலை நாளை
ஒன்றாக நீவிர் ஒன்று கூடி
ஒருமித்து கோம்பையன் மணலுக்கு வாரீர்!
நன்றாக (TV) படம் பிடித்தனுப்ப
நன்மக்கள் வேண்டியுள்ளார்.

– விகடகவி

# நவீன ஆத்திசூடி

*கத்தி ஏந்திய கள்வன் கழலினை*
*வீழ்ந்து வீழ்ந்து வணங்குவம் யாமே!*

*அடித்துப் பறித் துண்*
*ஆவினைக் கொன்று தின்*
*இழி செயல் விரும்பு*
*ஈனர்க்கு உதவிடு*
*உண்டி பெருக்கிடு*
*ஊருடன் பகைத்து வாழ்*
*எடுத்திடு கத்தியை*
*ஏற்றிடு கொடுமையை*
*ஒழித்திடு பக்தியை*
*ஓடிக் கற்பழி*
*ஔவியம் பேசு*
*எஃகென நெஞ்சை வை.*

– விகடகவி

# விடிந்திடப் பிறப்பது விமோசன ஆண்டு!

இன்றுடன் ஓராண்டு இனிதே முடிந்திட
ஏங்கிய ஏக்கங்கள் இன்றுடன் மறைந்திட
பண்ணிய பாவங்கள் பலவும் தொலைந்திட
புண்ணிய புருஷராய்ப் பூதலம் வியந்திட
எண்ணிய எண்ணங்கள் எளிதில் கிட்டிட
ஏனைய கெடுபிடி எல்லாம் அகன்றிட
நண்ணிடும் ஆண்டு நலம்பல விளைந்திட
நல்லவை நடந்திட தீயவை தீந்திட
மண்ணினில் சுதந்திரம் மலர்ந்து ஓங்கிட
மாநிலம் கண்டு மக்கள் மகிழ்ந்திட
விண்ணமர் தேவர் வியந்தெமை வாழ்த்திட
விடிந்திடப் பிறந்திடும் விமோசன ஆண்டு

– விகடகவி

# ஒழுக்கத்தைக் காத்த நாடு

வழுக்கை ஆறு ஒன்றுதான் இந்த மண்ணில்
வளைந்து நெடுந்தூரம் ஓடிச் செல்லும்
ஒழுக்கமாய் நீர் இதனில் ஓடியதாய்
ஒருபோதும் வரலாறு இங்கில்லை
முழுதுமாய் வாவிகளோ குளங்கள்தானே
முன்னும்தான் இன்றும்தான் இங்கேயில்லை
வழுவிலா நீர் நிலைகள் எங்கேனும் இல்லை
வற்றாத கிணறுண்டு நிலாவரையில்
ஒழுக்கம் தான் இம்மண்ணில் நீராய் ஓடி
ஓங்குபுகழ் சேர்ந்ததிந்த மண்ணுக்கென்றும்
பழுதிலா ஒழுக்கம் ஒன்றைக் காத்தே
பார்புகழ் வாழ்ந்ததிந்த பைந்தமிழர் நாடு
எழுந்திரடா; ஒழுக்கத்தை நாளும் காத்து
ஏற்றமிகு இந்நாட்டைக் காப்பாய் நீயே!
அழுபவளும் ஈழத்தாயாளன்றோ
அவள் துயரைக் களைவதும் உன்டெமையன்றோ.

– விகடகவி

# நம் நாடு

நாட்டினிலே நல்ல நாடு - எங்கள்
யாழ்ப்பாண நாடு.

வாட்டினிலே பற்பல வரிசையிலே
கட்டிலிலே நிதம் காய்ச்சலிலே
முட்டினிலே கொடும் மூளைக் காய்ச்சலிலே
விட்டுவிட்டு வரும் ஜுரத்தினிலே - நாட்டினிலே

ஊசியிலே பல்வகைக் குளிகையிலே
நாசியிலே சுவாசக் குழல் ஓட்டலிலே
ஏசியிலே சிலர் மாள்கையிலே
மாசியிலே மக்கள்படும் அவஸ்தையிலே - நாட்டினிலே

சேற்றினிலே சுரி நீரினிலே
பற்றையிலே போடும் குப்பையிலே
"பிற்" றினிலே விழும் வெடிப்பினிலே
வீற்றுப் பெருகிடும் நுளம்பினிலே - நாட்டினிலே

கசிப்பினிலே ஈரல் கரைதலிலே
புசிப்பதனால் வண்டி பெருப்பதிலே
வசிப்பதிலே வாழ்நாள் குறைவதிலே
கசிப்பினையே காய்ச்சும் பாணியிலே - நாட்டினிலே

– விகடகவி

# சைவ மரபினை பேணுகின்றார்!

"காலணியோடு மேலணியும் ஒன்றாய்
கழற்றியே உள்ளே வாரும்"
ஆலய அறங்காவலர் இப்போ
அழகாக எழுதி வைப்பார்
மேலணி தனைக் கழற்றி தம்பி
மெலிந்த காற்சட்டை மீது சுற்றி
தோலினால் ஆன பையை
தோளிலே தொங்க விட்டு
ஜாலியாய் இளைஞர் இப்போ
ஆலயம் வந்து போவார்
காலணி சோடியாக விட்டால்
காவுறார் பக்தர் என்று
காலணியை திக்கு வேறாய்
கழற்றியே விடுதல் காண்பீர்
சீலமாய் வருவோர்க்கு இவை
சிந்தைக்கு விருந்தாம் அன்றோ!

– விகடகவி

# குஞ்சாச்சி தந்த அட்டை

(தீராத விளையாட்டுப் பிள்ளை' என்ற மெட்டில் அமைந்த பாடல்)

மஞ்சள் நிறத்திலோர் அட்டை - என்றும்
மறவாது உன்னோடு இருக்கின்ற அட்டை
நெஞ்சோடு ஒட்டிக்கொண்டுன்னை - என்றும்
நீங்காது கண்ணென காக்கின்ற அட்டை
அஞ்சாதே எனச் சொல்லி உன்னை - என்றும்
அபயம் அளிக்கின்ற அழகான அட்டை
கொஞ்சம் எழுத்தழிந்து விட்டால் - என்றும்
கோட்டில் ஏற்றத் தயங்காத அட்டை
பஞ்சாய் பழுத்துவிட்ட கிழடும் - என்றும்
பக்குவமாய் பேணிக்காக்கின்ற அட்டை
குஞ்சாச்சி தந்த இவ்வட்டை - என்றும்
கூவித் திரியும் அடிமைத் தனத்தை.

– விகடகவி

# யாழ்நகர்க் காட்சி

தெருவெல்லாம் குப்பை சேர்ந்து திரட்டியே மலைபோல் சேர
ஒருபெரும் இந்துக் கல்லூரி யண்டை ஓரமாய்க் கொட்டிவிட
அருகினில் கல்லூரி ஆசான்மார் அயராது நுளம்பை ஓட்ட
திருவுடை இளைஞர் எல்லாம் திரள்கிறார் மருந்து தேடி.

தெருவோரம் புல்லு பற்றை செருக்குவார் யாருமில்லை
ஒரு சேர அயலார் கூடி ஒருபோதும் அழிப்பதில்லை
இருக்குது நமக்கு வேலை இப்பணி நமது அன்று என்பார்
ஒரு சேர காய்ச்சல் வாட்ட உயிர்பிரிய வாடுறாரே.

குப்பையை அப்பன் கொட்ட குமரதும் உதவி நிற்கும்
அப்பனுக் குதவியாக ஆருயிர் மைந்தன் நிற்பான்
செப்பமாய் விடியு முன்னே சீராக குப்பை கொட்ட
தப்பாது பரிசொன்றாக தாயவன் தருவாள் தேநீர்

– விகடகவி

# கண்டனன் அரிய காட்சி

ஆங்கில அணங்கு ஒருத்தி
    அழகுசேர் வண்ணப் பாவை
குங்குமத் திலகம் சூடி
    கூட்டியே தலையைப் பின்னி
மங்கள மஞ்சள் பூசி
    மலர் கொண்டுமாலை சூடி
பங்கமில் வண்ணச் சேலை
    பாங்குடன் வரிந்து கட்டி
அங்கது அவிழா வண்ணம்
    அரையிலோர் வாரும் கட்டி
நங்கையவள் நாணம் மேவ
    நடந்திட மகிழ்ச்சி உற்றேன்
எங்கம்மா செல்கின்றாய்? என
    எழில் பெறுதமிழ் விழாவை
மங்கள விளக்கை ஏற்றி
    முறைப்படி தொடக்க என்றாள்
எங்கள் தமிழ்ப் பண்பு இன்னும்
    இருக்குது இறக்கவில்லை என்பேன்.

– விகடகவி

# வழியொன்று வகுத்து வாழ்விப்பாய்

பண்டைய தமிழர் எங்கள்
பழம் பெரும் வாழ்வில் எல்லாம்
உண்டியை எமக்குத் தந்த
உழவர் தம் செயலை மெச்சி
கன்றுடன் பசுவும் நல்ல
காளையையும் கூட்டி வந்து
கதிரொளி வீசி நின்ற
கதிரவன் தன்னைப் போற்றி
மாவிருள் திரட்டி வந்து
மழைதனைப் பொழிய வைத்து
வான், கடல், காற்றைப் போற்றி
நன்றி நவின்றிடும் நன்னாளின்னாள்.

இன்று.....
அன்பெனும் பானை ஏற்றி
அறிவெனும் விளக்கைத் தூண்டி
பண்பெனும் நீர் நிறைத்து
பக்தியாம் அரிசி இட்டு
பகுத்தறிவாம் தீயை மூட்டி

செந்தமிழ் கலையாம் மாவால்
சிறப்புறு கோலம் தீட்டி
வந்த இப்புதிய ஆண்டில்
வல்வினை அனைத்தும் மாள
பொங்கிய பொங்கல் தன்னை
பூவையர் ஒன்றுகூடி
ஈசனார் முன் படைத்துவிட்டு
இறைவனை ஒன்று கேட்போம்
துயரெலாம் களைந்துபோக
தூய நல் அமைதி பூக்க
இணையிலாது எமது மக்கள்
இன்பப் பூங்காவில் திளைத்து நிற்க
வழியொன்று வகுத்து எம்மை
வாழ்விப்பாய் ஈசா! போற்றி

– விகடகவி

# பொங்கல் வாழ்த்து

கதிரவன் ஒளியை நல்க
கார்முகிலாள் மழையை நல்க
நிலமகள் இதனை ஏற்று
நீள்புவி நிலவில் தோய
அலைகடல் ஆர்ப்பரித்து மேவ
பெரும் புயல் மழையதோடு
பேரிடி இடித்து மின்ன
ஆடவர் களனி தோறும்
அயராது உழவு செய்ய
பயனேதும் கருதாக் காளை
பணிவுடன் உதவி நிற்க
பசுவதும் பாலை நல்கி
பண்புடன் உதவி நிற்க
நிலமகள் காற்று வானம்
நீர் நிறை தடாகம் மற்று
வீசிய தென்றல் காற்று
விளைந்தது செந் நெல்லன்றோ
பண்டைய தமிழர் போற்றி

பகுத்தறிவாம் தீயை மூட்டி
செந்தமிழ் கலையாம் மாவால்
சிறப்புறு கோலம் தீட்டி
வந்த இப்புதிய ஆண்டில்
வல்வினை அனைத்தும் மாள
பொங்கிய பொங்கல் தன்னை
பூவையர் ஒன்றுகூடி
ஈசனார் முன் படைத்துவிட்டு
இறைவனை ஒன்று கேட்போம்
துயரெலாம் களைந்துபோக
தூய நல் அமைதி பூக்க
இணையிலாது எமது மக்கள்
இன்பப் பூங்காவில் திளைத்து நிற்க
வழியொன்று வகுத்து எம்மை
வாழ்விப்பாய் ஈசா! போற்றி

- விகடகவி

# பொங்கல் வாழ்த்து

கதிரவன் ஒளியை நல்க
கார்முகிலாள் மழையை நல்க
நிலமகள் இதனை ஏற்று
நீள்புவி நிலவில் தோய
அலைகடல் ஆர்ப்பரித்து மேவ
பெரும் புயல் மழையதோடு
பேரிடி இடித்து மின்ன
ஆடவர் களனி தோறும்
அயராது உழவு செய்ய
பயனேதும் கருதாக் காளை
பணிவுடன் உதவி நிற்க
பசுவதும் பாலை நல்கி
பண்புடன் உதவி நிற்க
நிலமகள் காற்று வானம்
நீர் நிறை தடாகம் மற்று
வீசிய தென்றல் காற்று
விளைந்தது செந் நெல்லன்றோ
பண்டைய தமிழர் போற்றி

பண்புடன் நன்றி சொன்ன
இன்ப நன் நாளிந்த
இனிய நற்பொங்கல் உண்டீர்
ஆதியாம் சூரியனைப் போற்றி
அக மிக மகிழ்ந்து விட்டீர்
அரிசியை உண்டு விட்டு
அகற்றிய தவிட்டை உண்டு
நெல்தனைக் கொய்த பின்னர்
நீக்கிய வைக்கோல் உண்டு
கன்றுக்கே சுரந்த பாலை
கபடமாய் கறந்து விட்டு
எருதையும் பசுவையும் நாம்
ஏற்றியே போற்றினோமா?
நயமுடன் இவற்றிற்கெல்லாம்
நன்றி நவின்றிடும் இந்த
பட்டியில் பொங்கும் பொங்கல்
பாரினுக்கோர் உவமையன்றோ?

# நாட்டு நடப்பு

## ரியூட்டறி – I

ஒழுக்கிடும் ஓலைக் கொட்டில்
ஒடிந்திட்ட வாங்கு மேசை
குழுக்களாய் பலவாய் அங்கு
கூடிறார் ஆயிரமாய்
கத்துறார் மூச்சு வாங்க
களத்தினில் கொமாண்டர் போல
மெத்தவே அதிர்ச்சி உற்றான்
மேல் நாட்டான் இதனைக்கண்டு
சத்தியம் பண்ணிச் சொன்னான்
செகத்தினில் எங்குமே இதுபோலில்லை.

## ரியூட்டறி – II

காலையில் முதுகில் மூட்டை
கட்டியே கழுதை போன்று
மாலை ரியூசனால் வந்து தானே
மாட்டிறான் கழட்டி வீட்டில்
எட்டிலே படிக்க முன்பே
எலும்பெல்லாம் கோலிப்போச்சு
இட்டம் போல் இவன் நிமிர்ந்து
இனி நடப்பதும் எந்த நாளோ?

## ரியூட்டறி – III

தம்பியர்க்குத் தனியே நாலுபள்ளி
தங்கையர்க்கும் தனியே நாலு
நம்பியும் நங்கையாளு மொன்றாய்
நயம்பட ஒருங்கே கற்றால்
கண்டதும் கலைக்க மாட்டான்
கவுணையும் இழுக்க மாட்டான்
முண்டி அடித்தோடிச் சென்று
கொட்டிலில் முட்டிக்கொண்டிருக்கமாட்டான்.

## ரியூட்டறி – IV

வாடி உனக்கெத்தனை 'டி' ! ?
வந்ததோடி உனக்கு மூன்று 'டி' !
போடி இது உனக்கு போதுமோடி?
போயடி படி ஐந்து ' டி' க்கு
ஆடிச் சோதனையில் எனக்கு
ஆறு ' டி' வந்திடாட்டி
கூடியே பொலிடோல் வாங்கி
கூட்டமாய்க் குடிப்போமோடி?

## ரியூட்டறி – V

மூன்றுசில்லு சைக்கிள் ஒன்றில்
மூச்சுவாங்க ஓடுதொன்று
ஆண்டதற்கு ஐந்தும் இல்லை
அப்பனும் பின்னால் போறான்
ஓடியே அதுவும் அங்கு
உட்புக வீடு ஒன்றில்
கூட்டியே பாலர்க்கு அங்கு
கொடுக்கிறார் ரியூசன் ரீச்சர்

## ரியூட்டறி – IV

ஒரு நூறு சைக்கிள் ஒன்றாய்
ஓரமாய் நிற்கும் றோட்டில்
குரு ஒரு 'சி நைன்ரி " ஏறி
சீறிக் கொண்டங்கு வந்தார்
'எடு எடு! கொப்பி" என்றார்
'எழுதுங்கள் உடனே" ! என்றார்
கடகடவென எழுதித் தள்ளக்
கட்டாயம் வரும் இக்கேள்வி என்றார்
கடைசியில் வந்த கேள்வி
கண்டு கேட்டறியாக் கேள்வி

## ரியூட்டறி - VII

பட்டினத்தில் குத்தெழும்பப் பேத்தி
பதைபதைத்து ஆஸ்பத்திரி நண்ணி
டியூசன் கொட்டிலுக் கோடிச் சென்று
குறித்துவா புதிய பெயர்கள் என்றாள்
'டிக்சி, டிலானி, டுக்சி, டுலானி
டக்சி, டயானா, டிம்பிள், டினோ
டிக்சன், டுலான், டுக்சன், டைசன்,
டிலான், டிக்கோ, பெக்கி, பெக்கொ"
இத்தனை இனிய பெயரும்
இங்குள்ள சைவர் பேராம்.

## ரியூட்டறி - VIII

வீட்டிற்கோர் யுவதி வந்தாள்
விரும்பியே பாடம் கேட்டாள்
எட்டுமணியடிக்க தாயாள் வந்து
'டுக்சி ! டுக்சி!!" என அழைத்தாள்
பெற்றதாய் கூப்பிடுதல் கேட்டு
பெண்ணவள் ஓடிச் செல்ல
சற்றேனும் தயக்கமின்றி என்
சடை நாயும் ஓடிப் போச்சு
கற்ற அப் பெண்ணின் பெயரே!
கறுவல் நாய் பெயருமாச்சு!–

## ரியூட்டறி - IX

காலை மாலை நல்லூருக்கு
கஸ்தூரி தவறாது போய் வந்தாள்,
வேலை எதுவும் இருந்தாலும்,
விடாது போவது இவள் வழக்கம்.
சோதனை சித்தி என்றவுடன்
போவதை அறவே விட்டு விட்டாள்.
'நல்லூர் அருகில் ரியூட்டரிக்கு
நான் ஏன் போறன் இனி? " என்றாள்

## ரியூட்டறி - X

ஐந்தாம் வகுப்பில் அரவிந்தன்
அழுது அழுது கும்பிட்டான்.
பத்தாம் வகுப்பிற்கு வந்தவுடன்
பாட்டி கடவுளைக் காட்டென்றான்
முத்தம்மா பல சொல்லிடவே
மூடு வாயைக் கிழடு என்றான்.
நித்தம் ஜோதிகா படம் முன்பு
நேரில் நின்று வழிகின்றான்.

## ரியூட்டறி - XI

வாத்தி ரியூட்டரியில் படிப்பித்து
வாய்விட்டு பெரிதாய்க் கத்திவர
காற்று வயிற்றில் புகுந்தமையால்
கடிதில் வயிறும் பெருத்திடவே
மெத்த நெஞ்சும் வலி யெடுக்க
மேலும் பிரசர் அதிகரித்து
உத்தமி வீட்டில் கண்கலங்க
உயிரை விட்டார் ரியூட்டரியில்
இத்தனைக்கும் இவ் ஆசான்
எதுவும் படிப்பிக்கவில்லை பள்ளியிலே

– விகடகவி

# விரட்டிட 'செவ்வாய்' தன்னை வீரனே எழுந்து வாடா!

*வீடு தோறும் குமர்கள் கூடி*
*விம்மிடக் கண்டீரன்றோ?*
*கேடு கெட்ட "செவ்வாய்" க் குற்றம்*
*கிட்டியது சாதகத்தில் என்று*
*பருவத்தில் திருமணத்தை விட்டு*
*பரிதவித்து நிற்கின்றாரே!*
*அட இந்தச் செவ்வாய் தோஷம்*
*அத்தனை கொடியதாமோ!*
*இப்படிக் கலங்குகின்ற எங்கள்*
*எழிலுறு பாவையொன்றின் நிற்கதிதனையிங்கு*
*கவிதையாக்கி, நீட்டினேன் படித்துப்பாரும்*

*மயிலென அழகில் மிக்காள்*
*மான்விழி மாதரசி அன்னாள்*
*குயிலதன் குரலினோடு*
*கூந்தலும் மேகம் போன்றாள்*
*தமிழதைத் சுவைத்தே பேசும்*
*தகைமையில் "எம். ஏ" ஆனாள்*
*அமிழ்தெனும் குரலினோடு*
*அரங்கினில் பாடவல்லாள்*
*கற்பனை மிகுதி மிக்காள்*

கவி பல இயற்றி நிற்பாள்
அற்புதத் அழகுப் பாவை
அரங்கினில் ஆடவல்லாள்
பற்பல உவமை சொல்லும்
பண்டிதர் இவளைக் கண்டு
அற்புத தமிழ்ப் பாவையென்று
அகமிக மகிழ்ந்து கொள்வார்
நவயுக நாகரிக நடையுடை
நம் தமிழுக்கொவ்வாதென்பாள்
விரலதும் பவளம் போன்று
மீட்டிடும் வீணை தன்னை
கண்டவர் களிப்புற்று நிற்க
கற்பினில் உயர்ந்தாள் நங்கை
அண்டையில் பழகுவோர்கள்
அவள் அறிவினை மெச்சி நிற்பர்
சண்டைகள் இவளைக் கண்டால்
சரிவர ஓய்ந்து போகும்
பெண்டுகள் இவள் பெருமை தன்னை
பேசியே பெருமை கொள்வர்
கெட்ட இச் செவ்வாய் தோஷம்
கேட்டினை விளைத்து நிற்க
எட்டினில் செவ்வாய் இந்த
ஏந்திழைக் கென்றார் ஊரார்
தொட்டவன் தொலைந்து போவான்
தோகையும் விதவையாவாள்
அட்டமச் செவ்வாய் மெல்ல

அடித்திடும் ஆண்மகனை என்றார்
இப்படி ஏசிப்பேசி இழிவுற்ற இந் நங்கை
"அப்படி நாற்பதாண்டை"
அகம் நொந்தே கழித்து விட்டாள்

ஆங்கில நாட்டில் மற்றும்
அமெரிக்க நாடு தன்னில்
சீனத்தில் ருஷ்யாவில்
சீர்மேவு கனடா நாட்டில்
கடல் தனைக் கடந்து வாழும்
களங்கமில் தமிழர் வாழ்வில்
சென்னையில் மதுரை தன்னில்
சிறப்புற்ற எம் வரலாறு தன்னில்
செவ்வாயைக் காரணமும் காட்டி
சீரழிந்ததோ அன்றெம் வாழ்வு?

வென்றிடச் செவ்வாய் தன்னை
வீரனே! எழுந்து வாடா!!
கண்ணிறை கண்ணீர் மல்க
கலங்கிடும் வனிதையர் தம்
துன்பத்தைத் துடைத்தெறிய
துணிவுண்டோ! உனக்கு என்பேன்
மண்ணினில் செவ்வாய் தன்னை
மதியினால் விரட்டி ஓட்டு
பகுத்தறிவுப் பாசறையில்
நீயும் பகலவன் போல் எழுந்து வாடா!

- விகடகவி

# நல்லையிற் கயிலைக் காட்சி

*பேரிகை முரசம் கொட்ட*
*பின்னணி தவில் முழங்க*
*வேதியர் வேதம் ஓத*
*விண்ணவர் பூச்சொரிய*
*மாமணி ஒலி கிளப்ப*
*வெண்ணிறச் சங்கு ஒலிக்க*
*ஆதவன் உதித்து வந்து*
*ஆசிகள் பலவும் நல்க*
*ஆழிப் பேரலை யாதென்ன*
*அடியவர் ஆர்ப்பரிக்க*
*நாடியே பக்தர் எல்லாம்*
*நல்லைக் குமரனை வியந்துபாட*
*கானமா மயிலை விட்டுக் கந்தன்*
*கனகமா மணித் தேரேறி*
*கயிலை போன்ற சைந்த தேரில்*
*கந்த வேள் வீதி வந்தான்.*

– விகடகவி

# நல்லை மான்மியம்

முற்றும் துறந்த முனி ; முழுதும் அறிந்த முனி
உற்ற ஒரு சீடனை ; உவந்து கண்ட நல்லையிது
கூடியந்த யோகருடன் கூத்தாடிய வீதியிது
ஓடிமிக ஒளித்த ஒப்பற்ற வீதியிது
நல்லைக் கந்தனிவன் நாடி வந்த தேர்முட்டியிது
செல்லப்பர் சிரித்துறுள சீடன் சிரித்த வீதியிது
கந்தனிவன் காட்சிதந்து கடிதில் மறைந்த வீதியிது
அல்லும் பகலும் தேடி அலைந்த திந்த வீதியிது

யோகமுனி தனித்திருந்து யோக நிஷ்டை செய்த இடம்
தோகை மயில் மால்மருகன் தோன்றியதும் இந்த இடம்
செல்லப்பரைச் சூழ்ந்து சித்தர் தரிசித்த இடம்
நல்லை முருகனிவன் நல்ல அடி பட்ட இடம்
அல்லல் நீங்குமிடம் அரியவினை போக்குமிடம்
இந்த இடம்போன்ற இடம் இல்லையடி ஈழத்தில்
வந்து நிதம் பணிந்திட்டால் வரமனைத்தும் தந்திடுவான்
கந்தனிவன் எங்கள் கலியுகத்தின் கடவுளெடி

– விகடகவி

# நல்லையில் கொடியேற்று

எழில் பொழில் சூழ்திரு
இணையிலா நல்லையில்
வழி வழி வந்த எங்கள்
வான் புகழ் மரபுபேணி
ஒளிதவள் முருகன் முன்னே
ஒப்பரும் கொடிய தேற
களி பேருவகை உற்று
கந்தவேள் ஆசி நல்க
விழிதனில் கண்ணீர் மல்க.
விம்மியே பக்தர் சூழ
அழிவெனும் அவலம் போக்கி
ஆண்டெமைக் காப்பாயென்று
அலையெனத் திரண்ட பக்தர்
அரோகரா என முழங்க
ஊழிக் கூத்தாடும் ஈசன்
உவந்தனன் உமையாளோடு
களிப்புற்று மக்கள் வாழ
காட்டுவாய் மார்க்கமொன்று

– விகடகவி

# நாட்டு நடப்பு



## தெல்லியூரில் அருங்கொடி ஏறிற்றன்றோ?

வானுயர் கோபுரம் சூழ
வண்ணமர் தெல்லியூரில்
தேனுடன் அமுது சொட்டும்
செப்பரும் தெய்வத் தாயாள்
விண்ணவர் வியந்து போற்ற
விரும்பியே கோயில் கொண்டாள்
தானமும் தவமும் ஒன்றாய்
தங்கம்மா தந்து நிற்க
கானமா மழை தன்னைக்
கருணையாய்ச் சொரிவாள் துர்க்கை
ஆன எம் துயர் களைய
அருங் கொடி ஏறிற்றன்றோ?

- விகடகவி

# நல்லை வந்து அமர்ந்ததேனோ?

தமிழ்த் தாயே உன் மகனே வேலன் என்றாய்
தமிழ் இனத்தைக் காப்பது மகன் கடமை அன்றோ
அமிழ்தம் எனும் தேன் பாகே தமிழாம் என்றால்
அதைச் சுவைத்து மகிழ்ந்தவனும் கந்தன் அன்றோ?
முச் சங்கத்து அரியணையில் அமர்ந்து நீயும்
முழுதாகச் சுரந்த தெல்லாம் அமிழ்தம் அன்றோ?
முத்தமிழும் முடி கொண்ட வேந்தர் மூவர்
முழுதுமாய் மாந்தியது உன் பாலை அன்றோ?
அக்த்திய மா முனிவனவன் பொதிகை ஏற
அயராது காத்தவனும் வடிவேலா நீயே
அல்லல் உறும் தமிழர் எமைக் காக்கத் தானே
அழகு நல்லைப் பதி மேவி அமர்ந்தாயன்றோ
இன்னலதும் தமிழுக்கு வந்ததென்றால்
இப்பழியும் நின்னையே சாருமன்றோ?

– விகடகவி

# நல்லை வீதியில் நாளும் வந்திடு

பல் விழுந்த பாட்டியர் பற்பலர்
பொல்லினை ஊன்றியே பூரித்து நின்றனர்
சொல்லிழந்த முதியவர் கூடியே
சோர்வு நீங்க நின்றனர் வீதியில்
சொல்லரும் கொடு நோய்வாய்ப்பட்டவர்
சோர்ந்து விழுந்து கிடந்தனர் வீதியில்
மெல்லியர் நங்கையர் மேனி மினுக்கியே
மெதுவாய் உன்நாமம் இயம்பி நின்றனர்
வல்ல நல்ல வாலிபர் ஆயிரம் ஆயிரம்
வந்து விழுந்து உருண்டனர் வீதியில்
அல்லல் போக்கும் ஆறுமுக வேலவா!
நல்லை வீதியில் நாளும் வந்திடு
அல்லல் தீர இன்று ஆனந்தக் கொடியேறுது.

- விகடகவி

# கந்தனே பதில் சொல்வாயே

*கலியுக வரதன் என்றே உன்னைக்*
*கந்தவேள் புராணம் போற்றும்*
*கலியதன் வலிமை எல்லாம்*
*கடற்கோளும் காட்டிற்றன்றோ*
*கலியதன் வலிமை தானே*
*கனமழை காற்று வெப்பம்*
*கலியதன் வெப்பம் கூடி*
*கரையுது பனிப் படலமெல்லாம்*
*கலியதால் பூமித் தாயாள்*
*கலங்கியே நடுங்குகிறாள்*
*கலியதன் வலிமை தன்னைக்*
*கண்டிலையோ? கந்தவேளே!*
*கலியதே வலியது என்றால்*
*கதிர் வேலால் பயனுமுண்டோ?*

## இதுவே தருணம்

*வண்ணமார் கொடியதேற வாய்விட்டுப் பக்தர் எல்லாம்*
*கண்கணீர் சொரியக் கந்தனே உனை அழைப்பர்*
*அன்னை தந்தையுடன் அழகுமயில் ஏறி வந்து*
*இன்னல் களைய இதுவே தரு ணமய்யா!*

# வெண்கொடி ஏறக் கண்டோர்

கங்கையைச் சடையில் சூடி
களிநடம்புரியும் ஈசன்
பொங்கெழில் புவனமேழில்
பூதலத்து இலங்கை என்னும்
ஓங்கு ஒலி அலைகள் சூழ்ந்த
ஒப்பரும் 'நயினை" கண்டார்
இங்குவந்து நாகபூஷணியாள் தன்னை
இரு என ஈசன் சொல்ல
சிங்க வாகனத்தில் ஏறி
சிறப்புடன் அன்னை வந்து
இங்கிதமாய் கொடியது ஏற
ஈசனார் உவகை கொள்ள
வெண் கொடியேறக் கண்டோர்
வினையெலாம் வென்றோர் தாமே.

– விகடகவி

# இடரின்றி வாழ வைப்பாய்

சங்கொடு வேதகானம்
　　தவிலொடு முரசும் கொட்ட
எங்கணும் பக்தர் கூடி
　　இயம்பிட அன்னை நாமம்
பொங்கிடும் கடலின் ஓசை
　　பொலிவுற்று அலையாய் மோத
தங்கமா நிறத்து நாகம்
　　தலைவிரித்து நடனமாட
சிங்க வாகனத்தில் அன்னை
　　சிறப்புற அமர்ந்து வர
மங்கலப் பொழுதில் சேயோன்
　　மாமணிக் கதிர்கள் ஓச்ச
கங்கை வார் சடையான் அண்ணல்
　　களிப்புற்று உவகை பூக்க
ஓங்கிய கொடிக் கம்பத்தில்
　　ஒப்பரும் கொடிய தேற
இங்கிந்த காட்சி கண்டோர்
　　இடரின்றி வாழ்வர் கண்டீர்!

– விகடகவி

# இன்று வீரமாகாளி அம்மன் கொடியேற்றம்

எங்கணும் கோபுரம் எழிலோடு திகழ
எழில்தவழ் மண்டபம் இணையிலாது இலங்க
சங்கொடு மேள தாளங்கள் முழங்க
சாற்றிடும் மந்திர ஓசைகள் பரவ
பொங்கொளிர் "வீரமாகாளி" எம் தாயே
மங்களம் பொங்கிடும் இக்காலை பொழுதினில்
மாமணிக் கொடியதும் ஏறிடும் தாயே
இங்கினி போரதும் இல்லை என்றியம்பி
எழில் பெறு வெண்கொடி ஏற்றியே வைப்பாய்
அங்கயற் கண்ணியே அடைக்கலமென்றே
ஆர்ப்பரிக்கின்றனர் அடியவர் ஒன்றாய்
சங்கரனோடு இணைந்து கலந்துரையாடியே
சஞ்சலம் நீங்க வழியொன்று காட்டு
பங்கமும் தமிழர்க்கு வந்தது என்றால்
பாரில் நின்னைத் தொழுதென்ன கண்டோம்?

– விகடகவி

# அன்னையே! எமக்கினி யார் தான் தஞ்சம்?

பண்ணிறை பவளச் செவ்வாய்
பவள மாமேனியோடு
வண்ணமா கோபுரம் சூழ்
வனப்புறு கோவில் தன்னில்
அன்னையே! நீயும் வந்து
அமர்ந்தனை அரசு ஓச்ச
கண்கவர் வெண் கொடியையின்று
கருத்துடன் ஏற்றுகின்றார்
எண்ணரும் கவலைமேவ நின்தன்
இணையடி வேண்டுகின்றார்
அன்னை நீ உலகிற்கெல்லாம்
ஆதலால் ஒன்று கேட்பேன்
இன்னமும் துயரே என்றால்
எமக்கினி யார்தான் தஞ்சம்?

– விகடகவி

## நல்லையில் – I

வடமெனச் சங்கிலி ஒன்றை
வண்ணமாய்க் கழுத்தில் மாட்ட
அடிவயிறு மட்டும் சென்று
அங்கது தொட்டு நிற்க
'கடப்' பானை போல் வயிற்றினோடு
கடகடவெனப் பிரதட்டை பண்ண
"அட! இவன் செல்வத்திற்கு
அதிபதி" என்றார் பக்தர்!

## நல்லையில் – II

குனிந்து குனிந்து குமுதா
கும்பிடு போட்டுச் செல்ல
அணிந்த அவள் பதக்கம்
அடித்து மண்மேல் ஒலிபரப்ப
'எதற்கடி இதனை மாட்டி
இங்கு நீ வந்தாய்?' என்ன
'இதனை நான் அணியா விட்டால்
என்னையார் மதிப்பார்? " என்றாள்.

## நல்லையில் –III

வீதியில் ஐஸ்கிறீம் பந்தல்
விளக்கினால் ஒளி பரப்ப
மோதிய பக்தர் கூட்டம்
முறைப்படி கியூவில் நின்று
போதிய இடம் கிடைக்க
போயங்கு இணைந்து குந்தி
தீதிலா ஐஸ்கிறீம் உண்ணும்
திருநிறை காட்சி கண்டோர்
ஆதியாய் சிவசக்தி வாழும்
அரும் தில்லை கண்டோர் தாமே!

## நல்லையில் - IV

"லோங்ஸோடு" வருவோர்க்கெல்லாம்
'லோயலாய்' கருணை நல்கும்
சீலமார் சிவனின் செல்வா!
சீரடி பணிந்து கேட்பேன்
"கவுனோடு" வரும் கன்னியர்க்கும்
கருணை நீ காட்டாவிட்டால்
அவுணர்க்கு ஆசி நல்கியதை
ஆரணங்கு நம்புவாளோ?

## நல்லையில் - V

அஞ்சுகம் அழகாய் வந்தாள்
அரவிந்தனும் அவிந்து போனான்
கெஞ்சவே மிஞ்சிக் காதல்
கிளுகிளு லவ்வாய்ப் போச்சு
மஞ்சத்து மாலை அன்று
மறைவாகத் தந்தாள் முத்தம்
வஞ்சகி மனம் அறியாது
வழங்கினான் தங்க மோதிரம்
அஞ்சினான் தேரில் அன்று
அன்புக் குழந்தையோடு போறாள் நங்கை.

## நல்லையில் – VI

நாளுமே வந்தோம் கந்தா
நாமுன்னைப் பணியவில்லை
பாலும் ஐஸ்கிறீம் குடித்து
பலமுறை பேதி யாச்சு
தோளிலே கையைப் போட்டு
சுற்றினோம் புகையை விட்டு
காதலை வாழவைத்த கந்தனே!
குளிர்களியே! போற்றி! போற்றி!

## நல்லையில் - VII

நல்லையூர் கந்தன் உலா
    நலமுடன் வருதல் காண
தில்லையான் உமையாளோடு
    திடீரென இங்கே வந்தான்
ஆறு மணி அடிக்க முன்னே
    அனைத்துமே முடிதல் கண்டு
சீறியே இடபம் ஏறி
    சினத்துடன் கயிலை ஏகி
கூறினான் உமையை நோக்கி
    " கொண்டு வா மணிக்கூடொன்று "

## நல்லையில் – IX

வீதி எங்ஙனும் பக்தர்கள் கூடியே
    வேகும் வெய்யிலில் வாடி வதங்கிட
ஆதி சிவன் தரு ஆறுமுகவனே
    ஆடு மயில்மிசை ஏறி வருகிறாய்
ஓடி ஓடியே பத்மநாதனும்
    ஓங்காரமாய்த் தோடி வாசித்திட
கூடிய பக்தர் கூட்டமாய் ஓடியே
    கொடிய வெய்யிலில் ஓடுதல் நீதியோ?
நாடிப் பல மைல் ஓடி வந்தவர்
    தேடிக் காணமுன் திருக்கதவும் பூட்டுதே!

## நல்லையில் - X

அவசரம் எதற்கு ஐயா?
    ஆலவாய் அமரன் சேயே!
பவனி வருவதும் நீயு மந்த
    பக்தரைப் பார்க்கவன்றோ?
மணிக் கூட்டைப் பார்த்து நாமும்
    மலரடி பணிய வேண்டில்
மணிக் கூடும் நீயுமொன்றோ?
    மாமணி வேலா செப்பு!

## நல்லையில் - XI

சந்நிதி வாழும் கந்தன்
    சாப்பாடு நல்கும் கந்தன்
வந்திப் போர் கவலை போக்கும்
    வானமர்'மாவைக்' கந்தன்
அந்தமில் செல்வம் மேவும்
    அழகனாம் நல்லூர்க் கந்தன்
வந்திடாதே இங்கே யென்று
    விரட்டினான் கதிர்காமக் கந்தன்
இந்த நால்வரையும் போற்ற
    இன்னுமேன் விடிவு கிட்டவில்லை?

**(10.08.2001)**

## நல்லையில் - XI

ஐயா! உன் வீர தீரம்
    அனைத்தையும் அறிவார் பக்தர்
பொய்யோ! இவை அனைத்துமென்று
    புழுங்கிறார் இளைஞர் நொந்து
ஐய்யோ! எம் அவலமெல்லாம்
    அறியாத கல்லோ உள்ளம்
மெய்யான வீரன் என்றால்
    பல்குழலுக்கு நாம் பதறலாமோ?
பையவே எழுந்து வந்தெம்
    படுதுயர் போக்குவாயே!

## நல்லையில் XI

கொட்டிட முரசு எங்கும்
கொற்ற மாமணி ஒலிக்க
எட்டுத் திசையும் பக்தர்
எழில் பெறச் சூழ்ந்து நிற்க.
மட்டற்ற மலைபோல் தேங்காய்
மக்களே மகிழ்ந்து உடைக்க

பட்டொளி வீசக் கந்தவேளும்
பகலவன் போல் தேரிலேற
தொட்டந்த வடம் பிடிக்க
தொண்டர்கள் இடறி வீழ
கொட்டிடும் கண்ணீர் தாங்கி
நிலமகள் நனைந்து விம்ம
மட்டிலா வண்ண மாத்தேர்
மண்மிசை நகர்ந்த தம்மா

கட்டழகுத் தமிழ்த்தாயே நீ பெற்றெடுத்து
கன்னலெனும் பாலூட்டி வளர்த்த மைந்தன்
பட்டழகு மயில் மீது ஏறி இன்று
பவள மணித்தேர் மீது பவனி வாரான்
மட்டற்ற கடல் அலைபோல் மக்கள் கூட
மாமணித்தேர் மிதக்குமந்தக் காட்சிகாண
இட்டமுடன் ஈசனவன் உமையாளோடு
இணையிலா நல்லூருக்கு வருகை தந்து
கொட்டிநிற்கும் பேரழகைக் கண்டுகொள்ள
கொடிய கண் பட்டுவிடும் என அஞ்சித்தானோ
எட்டிநின்று உமையவளும் இதயம் நொந்து
இனிய வேப்பிலைதன்னை வீசுகின்றாள்
கட்டழகன் பேரழகைக் கண்டோரின்று
கயிலை மாமலையதனைக் கண்டார் தாமே!

# கொற்றவா! ஒன்று கேளாய்!

*கொடியதும் நாளை ஏறுமுன்னே*
*கொற்றவா! ஒன்று கேட்பேன்*
*அடியவர் அலை போல் மோதி*
*அழுதுனை வரங்கள் கேட்பார்*
*முடிவிலாது தொடரும் போரை*
*முடித்துவை என்பார் பக்தர்*
*வடிவினர் "இருவர்" சூழ*
*வந்தெமை மறந்தே போவாய்*
*கடிகமழ் மாலை சூடி*
*கன்னியர் அணைத்துக்கொள்ள*
*கொடி குடை மேளதாளம்*
*கொற்றமா கோயில் சூழ*
*அடியவர் துயரைக் கேட்க*
*அனுமதிக்காது உன்தன் உள்ளம்*
*முடியுடை உனது அண்ணன்*
*மூத்தவன் பிரமச்சாரியாவான்*
*நெடிய உன் தந்தையாரோ*
*நெறி தவறா உமையாள் பாகன்*
*கடிதினில் இவரை எல்லாம்*
*கயிலை விட்டிறங்க வைத்து*
*கூடியே மக்கள் கேட்கும்*
*குறைகளைக் கேட்க வைப்பாய்*
*ஆடிகள் பல நம் பக்தர்*
*அழுதுனை கேட்டதெல்லாம்*
*கூடிய பலன் அளிக்காததாலோ*
*கொற்றவா இதனைக் கேட்டேன்!*

# காடதா நாடா? - நன்று

பட்டங்கள் பெற்ற மேலோர்
பல்கலைப் பேராசான்கள்
கோட்டிலே வழக்காடி நிற்கும்
கறுப்புக் கோற்றினை மாட்டுவோர்கள்
நாட்டு மக்களே கண்டு கேட்டறியா
நலம் திகழ் சமூகத் தொண்டர்
ஏட்டிலே எதையோ எழுதிவிட்டு
எல்லாமே தெரியு மென்போர்
கூட்டியே மக்கள் தம்மைத்
குடை பிடித்துப் பவனிபோவோர்
கிட்டிற்று தேர்தல் எனக் கேட்டு
கிளிர்ந்தெழும் தேச பக்தர்
மட்டிலா மகிழ்சி பொங்க
மலர்வதுதான் இத்தேர்தலன்றோ
முட்டியே மோதிக் கொண்டு
முடிவிலாப் பகையைத் தேடும்
கெட்ட இத்தேர்தல் போல
கேடதும் நாட்டுக் குண்டோ?

காட்டிலே கட்சி இல்லை
கற்றபேர் அறிஞர் இல்லை
கூட்டியே கூட்டம் போட்டு
கொள்கையைச் சொல்வாரில்லை

ஏட்டிலே எழுதுவோரும் இல்லை
        எழுதியதைப் படிப்போருமில்லை
பெட்டிகள் அங்கு இல்லை
        பெரும் வாக்குகள் போடுவாருமில்லை
நாட்டிலே நடப்பது போல்
        நாளும் வன்முறை எதுவுமில்லை
கோட்டிலே வழக்கும் இல்லை
        கோடேறும் வழக்கறிஞரும் இல்லை
பட்டினி பஞ்சம் இல்லை
        பசியுடன் வாழ்வோருமில்லை
இட்டம் போல் இவை இணைந்து
        இன்புற்று வாழக் கண்டீர்?

மட்டிலா அறிவு மிக்க
        மானிடரே இவற்றைப் பாரீர்
கெட்டது இவ் விலங்கினமோ
        கேடு விளைக்கும் மனிதர் தானோ?
பட்டங்கள் படிப்பறிவும் இல்லா
        பல்வகை மிருகங்கள் ஒன்றாய்க்
கட்டுப்பாட்டினைப் பேணியன்றோ
        காட்டினில் வாழுகின்றார்
கெட்டது நாடு என்று பேச
        கேட்கின்றோம் நாளும் நாங்கள்
விட்டிடும் இம்மடமை வாழ்வை
        விழித்தெழு மானிடமே
காட்டிலே வாழ்பவை போல்
        கண்ணியத்தோடு வாழ வாரீர்.

# நாட்டு நடப்பு

ஓடித் திரியுதொன்று தெருவில்
ஊருக்கு புதிசாய் கிடக்கு
முடிந்து கிடக்குதொரு குடுமி
முத்திலை போட்டிருக்கு ஒரு தோடு
தடித்த கறுப்பில் ஒரு சட்டை
தாழப் பதிந்த காற் சட்டை
இடியன் ஏழுமலையின்ரை
இளையவனாம் இந்தத் தம்பி
குடி உரிமை பறிபோனதாலை
கனடாவால் வந்தானாம் நேற்று.

ஏரம்பருக்கோ குழந்தைகள் எட்டு
எட்டும் போனதவரை விட்டு
தாரமும் போட்டாள் விட்டு
தவிக்கிறார் தனிமைப்பட்டு
ஆரெனக்கிங்கே உண்டு?
அழுகிறார் கண்ணீர் விட்டு
ஊரறிய உழைத்து விட்டு
உருகுகிறார் துன்பப் பட்டு
அரிய உயிர் போனால் விட்டு
ஊர் நாய்கள் உண்ணும் எட்டு

ஏரம்பருக்கோ பிள்ளைகள் எட்டு
எல்லாமே போட்டுது இந்நாட்டை விட்டு
தாரம் இழந்த இக் கிழவனாருக்கு
சாப்பாடு தின்ன சில்லறைதான் ஏது?
செத்திட்டார் என்று கேட்ட உடனே
சேர்ந்தொன்றாய் வந்தது பிள்ளைகள் நாலு

முத்துச்சம்பாவில் மூடையோ ஐந்து
முழுதாய்க் கொடுத்ததோ தானங்கள் பத்து

"எழுபது வயதானை வானில்
எங்கை கொண்டு போறியள்?
அழுதழுது கெஞ்சு தெல்லோ
அடையாதையுங்கோ மறியலிலே"!
பொழுது புலரயிக்கை
பூப்பிடுங்கப் போனவளை
பழுதாக்கிப் போட்டானாம்
பாவம் அவளுக்குப் பதினாலும் ஆகவில்லை!

எட்டி எட்டிப் பார்த்தபடி
ஏனடி மிலாந்துகிறான்
கட்டையற்றை கடைக்குட்டி
கவுண் போட்டு முடியவில்லை
கூட்டிக் கொண்டு போகாட்டி
குட்டுறாங்களாம் குமரிக்கு
கட்டப்போறவன் இவன்தானே
கண்காணிப்பாய் இருக்கட்டும்

இலுப்பையடிச் சந்தியிலே நின்று
இளிச்சவாய் இயமனே நீயும்
அலுப்பதை உதயனுக்குத் தந்து
அழித்திடல் முறையோ சொல்லு?

நற்றமிழ் நந்தகுமாரன் தன்னை
நலம்பெறு கானமயிலனாரை
சற்றேனும் இரக்கமின்றி
சாடினாய் முறையோ சொல்லு?

இந்துமதி இங்கிலாந்து சென்று
ஈராண்டு தங்கிவிட்டு வந்து
இந்தத் தமிழ் மறந்துபோச் சென்று
இங்கிலீஸ்தான் பேசுவேன் என்று
மந்திபோலத் தலைமயிரை வெட்டி
மாப்பிளையை சூட் போடவைத்து
கந்தரம்மான் கலியாண வீட்டில்
கரண்டி முள்ளுதான் பிடித்தாள் இன்று

ஆசிரியரைக் கண்டால் அன்று
அஞ்சியே எடுத்தான் ஓட்டம்
ஆசிரியரைக் கண்டால் பின்னை
அருகினில் நின்றான் தம்பி
ஆசிரியருக்கு "பிறிஸ்டல்" ஒன்று
அன்பாக வேண்டித் தந்தான்
ஆசிரியரைக் கண்டு பின்னே
அரை யடிக்க வாருமென்றான்
ஆசிரியர் படும் அவஸ்தையெல்லாம்
அறிவாயோ நல்லூர்க் கந்தா?

ஆளுக்கு மேல் ஆள் விழுந்து பொங்கை
அடிபடுது சனமேனடி இங்கை
நாளுக்கு கடை கிடை யேதும்
நல்ல படி திறக்கினமோ பாரன்!"

"கூப்பன் கடையணை பாட்டி"
"கூட்ட மேனடி மேனை?"
"மாப் பக்கற் விலை மலிவாக
மாதத்திற் கொன்று தருகினமாம் வேண்டன்!"

அப்புக்குட்டியர் படு கஞ்சன்
ஆளோ பெருத்த தனவந்தன்
செப்புக் குடத்தை தாட்டெல்லோ
சேர்த்தார் பெரிய பொக்கிஷத்தை
எப்படியோ அவர் மட்டுவில்போய்
எட்டிப் பார்த்தார் தன்வீட்டை
குப்பைமேடாய் அது கிடக்கக் கண்டு
குளறிக்கொண்டே உயிர் துறந்தார்
" செப்ரிசீமியா' ' பீடித் தெல்லோ
செத்தாரென்றார் டாக்குத்தர்

– விகடகவி

# பகிடி வதை



பொங்கு தமிழ் கண்டீர்கள்
பொங்கிற்று உள்ளமெல்லாம்
மங்குவது தமிழ்ப் பண்பேயென்றால்
மானம்தான் போகாதன்றோ!
இங்கினிப் பகிடிவதைக்கு என்றும்
இடமில்லை என்றால் மட்டும்
பொங்கிய தமிழ் உணர்வுக்கு
பொருளுண்டு பலனுமுண்டு
"போடடா! தோப்புக்கரணம் நூறு
போதுமினி போத்திலைப் போடு
பாடடா! நீ தூ சனத்தில்
பக்தியாய் பாடல் ஒன்று

ஓடடா! ஓடிச் சென்று
ஒருத்தி முன் விழுந்தெழும்பு”
நாடடா! இது தமிழர் நாடு!
நடத்துவாயோ பகிடிவதை இங்கு?

இளம் தமிழா! உன் எழுச்சி கண்டு
இன்பம் மனதில் எய்தினேன்
பழம் தமிழர் பண்பாடு தன்னை
பாதுகாப்பாய் என எண்ணினேன்
உணர்ச்சி பொங்க மேடை ஏறி
உரத்த தொனியில் முழங்கினாய்
உணர்வு அற்ற ‘பகிடி வதையை’
உன்முன் நடத்த விடுவாயோ?

பேசிப் பேசி காலம் போக்கி
பாழ்பட்ட தெம் மினம்
பேச்சில் என்ன இருக்குதடா
‘ஒலிபரப்பி’ கூடப் பேசுமே
மூச்சு வாங்கப் பேசிவிட்டு
மூண்டு சோடா குடித்தென்ன?
போச்சு போச்சு எங்கள் மானம்
“பகிடி வதையை” போக்க முந்திடு!

கூச்ச நாச்சம் இன்றி நீயும்
குழந்தை போல நடக்கிறாய்
ஆச்சி, அப்பு பேணிக் காத்த
அரிய பண்பு அழியுதே
போச்சு, போச்சு எங்கள் பண்பு
போன தினி வரு மோடா?

*சீச்சி இந்த "பகிடி வதையை"*
*சினந்து விரட்டி ஓட்டுவாய்.*
*காடுகளில் விலங்கினங்கள் கூட*
*கடிந்து பகைப்பதில்லையே!*
*ஆடு, மாடு, கோழி, பன்றி*
*அமைதியாக வாழுதே*
*பட்டம் பெற்றுப் படிப்பில் தேறி*
*பண்பாளனாக வேண்டும் நீ*
*வெட்கம் கெட்ட வேலை பார்த்து*
*வீண் பழியைத் தேடல் நியாயமோ?*

*அடித்திடல் அதட்டல் பின்பு*
*அடிபணிய வைத்தல்*
*இடுப்பினை வளைத்து நின்று*
*இளிச்சவாய்காட்ட வைத்தல்*
*படுத்திட வைத்தல் பின்பு*
*பானத்தைப் பருக்கி நிற்றல்*
*உடுத்ததைக் கழற்ற வைத்தல்*
*ஊறுகள் பலவும் செய்தல்*
*அடுக்குமோ தமிழர் பண்பு*
*ஆகுமோ தமிழர் நீதி?*

# பேசிடாத பெட்டிகள்

பெட்டியில் பிணத்தைக் கிடத்திவிட்டு
பெருநகைமாலை சூடிப்பின்னே
பெட்டியில் கிடக்கும் பிணத்தின் வாயில்
பெரும் சோளம் அரிசி போட்டு
பெட்டிக்கு அருகில் நின்றவாறு
பேருரை வழங்கி நிற்பர்
பெட்டியில் கிடக்கும் பிணமும்
பேசாது கேட்டே கிடக்கும்
பெட்டியினைக் காவிச் செல்ல
பெரும்பறை முழங்கி நிற்கும்
பெட்டியும் சுடுகாடு செல்ல
பிடுங்குவார் நகைகள் ஒன்றாய்
பெட்டியை உடைத்து எறிந்து
பிணத்துடன் எரிப்பர் சேர்த்து

பெட்டியில் வாக்குபோடக் கேட்போர்
பெருத்தபேர் உரைகள் செய்வார்
பெட்டியில் போடும் வாக்கே
பெரும் துயர் களையும் என்பார்
பெட்டிக்கு காவல் காக்க
பெரும்படை திரண்டு நிற்கும்
பெட்டியை எடுத்துச் சென்று
பெரும் வாக்கை கணித்த பின்னே
பெட்டியைத் தூர வீசி விட
பேச்செல்லாம் ஓய்ந்து போகும்
பெட்டிக்குள் வாக்குப் போட்டோர்
பேதலித்துக் காத்திருப்பரன்றோ
பெட்டியில் போட்ட வாக்கின் மேன்மை
பெறுமதியினைப் பேண வாரீர்.

# பல்கலைக்கழகப் பாவையின் பார்வையில்

பாட்டொன்றை எழுதி விட்டு
பரிசில்கள் பெறுவோர் உண்டு
பாட்டு நாலு எழுதிப்பின்னே
சாகித்திய பரிசினை பெறு வோருமுண்டு
பாட்டுகள் கொப்பி பண்ணிவிட்டு
கலாபூஷண மானோருமுண்டு.
பாட்டுக்கள் இரவல் வங்கி
பாடிடும் கவிஞர் உண்டு.
பாட்டுக்கள் நாழுக்கொன்றாய்
பல நூறு பாடியவன்
பாட்டுக்குப் பரிசு வேண்டாமென்று
பகன்ற 'விகடகவி' நீயே அன்றோ?
பாடிய நின் பாக்களுக்கு
பரிசு தரும் பக்குவம் யாருக்குண்டு.
பாட்டினில் விகடம் சொன்ன
பாவலன் வேறெங்கே உண்டு?

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

ஆரபி

# திருவீதி மான்மியம்

காரிகையின் கணவன் மாண்டு
கழிந்தது ஆறு மாதம்
ஊரிலே வாழ்ந்த வாத்தி
உருத்திரா பிரமச்சாரி
ஓரிரு நாள்கள் மட்டும்
உதவினார் "கொண்டா" ஏற்றி
இருவருமே ஓர் "கொண்டா" ஏறி
இடர்பட்டு பயணம் செய்தார்
அருகிருந்து அணைத்து ஓடிடவே
அரும்பியது காதல் மொட்டு
பெருமை சேர் திருமணத்தை செய்த
பெரும் "கொண்டா" நீடு வாழ்க!

படை நடத்தும் அரசன் போட்ட
பண்டைய தலைக் கவசம் தன்னை
கடையினில் வாங்கி வந்து
கவுக்கிறார் தலையின் மீது
இடையிலோர் வாரை பூட்டி
இழுத்ததை நெருடி கட்டி
கடைத்தெருவழியே போக
கைகாட்டி செல்பவரை

அட! இவர் யாரெனக் கூட
அறிந்திட முடியவில்லை
படைவீரர் இவரோ அல்ல
பள்ளி செல்லும் வாத்தியாரோ!

குப்பைகள் கூளம் தன்னை
கொண்டுபோய் கொட்டுதற்கு
இப்பெரு யாழ் நகர் தன்னில்
இடமில்லை என்றுதானோ
ஓப்பெரும் யாழ் இந்து அண்டை
ஓயாது கொட்டுகின்றீர்
தப்பாது கொடுநோய் பற்றி
தாமாக இளைஞர் மாள
எப்படி மனது வந்து
ஈனச் செயலினைச் செய்கின்றீர்கள்?
இப்படி இளைஞர் மாண்டால்
இப்பழி யாரைச் சேரும்.

ஒருவர் மற்று இருவர் மட்டும்
ஒழுக்கமாய் செல்ல என்று
பெருநகர் யப்பான் நாடு
பெருமையாய் செய்து தந்த
அரும்பெரும் 'கொண்டா' 'சுசிக்கி'
அளப்பெரு 'ஜமகா' தன்னில்
ஒரு குடும்பமே ஒன்றாய் ஏறி
ஒரு தொப்பி மட்டும் மாட்டி

தெருவிலே செல்லக் கண்டு
திகைத்தனன் யப்பான் நாட்டான்
பெரும்பேர் அதிர்ச்சி உற்று
பேதலித்து மயங்கி வீழ்ந்தான்.

பந்தய குதிரை போல
பஸ்ஸுடன் மினிபஸ் மோத
அந்தரத்தில் தொங்குவோர்கள்
அடிபட்டு முத்தம் சூட்ட
சந்தியில் பிறேக் அடிக்க
சடுதியாய் அணைந்து கொள்ள
சுந்தர இளைஞர் இங்கு
சுகம் பல கண்டு கொள்ள
மந்திகைச் சந்தி என்று
மாதரசி இறங்கிப் போக
அந்தமில் அழகன் பாவம்
அவளையே பார்த்திருந்தான்.

இடம் பல இருந்துமென
இப் பேருந்தில் ஏற மாட்டார்
நடை கெட்ட கிழடு மட்டும்
நடுங்கியே இதனில் ஏறும்
கட கடத்த மினிபஸ் ஒன்று
கக்கிய புகையோடு நண்ண

அடிபட்டு இதனில் ஏற
ஆனந்தம் மிகவும் கொண்டு
துடியிடை மடவார் அண்டை
துணையென அருகமர்வர்
அட இவர் கொள்ளும் காதல்
ஆறு மாதமும் நிலைப்பதில்லை.

வடக்கே இருந்து ஒருவன்
வந்தனன் "கொண்டா" தன்னில்
அடக்கொணா வேகத்தோடு
அங்கு வந்தது "ஜமகா" ஒன்று
இடப்பக்கமாக "சுசிக்கி" தன்னில்
இளையதோர் நங்கை வந்தாள்
நடக்கொணாத கிழடு ஒன்று
நகர்ந்தது "வெஸ்பா" தன்னில்
கடந்திட சொறிநாய் ஒன்று
கன்னியோ அதன்மேல் மோத
வடகிழக்கிருந்து வந்தோர்
வனிதைமேல் வீழ்துருண்டார்.

ஐந்து பேரை ஏற்றிக் கொண்டு
அங்கொரு "கொண்டா" ஓடும்
முந்தியே இதனை வெல்ல
முன்னொரு "ஜமகா" ஓடும்

பிந்தியே அம்மா ஒன்று
பிள்ளையோடு "சாளி" ஓடும்
நந்தி போல் நடுவனாய் ஓர்
நலிவுற்ற "ஓட்டோ" ஓடும்
வந்ததோர் கொழும்பு "வானும்"
வலம்விட்டு இடமாய் ஓடும்
எந்தையே ஈசா செப்பு
இவை எத்தனை உயிரைக் கொல்லும்?

கண்போன கிழடு பின்னே
கன்னியோ அதற்கு முன்னே
இன்ப நற்குழந்தை தன்னை
இதனிடை சொருகிக் கொண்டு
அன்பு சேர் மனையாள் தன்னை
அதன் முன்னே இருத்திக்கொண்டு
முன்புறம் முழுதுமாக
மூட்டையாய் புத்தகங்கள் ஏற்றி
பண்புசேர் பரமசாமி மாஸ்டர்
பள்ளியை சென்றடைந்து
எண்ணரும் வீதியொழுங்கு பற்றி
எடுத்துரைத்தாற் பேருரைய தொன்று.

கலியாணம் முடித்த மங்கை
காதல்தேன் நிலவு காண
மெலிந்த அக் காதலனோடு
மெய் மறந்து இன்பம் மேவ

பொலிவுற ஏ(9) வீதியாலே
பூவையோ பயணம் போனாள்
நலிவுற்ற கணவன் அந்த
நடுத்தெரு கிடங்கில் வீழ
மெலிந்தவன் முள்எலும்புடைய
மெல்லியவள் கண்ணீர் விட்டாள்
சலித்தவள் புலம்பி நின்றாள்
சரச லீலைக்கு என் செய்வாளோ?

சங்கரன் தன் பாட்டியந்த
சரசாச்சி தன்னை ஏற்றி
இங்கிதமாய் "கொண்டா" தன்னில்
இணுவையூர் கோயில் சென்றான்
அங்கந்த தெருக் குழியதனில்
அவன் வந்த "கொண்டா" வீழ
சங்கரன் பாட்டி சாய்ந்து வீழ
செங்குருதியோடி சிவந்தது இணுவையூரும்
ஐங்கரன் அடியாள் பாட்டி
அடைந்தனள் கயிலை அன்றே
இங்கிந்த கொடுமை எல்லாம்
இத்தெரு நிலையாலன்றோ?

வந்த பேருந்தில் மக்கள்
வாசலில் நெருங்கி நிற்க
சுந்தர தமிழ் மாதொருத்தி
துணையின்றி உள் நுழைய
மந்தி போல் நின்ற வம்பன்

மாதினை பின்னால் தீண்ட
அந்தமில் அழகி மெல்ல
அங்கொரு ஊசி கொண்டு
நிந்தனை செய்தான் பின்னே
நெருடினாள் அவ் ஊசியாலே
நொந்ததால் மிகவும் மூடன்
நோ தாங்காது கதறலுற்றான்.

தம்பையர் மர மஞ்சள் வாங்கி
தனித்ததை இடித்து காய்ச்சி
தாம் போகும் மினி பஸ்ஸில் நாளும்
தவறாது எடுத்துச் செல்வார்
செம்மையாக மினிபஸ் மோதில்
சிறப்பாக அதனை மொண்டால்
கம்பி குத்தி வரும் ஏற்பை
கடிதினில் போக்கு வாராம்
இம்மண்ணில் இவரைப் போல
எல்லோரும் செய்வாராகில்
செம்மையாய் ஏற்பு இன்றி
செகத்தினில் வாழலாமே.



"அகடம் விகடம் அனைத்திலும் "மகுடம்"
திகழும் நின்நாமம் திருவின் உதயம்
கரு உருப்பெற்றுப் பிறந்த நின் கவிதை
கவிஞனாய் ஆக்கிய கல்வியின் மேன்மை
நாட்டு நடப்பில் நாளொரு பார்வை
நாளிதழ் தனில் நின் நகைச்சுவைக் கோர்வை
செந்தமிழ் இனிக்கச் சேர்ந்த வெல்லமாய்
சுந்தரக் கவியே! சுடராய் ஒளிர்க."

தேவி–கணேஸ்
அளவெட்டி

ISBN 955542680-5
9789555426800
பதிப்பு : பாரதி பதிப்பகம். தொ.பேசி: 021 222 3081